Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් 17-23, 2002

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 451

## ரணில் + பிரபா அடுத்த கட்டம் என்ன?


## சாதாரணனின் கடிதம்



## கமல்-சரிகா விவாகரத்து

# ஆன்மீகம்

## மண்ணறையும் மனிதா நிலையும்



அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்த ஓர் மனிதர் மௌத்தாகி மண்ணறையில் வைக்கப்பட்டு விட்டால், அந்தக் "கப்ரு" அறை உனது வரவு நல்வரவாகுக! நீ இங்கு வந்தது மிக நல்ல தாயிற்று என்று கூறி,

மரணித்து மண்ணறையில் வைக்கப்பட்ட அம் மனிதர்க்காக சுவர்க்கத்தின் வாயிலொன்று திறந்து கொள்கிறது. அதிலிருந்து சுகந்த மணம் பரப்பும் காற்று அவ் நல்லடியானுக்காக வீச ஆரம்பிக்கிறது.

யாரேனும் கெட்ட மனிதர் மரணித்து கப்ரில் வைக்கப்பட்டு விட்டால் உனது வரவால் உனக்குக் கேடு உண்டாகட்டும். இன்று நீ என்னிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டாய் என்று கூறி,

அம் மனிதனுடைய இரு பக்க விலா எலும்புகளும் ஒன்றுக்குள் ஒன்று செருகிக்கொள்ளுமளவில் அவனை அந்தக் கப்ரு நெருக்கி வேதனைக்குள்ளாக்கிறது.

**ஆதாரம்: தர்கீப்**

மரணித்த ஒருவருக்கு "கப்ரு" சுவர்க்கத்தின் பூங்காவாக இருக்கும் அல்லது நரகத்தின் படுகுழியாக இருக்கும்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## தியானத்தினால் ஆத்மா தூய்மை

தியானம், புத்தியால் இறைவனோடு இணைந்திருப்பது; மேலும், இறைவனிடம் ஆன்மீகத் தோழமையுடன் இருக்கச் செய்வது. ஆகவே, இந்தத் தெய்வீகத் தொடர்பால் ஆன்மா தூய்மையும், ஆன்மீகத் தன்மையும் பெறுகிறது. தூய்மையிலும் தூய்மையான இறைவனின் நட்பு புனிதத் தன்மை பெறச் செய்கிறது. பழைய பழக்கவழக்க, குண சுபாவங்கள் எப்போதோ ஒரு சமயம் தோன்றினாலும், நாளடைவில் புத்தி இறைவனிடத்தில் இணைந்திருப்பதால் மறைந்து போகும். மொத்தத்தில் மனிதனின் புத்தி யோகத்தால் இறைவனோடு இணைந்திருப்பதால் காம, குரோத, லோப, மோக. அகங்காரம் மற்றும் இது போன்ற பிற தீய குணங்கள் மீதும் வெற்றிகொள்ளச் செய்கிறது. கடைசியில் விகாரம் முற்றிலுமாக விலகுகிறது. எனவே, யோகி இறைவனின் உற்ற நண்பனாகவும், தீயவைகளின் பரம எதிரியாகவும் மாறுகிறார். யோக அக்கினி மிகச்சக்தி வாய்ந்ததாகையால் ஆழப்படிந்த தீய சுபாவங்களின் வேர்கள் அறுக்கப்பட்டு எரிக்கப்படுகிறது. இருந்த இடம் தெரியாததாகி ஆன்மா பிரகாசமுற்று ஜொலிக்கிறது. தியானம் சுறுசுறுப்புடனும், திறமையுடனும் மற்றும் கவனமாகவும் இருக்கச் செய்கிறது. மனம் சுலபமாக, விரைவாக ஒரு நிலைப்படுவதால் திறமை வெகுவாகக் கூடுகிறது. ஒரு நீண்ட கண்ணோட்டத்துடன் துல்லியமாகத் திட்டமிட்டு, செயலின் மனோதிடத்துடன் இறங்குவார். ஆகவே, வெற்றி அடைகிறார். தோல்வியைக் கண்டு கலங்க மாட்டார்.

ஓம் சாந்தி

பி.கு.விக்கி, களுவாஞ்சிக்குடி.

## கர்த்தரின் ஆசீர்வாதம்

ஆதியிலே கர்த்தர் முதலில் பெற்றோரைப் படைத்து, அவர்கள் பாவக்கனியை உண்டு மரணத்தைச் சம்பளமாக வாங்கிய போது கர்த்தர் மீட்பரை அனுப்பி பாவத்திலிருந்து எங்கள் சந்ததியினரையும் பெருகப் பண்ணினார். எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். நாங்கள் எவ்வளவு பெரிய பாவம் செய்தாலும் மீட்பர் எங்களை மன்னித்து விடுவதும், எங்களைக் கர்த்தரின் ஆட்சியில் சேர்க்க மகிழ்ச்சியாக இருக்கின்றார். நாங்கள் எங்கள் பாவங்களை விட்டு கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெறுவோம். "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புரிகிறதாலேயே மறு உருவமாகிறீர்கள்"

**(றோமர் 12:2)**

பி.அ.ஸ்டாலின், குருநகர், யாழ்ப்பாணம்.

# கவிதைப் போட்டி இல.448

**பரிசுக்குரிய கவிதை**

### மொத்தமான உவமானம்

உள்ளே அழுக்கு
உடல் வெளுப்பு;
உதட்டில் உறவு
உள்ளகத்தே பகை;
நயமாய் உறவாடல்
நஞ்சூட்டும் முழுநோக்கம்;
அத்தனைக்கும்
மொத்தமான உவமானம்!

செல்வி.ம.பூபாலரட்ணம்,
மட்டக்களப்பு.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### தேவை தானா?

பணம் கொடுத்து புகைபிடித்து
ஆண்மை இழந்து ஆளுமை இழந்து
தனக்குத் தானே இடும் கொள்ளி
உலகிற்குத் தேவையா இது?

எஸ்.கண்ணாளன், மன்னார்.

### எச்சரிக்கை

வெள்ளையன் தந்த வெண்சுருட்டை
வாயில் வைத்தூதாதீர்
ஊத ஊத விரைவில்
ஊதிவிடும் உங்களுயிரை!

அ.சந்தியாகோ, கண்டி.



### அவசியம்

கொள்ளி வைப்பாய்
எனத் தெரிந்தும்
உனைத் தள்ளி
வைக்க முடியாமல்
தவிக்கும் ஆயிரம்
கோடி உறவுகளுக்கு
நீ அவசியம் தான்!

துரைராஜா
பரிமளாதேவி, கலஹா.

### எப்படி முடிகிறது?

எத்தனையோ
அடுப்பங்கரைகள்
புகையவில்லை
ஆனால்,
நீ மட்டும்
நிம்மதியாய் புகைகிறாயே!
உன்னால் மட்டும்
அது எப்படி முடிகிறது?

பி.தயாளினி, கொழும்பு-13.

### நீ (ஒ)அழிந்தே போ...

வாழ வேண்டிய
தலைமுறைகள்!
வெள்ளைக்குச்சே...
உனக்கு - விரலிடுக்குகளில்
அடைக்கலமளித்து...
ஊதியத்தை...
ஊதியழித்து(தே)!
பாதியிலேயே
கருகிப் போகின்றன!

மும்தாஜ் ஏ.முத்தாலிஃப்,
அனுராதபுரம்.

### உண்மைகள் உறங்காதபோது

பல ரணங்களை மறக்க எண்ணி
சில கணங்கள் உன்னை உறவாக்கினேன்!
கசியத்தொடங்கியது மெல்ல-கடந்த
காலத்து காதல் கதைகள் அல்ல!-என்
இதயத்தில் இருந்து இரத்தமே!

சீனிராசா எடிசன், கொழும்பு-12.

### பேய்!

ஒய்யாரமாய் உதட்டில்
ஒட்டிக்கொள்ளும் தீ!
உன்னை அறியாமலே உன்
உயிரைத் தட்டிப் பறிக்கும் பேய்!

ஜெ.உதயணன், எழுதுமட்டுவாள்.

### எச்சரிக்கை!

எம்மில் ஒருவனுக்கு
நீ வைத்தால் தீ
உன்னில் பலருக்கு
வைப்போம் நோய்!

க.யோகேஸ்வரன்,
கஹகல்லையூர்.

# கவிதைப் போட்டி இல.451



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.03.2002

கவிதைப் போட்டி இல.451
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### சேமக்குழி!

தேசப் பொருளாதாரம்
சீரும் சிறப்புமுற
புகையிலைச் செடிக்கு
இளமையெல்லாம் பறிகொடுத்து
சேமக்குழிக்குச்
சென்றடைவோம் நாமெல்லாம்!

சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### கொலைகாரன் + எதிரி

சந்தை விலையில் வீழாச் சண்டியன்
கூண்டில் நிற்கா குற்றவாளி
சாகும்வரை தூக்கிலிடப்பட
வேண்டிய கொலைகாரன்
புண்பட்ட மனங்களின் நண்பன்
பொன்னான வாலிபத்தின் எதிரி

அஸ்ரின் அனீபா, மாளிகாவத்தை.

# வாசக(ர்) சாலை

### என்னிதயத்தைத் திருடிச் சென்றவளே!

என் இனிய முரசே!

நானும் உன் வாசகர்களில் ஒருத்தி. உன் கண்கள் இன்று என் கண்களில் பார்வையைத் தூண்டின. அதனால் இன்று உன் வரவினை வழி மேல் விழிவைத்துக் காத்து நிற்கிறேன். என் கைகளில் தவழ்ந்து என் மனதைக் கொள்ளை கொள்ள விரைந்து வந்துவிடு. உன்னைக் காணும் போது தான் என்னுடலில் உணர்வுகள் தோன்றுகின்றது. கரையில் பிடித்துப் போட்ட மீன் நீரைத் தேடித் தவிப்பது போல், நான் உன்னிடம் என் மனதைத் தொலைத்து விட்டு உன் வரவை எதிர்பார்த்துத் தவிக்கிறேன்.

வந்துவிடு முரசே!
விரைவினில் வந்துவிடு!

கே.எஸ்.கலா, முகத்துவாரம், மட்டக்களப்பு.

முக்கனிகளைச் சுவைத்தால் தான் தித்திக்கும். என்னவளைக் கண்டால் இனிமையாக இருக்கும். ஆனால், எந்நேரமும் உன் நினைவாகவே இருக்கிறேனே! என் தினமுரசே! உப்பு இல்லாமல் என்னால் சாப்பிட முடியும். ஆனால், உன்னை வாரமொருமுறை பார்க்காமல் என்னால் இருக்க முடியாது.

கே.றவி, நிந்தாவூர்-02.

தித்திக்கும் முரசே!

வியாழன் தோறும் தெவிட்டாத, தித்திக்கும் அம்சங்களுடன் எம் கரங்களில் தவழும் தினமுரசே! நீ தரும் அத்தனை அம்சங்களும் வெரி...வெரி...பைன். உன் சேவை மென்மேலும் வளர வேண்டும். அதில் வாசகர்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் என்று உன்னை வாழ்த்தி விடைபெறும் இவன் என்றும் உன் பிரியமான வாசகன்,



அப்துல் கையும்(எம்.எஸ்), காத்தான்குடி-03.

முரசு ஆசிரியருக்கு,

எனது இதய சுத்தியுடன் இனிய தமிழ் வணக்கம்! தமிழுக்கு தனியிடமும், தரத்திற்கு முதலிடமும் கொடுத்து உலாவரும் தமிழோடு,தமிழர்கள் மட்டுமல்ல, தமிழ் பேசும ஏனைய சமூகத்தினரும் விரும்பிப்படிக்கும் சுவை ஏடு; முரசு! முற்றுமுழுதான உண்மை. வாசகர்கள் வரவேற்புக்காகவும், அவர்களது மகிழ்ச்சிக்காகவும் வேறெந்தப் பத்திரி கைகளை விட முரசில் பல பரிசில் திட்டங்களையும் வைத்துள்ளீர்கள். பாராட்டுக்கள்.

சேனையூர் அ. அங்கயக்கண்ணி.

எத்தனை இனிமையுண்டோ அவை அத்தனையும் அலங்கரிக்க, வாரமொரு முறை எம் கையிற் பவனிவரும் இனிய வார முரசே!

நீ எத்தனை இடித்துரைத்தும் செவி ஏறா நிலையில்

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்" என்ற வள்ளுவனின் தீர்க்க தரிசனம் இன்று பலித்துள்ளதல்லவோ?

இனியாவது நல்லதை எடுத்துரைக்கும் குணமுள்ளோரைக் கூட்டி; நல்லன செய்தால் பேரும் புகழும் தேடி வரும். சுபீட்சம் மலரும் மக்கள் மனம் குளிரும்; நாடு சிறக்கும்.

இத்தனையும் எதிர்பார்க்கும் மக்களுக்கு இனியவை செய்ய முன் வரவேண்டியது அரசியலார் தலையாய கடன். தொடர்க உன் பணி!

நயினையூரான், திருமலை.

முரசே! நீ தினம் தினம் வந்து என் கரம் சேர மாட்டாயா? நீ வரும் திசை பார்த்துப் பார்த்து நீ வந்து சேர்ந்தபின் அந்த காத்திருப்புக் கூட ஏதோ சுகமாய் தோன்றுகிறதே ஆகவே தமிழ் மனங்கள் தமிழ்ச்சொற்களை, எழுத்துக்களைச் சரியாகப் பார்க்க வேண்டுமெனில் நீ எம்மை வந்து சேரவேண்டும். என்றும் வாழ்த்தும் இவன்,

க.கோகுலதாஸ், வவுனியா.

என் முத்தமிழ் முரசே!

உனக்கு எத்தனை கோடி வாழ்த்துக்கள் சொன்னாலும் உன் தூய்மையான சேவைக்கு ஒரு போதும் ஈடாகாது. நீ சுமந்து வரும் ஒவ்வொரு பக்கங்களையும் புரட்டிப் புரட்டினாலும் இன்னும் புரட்ட வேண்டும் எனும் ஓர் ஆசையே! உன் பக்கங்களில் தேன்கிண்ணம், தகவல்பெட்டி, சிறு கதைகள், நில்கவனிமுன்னேறு, அரசியல் இவைகள் அனைத்துமே சுவாரசியமாக உள்ளன. உன் சேவை பலருக்கும் தேவைபோல் இன்னும் ஒளிமயமாக வாழ்த்தும் இவள்,

ஜெ. லக்கி, பெரிய கல்லாறு.

என்னிதயம் நிறைந்த முத்தான முரசுக்கு என் பல கோடி வந்தனங்கள்!

வாரத்திற்றொரு முறை வசந்தங்கள் சுமந்து வரும் உன் ஆக்கங்கள் அத்தனையும் பிரமாதம். உன் புகழ் கூற இந்த ஓரிரு வார்த்தைகள் போதாது. அனைத்தையும் விட தேன்கிண்ணம் பகுதி என் மனதைக் கவர்ந்தது. என்றும் உன் புகழ் ஓங்க என் இதயபூர்வமான வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகுக!

என்றும் ப்ரியமுடன்,

எம்.ஐ.ஷராப்தீன்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# உங்கள் பக்கம்

## அரசியல் கைதிகளுக்குச் செய்யும் பேருதவி

தங்களது விடுதலையைத் துரிதப்படுத்துமாறு கோரி களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் கடந்த வாரம் உண்ணாவிரதம் இருந்தமை யாவரும் அறிந்ததே.

தமது சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தின் போது இந்தக் கைதிகள் கூறிய ஒரு விடயம் மிகுந்த அவதானத்துடன் கருத்தில் கொள்ளத் தக்கது.

தமிழ்க் கட்சி கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் தங்களை வந்து பார்க்கக்கூடாதென கைதிகள் வினயமாகக் கேட்டிருந்தனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் எமது மக்கள் பிரதிநிதிகள் விடயத்தில் எந்தளவு நம்பிக்கை இழந்து காணப்படுகிறார்கள் என்பதை அறிய இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

பொதுவாக சிறையில் இருப்பவர்களின் மனநிலை தங்களை யாரேனும் வந்து பார்க்கவேண்டும் என்பதாகத்தான் இருக்கும். ஆனால். தங்களை வந்து பார்க்க வேண்டாம் என குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு தமிழ்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் வெறுப்புக்கும் கோபத்துக்கும் ஆளாகி இருக்கிறார்கள்.

இந்த நிலை ஏன் ஏற்பட்டது? கடந்த காலங்களில் வெறுமனே போய் சிறைச்சாலை ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துவிட்டு வந்து பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்து பிழைப்பு நடத்தும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினரின் செயலே கைதிகளை இந்தளவு தூரம் வெறுப்பேரச் செய்திருக்கிறது.

தேர்தல் காலங்களின்போது அரசியல் கைதிகளை விடுவிக்க ஏதேதோ வெல்லாம் செய்வோம் என வாக்குறுதி அளிப்பவர்கள் அதன் பின்னர் அறிக்கை விடுவதைத் தவிர வேறெதனையும் செய்வதில்லை. வெறுமனே பத்திரிகை அறிக்கையை கொடுத்து விட்டாலோ பாராளுமன்றத்துக்குச் சென்று நீளிக் கண்ணர் வடித்துவிட்டாலோ கைதிகளுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்து விட்டோம் என்ற திருப்தி இந்த அரசியல் வாதிகளுக்கு கிடைக்கிறதோ என்று சந்தேகிக்கவேண்டியுள்ளது.

இப்போது உண்ணாவிரதம் கைவிடப்பட்டிருக்கிறது. அது புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவின் முயற்சியினாலேயே கைவிடப்பட்டது என்பதை யாவரும் அறிவர். இதையும் தாங்கள் தான் செய்து சாதனை படைத்ததாக தமிழ்க்கட்சி கூட்ட மைப்பினர் உரிமை கோரி அறிக்கை விடாமல் இருப்பதே அந்த அப்பாவிக் கைதிகளுக்குச் செய்யும் தற்காலிக பேருபகாரமாக இருக்கும்.

ரி. சதாரூபன், முள்ளியவலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# புலிகள் போர் நிறுத்தத்தை மீறி செயற்பட்டால் தமிழ் சமூகமே பாதிக்கப்படும் - அமெரிக்கா

## தங்கள் மீதான சகல குற்றச்சாட்டுக்களையும் புலிகள் நிராகரிப்பு

அரசாங்கத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையில் விடுதலைப் புலிகள் செயற்பட்டுவருவதாக அமெரிக்க அரசாங்கம் குற்றம் சாட்டியிருக்கும் அதேவேளை போர் நிறுத்த உடன்படிக்கையை மதித்து நடக்குமாறு தமது உறுப்பினர்களுக்கு தலைமைப் பீடம் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய் அன்று கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத்த அறிக்கையில், புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி ஆட் கடத்தல், ஆயுத சேகரிப்பு, கப்பம் பெறுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இவற்றை தவிர்த்து யுத்த நிறுத்த உடன்படிக்கையை மதித்து செயற்படுமாறும் கடுமையான தொனியில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்தக் குற்றச் சாட்டுக்களுக்கு உடனடியாக பதிலளித்த புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் இவற்றை முற்றாக மறுத்ததோடு போர் நிறுத்த விதிகளை மீறி செயற்படும் தமது இயக்க உறுப்பினர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறியிருந்தார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நோர்வேயின் ஏற்பாட்டில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் சர்வதேச சமூகத்திடமிருந்து புலிகளுக்கு விடுக்கப்பட்ட கடுமையான எச்சரிக்கையாக அமெரிக்காவின் அறிக்கை கருதப்படுகின்றது.

நோர்வே தனது போர் நிறுத்த கண்காணிப்புப் பணியை ஆரம்பித்துள்ள சூட்டோடு இத்தகையதொரு அறிக்கையை அமெரிக்கா வெளியிட்டது குறித்து அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கொழும்புக்கான வாஷிங்டன் தூதுவர் ஆஷ்லி வில்ஸினால் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் அண்மையில் கைச்சாத்திடப் பட்ட காலவரையறையற்ற போர் நிறுத்த உடன்படிக்கை பாதிக்கப்படும் விதத்தில் புலிகள் செயற்பட்டு வருவதாக எமக்கு நம்பகமான தகவல் கிடைத்திருக்கிறது.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சிறுவர்கள் உட்பட பொதுமக்களைக் கடத்திச் செல்வது குறிப்பாக முஸ்லிம்களை கடத்துவதும் அவர்களிடமிருந்து கப்பம் பெறுவதுமான சம்பவங்கள் குறித்து அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இத்தகைய சம்பவங்கள் கடந்த நாட்களில் சற்று குறைந்திருப்பதாகவும் அறியக் கிடைக்கின்றது. இது மேலும் குறையுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த தன் பின்னர் புலிகள் தமது நடவடிக்கைகளுக்கான தயாரிப்புக்களில் ஈடுபடுவதாக எமக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன.

புலிகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆயுதங்களை களவாக தரையிறக்கும் செயற்பாட்டினால் போர் நிறுத்தத்தில் இருந்து சமாதான பேச்சுவார்த்தை வரையிலான பயணத்திற்கு தேவையான நம்பிக்கை சிதைவடைய வாய்ப்பிருக்கிறது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் புலிகளுக்கு மாத்திரமன்றி இரு தரப்பிற்கும் பொறுப்புகள் சாட்டப்பட்டிருப்பதை அமெரிக்க அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது. எவ்வாறெனினும் உலகில் பல நாடுகளால் பயங்கரவாதம் நிராகரிக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் புலிகள் இயக்கம் போர் நிறுத்த நிபந்தனைகளை துல்லியமாக கடைப் பிடிப்பதில் மிகக் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறில்லையாயின் புலிகள் சர்வதேச ரீதியில் மேலும் தனிமைப்பட நேரிடும். அதன் மூலம் அந்த அமைப்பு பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறும் இலங்கையின் தமிழ் சமூகத் திற்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். இந்த மக்கள் போரின் முடிவைக் காண மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறார்கள்.

மறுபுறத்தில் புலிகள் சமாதான பாதையை தேர்ந்தெடுத்துள்ளார்களாயின் பயங்கரவாதத்தின்மீதான நம்பிக்கையை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளார்களாயின், சுதந்திர ஈழம் என்பது பெற்றுக்கொள்ள முடியாத தேவையற்ற ஒன்றென கருதுவார்களாயின் ஜனநாயக மனிதாபிமான குணாம்சங்களுக்கு மதிப்பளிப்பார்களாயின் அமெரிக்கா அனுகூலமாக பதிலளிக்கும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை பயன்படுத்தி யுத்தத்திற்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண நோர்வே அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு அரசாங்கத்தையும் புலிகளையும் நாம் கேட்டுக் கொள்கிறோமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## அவமானத்தில் தற்கொலை முயற்சி

கல்முனை பஸ்தரிப்பிடத்தில் வைத்து டாக்டர் ஒருவரது புதல்வி புலிகள் இயக்கத்தின் பிரதேச பொறுப்பாளர் ஒருவரினால் இம்சைக்குள்ளாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அந்த யுவதி அவமானத்தினால் தற்கொலை செய்துகொள்வதற்காக நஞ்சு அருந்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

கடந்த செவ்வாயன்று நண்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தின்போது குறிப்பிட்ட நபர் இந்த யுவதியின் ஆடைகளை வெட்டிக் கிழித்த தாகவும் பகிரங்கத்தில் நடந்த இந்த சம்பவத்தினால் அவமானமும் ஆத்திரமும் அடைந்த யுவதி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாக தெரி விக்கப்படுகின்றது. ●

## ஒரு கையொப்பத்திற்கு ஆயிரம் ரூபா!

கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திற்குச் செல்லும் பாதை நெடுகிலும் நின்று கொண்டிருக்கும் சமாதான நீதிவான்கள் கடவுச் சீட்டு விண்ணப்பபடிவங்கள் நிரப்பிக் கொடுத்து சிபார்சுக் கையெழுத்தும் இட்டு ஒவ்வொரு வரிடமிருந்தும் சுமார் ஆயிரம் ரூபாவரை அநியாயமாகப் பெறுவதாகப் பொது மக்கள் கூறுகின்றனர்.

முன்பின் தெரியாதவர்களே பெரும்பாலானோர் துரிதமாகப் பாஸ்போர்ட் எடுப்பதற்காக கடவுச் சீட்டுக் காரியாலயத்திற்குப் படையெடுக்கின்றனர்.

சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சமாதான நீதவான்கள் எதுவுமே தெரியாதவர்கள் என்றால் ஆயிரம் ரூபா வரையிலும், கொஞ்சம் விஷயம் தெரிந்தவர்கள் என்றால் ஆயிரம் ரூபாவிற்குக் குறைந்த தொகையும் அபகரிக்கின்றனர். ●

## முகாம் புனரமைப்பு

கிழக்கில் சீருடைத்தரப்பு மிகுந்த எச்சரிக்கையோடும் கவனத்தோடுமே செயற்பட்டு வருவதைக் காணமுடிகிறது. கட்டுப்பாடற்ற காட்டுப் பகுதியில் இடம்பெற்றுவரும் பலப்படுத்தல் மற்றும் வேறு வகையான ஆயத்தப் படுத்தல்களையும் அறிந்துள்ள சீருடைத் தரப்பார் தமது முகாம்களைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

என்றுமில்லாதளவுக்கு இந்த முகாம்கள் பலப்படுத்தப்படுவதுடன் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து கிடைக்கும் தகவல்களே படையினரை இந்தளவுக்கு உஷாருடன் இருக்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. ●

## சொன்னதைச் செய்கிறார்கள்

தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் சொன்னதைக் கேட்டு சிறந்த முறையில் செயற்படுவதாக புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆயுதங்களைக் கொண்டிருக்கும் மாற்று இயக்கங்கள் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் குழப்பும் விதத்தில் நடந்து கொள்வதாக கரிகாலன் குற்றம் சாட்டியிருக்கிறார். ■

## வரவு-செலவு திட்ட விவாதத்தில் ஜனாதிபதியும் பங்கேற்பு?

எதிர்வரும் 22ம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவு திட்ட விவாதத்தின் போது ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் பாராளுமன்றத்திற்கு சமுகமளிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்புமீதான விவாதம் 23ம் திகதியில் இருந்து 30ம் திகதிவரையிலும் அதன்மீதான குழு நிலை விவாதம் ஏப்ரல் 1ம் திகதியில் இருந்து 10ம் திகதி வரையிலும் நடைபெற இருக்கிறது. இந்த நாட்களில் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு வரவிருப்பதாக அவரது செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசியல் அமைப்பின் 32 (3)ம் பிரிவின்படி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்திற்கு வரவும் அங்கு உரையாற்றவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் விவாத முடிவுகளின்போது வாக்களிக்க முடியாது. இதன்படி வரவு செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொள்ள ஜனாதிபதிக்கு தடை எதுவும் இல்லாத போதிலும் அவர் பாராளுமன்றத்தில் எந்த ஆசனத்தில் அமர்வது என்பது தொடர்பில் பிரச்சனை தோன்றி இருக்கிறது.

கடந்த பொது.ஐ.முன்னணி அரசின் காலத்தில் பாராளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்துவைப்பதைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி அங்கு சமுகமளித்த போது பிரதமரின் ஆசனத்தில் அமர்ந்தார். ஆனால் தற்போது பிரதமர் வேறொரு கட்சியை சேர்ந்தவர் ஆதலால் இந்த நடைமுறை சாத்தியமாவதில் சிக்கல்கள் தோன்றலாமென பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவர் ஆதலால் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி ஆசனத்தில் அமர்வதும் சட்ட ரீதியிலான சிக்கல்கள் இருப்பதாக அரசியல் அமைப்பு நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ■

## பிரதமர் யாழ் விஜயம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெள்ளியன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அங்கு பொதுமக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் இராணுவ உயரதிகாரிகளையும் சந்தித்து பிரதமர் உரையாட இருக்கிறார். மிக நீண்டகாலத்துக்குப் பின்னர் அரசாங்க உயர் மட்டத் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணம் செல்லவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ■

## துப்பாக்கிச் சூடு - ஒருவர் காயம்!

மட்டக்களப்பு புதிய கல்முனைவீதி சுற்றுவட்டமருகில் உள்ள மதுபான சாலையில் ஞாயிறன்று இரவு மது அருந்திவிட்டு பணம் கொடுக்காமல் செல்ல முற்பட்ட இருவருக்கும் கடை ஊழியர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டினால் கடை ஊழியர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

மது அருந்திவிட்டு பணம் கொடுக்காமல் செல்ல முயன்ற இருவரையும் ஊழியர் தடுத்து நிறுத்த முயற்சித்தபோது தம்வசம் இருந்த கைத்துப்பாக்கியினால் சுட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த இருவரும் சிவில் உடையில் காணப்பட்டதாகவும் துப்பாக்கிகளை வைத்திருந்ததாகவும் நன்கு சிங்கள மொழியில் கதைத்ததாகவும் இந்த சம்பவம் தொடர்பான சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அன்னை பூபதிக்கு சிலை அமைக்க மட்டு. நகரில் நிதி சேகரிப்பு!

உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதிக்கு மட்டக்களப்பில் சிலை எழுப்புவதற்காக அங்கு செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து தலா மூவாயிரம் ரூபா கோரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் சகல சிறிய பெரிய தொண்டர் நிறுவனங்களும் கட்டாயம் இந்தப் பணத்தைச் செலுத்த வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளதாம்.

ஏற்கெனவே மட்டக்களப்பில் பெப்ரவரி 30ம் திகதி இடம் பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுக்காக சுவரொட்டிகள் அச்சடித்த செலவாக ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் தலா 500 ரூபா அறவிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் சுமார் 66 அரச சார்பற்ற உதவி நிறுவனங்கள் அங்கத்துவம் வகிக்கின்றன.

மிக வறிய நிலையிலும் அதே வேளை முற்றிலும் தொண்டு அடிப்படையிலும் செயற்பட்டு வரும் நிறுவனங்கள் புதிய நிதி வசூலிப்பு நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பல சிறிய நிறுவனங்கள் ஒன்றியத்திலிருந்து விலகி பொதுப்பணியை நிறுத்திக் கொள்வதற்கு உத்தேசித்து வருகின்றனர். ■

## அபிவிருத்திக் குழக்கள்

கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடுள்ள மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் புலிகள் கிராமிய அபிவிருத்திக் குழுக்கள் என்ற பெயரில் குழுக்களை அமைத்து வருகின்றனர்.

கிராமிய அபிவிருத்திக் குழுக்கள் என்ற பெயரில் இந்தக் குழுக்கள் இயங்கும் என்று கூறப்பட்டுள்ள போதும் அது முற்று முழுவதுமாக இயக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே தயார் படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கிழக்கு முஸ்லிம்களின் உடனடித்தேவை புனித பிரதேசமா...?

கல்முனை நகரத்தைப் புனிதப் பிரதேசமாக்கப்போவதாக அமைச்சர் றவூப் ஹக்கீமும் இன்னும் சில ஸ்ரீ.ல.மு.கா.வின் எம்.பிக்களும் கூறிவருகின்றனர்.

வடகிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இன்று பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள முஸ்லிம் சமூகத்திற்கு புனிதப் பிரதேசமாக்கும் திட்டம்தானா உடனடித் தேவை என்ற கேள்வி முஸ்லிம் சமூக அறிவியலாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இன்று முஸ்லிம் சமூகத்திற்காக நிறைவேற்றப்படவேண்டிய பல முக்கிய தேவைகள் உள்ளன. வடக்கு கிழக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அகதிகளாகியிருக்கின்றார்கள். இதைவிட தற்போது கிழக்கிலே முஸ்லிம்களின் இருப்புக்குப் பல சவால்கள் தோன்றியிருக்கின்றன.

இவையெல்லாவற்றுக்கும் உருப்படியான தீர்வுகளை முன்வைக்கவில்லை, சர்வதேச சமூகத்தினால் இன்று சமாதான முன் முயற்சிகள் எடுக்கப்படுகின்ற இவ்வேளையில் முஸ்லிம்களின் பிரச்சனைகளை சர்வதேச சமூகத்தின் முன் எடுத்துச் செல்வதில் அக்கறை காட்டாது புனிதப் பிரதேச அபிவிருத்தி பற்றிக் கூறுவது சிறுபிள்ளைத் தனமானது என விசனம் தெரிவிக்கப்படுகிறது. புனிதம் என்பது பிரதேசங்களை மாத்திரம் பிரகடனப்படுத்துவதால் ஏற்படப்போவதில்லை என்று கிழக்கில் முத்த முஸ்லிம் அறிஞர் ஒருவர் தெரிவித்தார்.

## மறுப்பு!

டெங்கு ஒழிப்பில் மட்டக்களப்பு சுகாதாரப் பிரிவினர் கவனயீனமாக இருக்கிறார்கள் என கடந்த வாரம் முரசில் வெளியான செய்திக்கு விளக்கமளித்திருக்கும் மாகாண சுகாதார சேவைகள் பிரதிபணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகம் தாங்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு மலத்தீன் மருந்து உட்பட உபகரணங்களை வழங்கி பலவகையிலும் உதவியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# முரசம்

## பாலஸ்தீனத்தின் பரிதாபம் மத்தியஸ்துவத்தின் மௌனம்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

பாலஸ்தீனப் பிரச்சினை இன்று மீண்டும் பாரிய இரத்தக் களரியாக உருவெடுத்து அங்கு ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அர்த்தமற்றதாக்கி விட்டுள்ளது.

முன்பு பயங்கரவாதியாகச் சித்திரிக்கப்பட்ட பின்பு சமாதானத் தீர்வுக்கு மிகுந்த விட்டுக்கொடுப்புடன் ஒத்துழைத்த சமாதானத் தலைவரென மேலை நாடுகளாலேயே மெச்சப்பட்ட பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் இப்போது இஸ்ரேலின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கும், பாலஸ்தீன தீவிரவாதிகளின் கட்டுமீறிய செயற்பாடுகளுக்கும் மத்தியில் கையறு நிலையில் விடப்பட்டுள்ளார். நீண்ட காலமாக சொந்த நாட்டை விட்டு வெளியேறி அயல் நாடுகளில் தலைமுறைகளாக அகதிவாழ்க்கையே அனுபவித்துவந்த பாலஸ்தீன மக்களின் அவல நிலை கருதி தாம் முன்வைத்திருந்த பாலஸ்தீனத்துக்கான விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு, சர்வதேச மத்தியஸ்துவத்தை நம்பி இஸ்ரேலுடன் ஒரு இணக்கத் தீர்வுக்கு வந்த யசீர் அரபாத், அந்த இணக்கத் தீர்வின் அம்சங்களை நிறைவேற்ற இஸ்ரேல் பின்னடித்தும் சாக்குப் போக்குச் சொல்லி வந்ததுமான நிலைமையில் பாலஸ்தீனத் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியாதவராக இருக்க, மறுபுறம் அதே தீவிரவாதத்தைக் காரணம்காட்டி இணக்கத் தீர்வை ஓரம் கட்டிவிட்டு இஸ்ரேல் பாலஸ்தீனப் பகுதிகளின் மீதும் யசீர் அரபாத்துக்கு எதிராகவும் இப்போது கடும் தாக்குதலில் இறங்கியுள்ளது. அதனால் உண்மையில் யசீர் அரபாத் சர்வதேச சதியொன்றால் ஏமாற்றுப்பட்டுவிட்டது போன்றே ஆகியுள்ளார். மிகுந்த மன உறுதியுடன் தனது நாட்டின் விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடிவந்த அவரது போராட்டத்தைக் கைவிடவைப்பதில் பெரும் அக்கறை எடுத்துக்கொண்ட சர்வதேச சமூகம் - குறிப்பாக நோர்வே, அமெரிக்க சமாதான ஏற்பாட்டாளர்கள் - இஸ்ரேலை முழுமனதுடன் பாலஸ்தீனத் தீர்வை அங்கீகரிக்க வைக்கச் செய்யவும் அதனை இதய சுத்தியுடன் நிறைவேற்றச் செய்யவும் தவறி விட்டார்கள். இந் நிலையில் இவ் உடன்படிக்கைக்கு நீண்டகாலமாக பின்னின்றும் முன்னின்றும் உழைத்த இம் மேலைத்தேய நாடுகள் பற்றிய நம்பகத் தன்மை கேள்விக்குரியதாகியுள்ளது.

இன்று யாசீர் அரபாத்மீது ராக்கெட் தாக்குதல்கள் ஏவப்படுவதையும் பாலஸ்தீனக் கட்டிடங்கள் இடிந்து விழுவதையும், ஆக்கிரமிப்புப் படைகளாக இஸ்ரேலிய படைகள் பாலஸ்தீனர்களின் பிரதேசத்துக்குள் ஊடுருவிச் செல்வதையும் இந் நிலைமைக்கான ஒட்டு மொத்தமான பழியை யாசீர் அரபாத்தின் மீது சுமத்த முனைவதையும் பார்க்கையில் இச் சர்வதேச மத்தியஸ்துவம் சொந்த நலன்களும் பக்கச் சார்பு நிலையும் கொண்டு செயலாற்றுகிறதா எனச் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

இலங்கையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து இன்று சர்வதேச மத்தியஸ்துவத்துக்கு வழியேற்பட்டுள்ளதையிட்டு ஒருபுறம் மகிழ்ச்சி பாராட்டப் படுகின்ற அதேவேளை நாம் சற்று அவதானமாக இருக்கவும் வேண்டியுள்ளது.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ரணில் + பிரபா அடுத்த கட்டம் என்ன?

ஒப்பந்தம் ஒருவாறு கைச்சாத்தாகி சில காலம் கடந்ததாயிற்று.

ஒப்பந்தத்தின் சரத்துக்களை அமுலாக்கும் நடவடிக்கைகளும் குறையின்றி நடந்தேறி வருகின்றது.

பாதை திறப்பு, பொருளாதாரத் தடை நீக்கங்கள், போக்குவரத்துத் தளர்வு, பாஸ் முறைகள் நீக்கம், மீன்பிடித் தடைத் தளர்வு என்று செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

புலிகளுக்கும் படையினருக்கும் கைகுலுக்கல்களும் தேனீர் விருந்துபசாரங்களும்கூட நடக்க ஆரம்பித்துள்ளன.

புலிகளின் நடமாட்டமும் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

இதேவேளை யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான வெளிநாட்டுக் குழு வருகை தந்துள்ளதுடன் அதன் தலைவர் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தும் திரும்பியுள்ளார்.

கண்காணிப்புக் குழுவில் இருதரப்பினரதும் பிரதிநிதிகள் சிபாரிசு செய்யப் பட்டுள்ளனர்.

கண்காணிப்புக் குழுக்கள் தத்தம் பகுதிகளில் தமது கண்காணிப்புப் பணியை ஆரம்பிக்கவுள்ளனர்.

இவற்றுக்கு மத்தியில் சர்ச்சைக்குரிய விடயமாகியிருந்த இராணுவத் துணைப் படைகளின் ஆயுதக் களைவு பற்றியும் அக்கறை செலுத்தப் படுகிறது.

இதில் அரசாங்கத்தால் ஆயுதம் வழங்கப்பட்டிருந்த முன்னாள் போராளிக் கட்சிகள் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன.

தாம் இராணுவத்தின் துணைப்படையாக செயலாற்றவில்லையென்றும் தாம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளென்றும் அதனால் துணைப் படைகளிடமிருந்து ஆயுதங்களை மீளப் பெறுவதைப் பற்றிப் பேசும் ஒப்பந்தம் தம்மைக் குறிக்கவில்லையென்றும் சிலர் கூறுகின்னறனர்.

இவ் ஆயுதங்கள் சட்ட விரோத ஆயுதங்களில்லையென்றும் தமது பாதுகாப்புக்காக அரசாங்கத்தால் சட்டபூர்வமாக வழங்கப்பட்ட ஆவணங்களுடன் கூடிய ஆயுதங்களெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், சட்டபூர்வமான ஆயுதங்களாக இருந்தாலும், ஒப்பந்தத்தில் துணைப்படைகளைப் பற்றித்தான் பேசியிருந்தாலும், அரசாங்கம் இக் கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைத் திருப்பிக் கேட்பதற்கு முடியும்.

அவ்வாறு அரசாங்கம் கேட்கும் பட்சத்தில் தாம் அவ் ஆயுதங்களைத் திரும்பக் கையளிக்கத் தயாரென்றே பெரும்பாலும் இக் கட்சிகள்யாவும் கூறியிருக்கின்றன.

ஆனால் ஒப்பந்தத்தில் சிபாரிசு செய்யப்பட்டிருப்பது போல் தமது உறுப்பினர்களை இராணுவத்தில் சேர்த்து வடக்கு கிழக்கிற்கு வெளியே சேவையாற்ற அனுப்பப் போவதில்லையென சகல கட்சிகளும் தெரிவித்துள்ளன.

அதேவேளை ஆயுதங்களின் பாதுகாப்புத் தமக்கு ஏன் தேவைப்பட்டதோ அதே பாதுகாப்பை தமக்கு அரசாங்கம் உத்தரவாதப்படுத்த வேண்டுமெனக் கோருகின்றன.

இக் கட்சிகள் வடக்கு கிழக்கில் செயற்படும் தமது அரசியல் உரிமையை வலியுறுத்தி நிற்பதால் இவ் ஒப்பந்தத்தில் எதிர்பார்க்கப்பட்டதுபோல் அவற்றை அப் பகுதிகளிலிருந்து அப்புறப் படுத்துவதென்பது நியாயமற்றதென்ற நிலைமை அரசாங்கத்துக்குத் தோன்றியுள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் புலிகளுக்கும் பிரேமதாசா அரசாங்கத்துக்குமிடையில் இணக்கம் ஏற்பட்ட போது இக் கட்சிகளும் அதன் ஆதரவாளர்களும் இந்திய இராணுவத்தின் பின்னால் இந்தியாவுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டிருந்தது.

அதுபோல் அவை தென்பகுதிக்கு இடம்பெயரும் மற்றொரு நிலைமை அவற்றுக்கு இப்போது மீண்டும் ஏற்படுமென்றே இவ் ஒப்பந்தத்தில் எதிர்பார்க்கப் பட்டிருந்தது.

கடந்த பொதுத் தேர்தலின்போது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கு லண்டனில் விளக்கவுரை வழங்கிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தாம் யுத்தம் மூலமோ சமாதானம் மூலமோ யாழ்ப்பாணம் வருவார்களென்றும் அப்போது ஈ.பி.டி.பி.யினர் அங்கு இருக்க வேண்டாமெனவும் எச்சரித்திருந்தார்.

ஆனால் எவ்வாறாயினும் அரசாங்கத்திற்கு இம் முன்னாள் போராளி அமைப்புகளிடமிருந்து ஆயுதங்களை மீளக் கேட்க முடியுமேயன்றி அவர்களை அவர்களிருக்கும் பிரதேசங்களிலிருந்து அகலும்படி கேட்க முடியாது.

எனவே அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சாரந்ததொன்றாகும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதில் அரசாங்கத்துக்குச் சங்கடமான நிலை உள்ளது.

அவ்வாறான பாதுகாப்பென்பது எவ்வாறு அமையுமென்பதை தீர்னிக்க வேண்டியதாகவும் உள்ளது.

இவை இருப்பினும் ஒப்பந்தத்தின் அமுலாக்கத்தின் பூர்வாங்க ஏற்பாடுகள் இதுவரை பிரச்சினையின்றி நிகழ்ந்தேறி வருகின்றது.

இந்தப் பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியான பின்னர்தான் ஒப்பந்தத்தின் பிரதான விடயங்கள் அதன் கால அட்டவணைக்கேற்ப நடைமுறைக்கிடப்படும்.

அவை நடைமுறைப் படுத்தப் படுவதுடன்தான் யுத்த நிறுத்தத்துக்கான கண்காணிப்புப் பணி முழுமையாக செயற்படுத்தப்படும்.

அதன்போதுதான் எவ்வளவு தூரம் இருதரப்பும் ஒப்பந்தத்துக்கமைய நடந்து கொள்கிறார்களென்பது புலப்படும்.

அத்தோடு எழுத்திலுள்ள இவ் ஒப்பந்தத்தை நடைமுறையில் செயற்படுத்துவதில் எழக்கூடிய சிக்கல்களும் வெளித் தெரியும்.

எவ்வாறாயினும் இவ் ஒப்பந்தம் வெறும் யுத்த நிறுத்த ஒப்பந்தந்தான்.

இவ் ஒப்பந்தத்தின் சீரான அமுலாக்கத்தினால் மட்டும் இனப் பிரச்சினை தீர்ந்து விடப் போவதில்லை.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் பேச்சுவார்த்தைக்குரிய சூழலையும் இருதரப்பு நம்பிக்கையையும் கட்டியெழுப்புவது மட்டுமே சாத்தியமாகக் கூடிய ஒன்று.

இவ் ஒப்பந்தத்திற்கு அடுத்ததாக ரணில், பிரபா இருவரதும் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பதுதான் இப்போது யாவருக்கும் உள்ள கேள்வியாகும்.

இதற்கு இரண்டு விதப்பட்ட பதில்கள் உள்ளன.

ஒன்று இவ் ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேறினால் அடுத்த கட்டம் எப்படி நகருமென்ற ஒரு பார்வை.

மற்றையது ஒப்பந்தம் முறிவடைந்தால் அடுத்து என்ன என்ற பார்வை.

சமாதானத்துக்கான ஒரு பாரிய முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் முறிவடையக்கூடும் என்ற ஒரு எதிர்மறை சிந்தனையை நாம் கொண்டிருக்காது அது வெற்றி பெற வேண்டுமென்றே நாம் விரும்புவோம்.

இப்போது கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் இத் தருணத்தில் அமெரிக்கத் தூதுவர் இப்படியொரு அறிக்கையை விடவேண்டிய அவசியம் ஏன் வந்ததெனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

மீண்டும் அமெரிக்கப் பிரதிநிதியொருவர் இவ் ஒப்பந்தம் குறித்து ஆராய ஒரு சில தினங்களில் இலங்கை வரவுள்ள தருணத்தில் இத்தகைய கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தை வரவேற்றிருந்த அமெரிக்கா, இவ் ஒப்பந்தம் குறித்து இலங்கைப் பிரதமருக்குத் தமது வாழ்த்தினைத் தெரிவித்திருந்த அமெரிக்கா, அதில் புலிகளின் பங்களிப்பைப்பற்றி அதிகமாக எதையும் சொல்லியிருக்கவில்லை.

ஆயினும் இதில் சில தடங்கல்களும் சிக்கல்களும் இருக்கவே செய்கின்றன.

அவற்றையிட்டு நாம் உதாசீனமாயிருந்தால் இம் முயற்சி மீண்டும் ஒரு தோல்வியாக முடிந்து விடக்கூடும்.

தற்போது அமெரிக்கத் தூதர் ஆர்ஸ்லி வில்ஸ் இவ் ஒப்பந்தம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை எதிர்பாராதளவு கடுமையானதாக அமைந்துள்ளது.

புலிகள் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதாகவும், ஆயுதங்கள் கடத்துவதாகவும், முஸ்லிம்களிடமிருந்து பணம் பறிப்பதாகவும் தமக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகக் குற்றம் சாட்டி ஏற்கெனவே பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு வந்த புலிகள் அவற்றைக் கைவிட்டு இவ் ஒப்பந்தத்தின் சகல அம்சங்களும் நிறைவேற நோர்வே மத்தியஸ்துக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும், தமிழீழக் கோரிக்கை ஒருபோதும் சாத்தியமாகாதெனவும் தனது அறிக்கையில் அவர் தெரிவித்திருந்தார்.

சில காலத்திற்கு முன்னரும் இலங்கை வந்திருந்த அமெரிக்கப் பிரதிநிதி, தமிழீழமானது பிறிதொரு மயானக் கோளொன்றில்தான் சாத்தியமென வர்ணித்திருந்தார்.

இப்போது கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் இத் தருணத்தில் அமெரிக்கத் தூதுவர் இப்படியொரு அறிக்கையை விடவேண்டிய அவசியம் ஏன் வந்ததெனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

மீண்டும் அமெரிக்கப் பிரதிநிதியொருவர் இவ் ஒப்பந்தம் குறித்து ஆராய ஒரு சில தினங்களில் இலங்கை வரவுள்ள தருணத்தில் இத்தகைய கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தை வரவேற்றிருந்த அமெரிக்கா, இவ் ஒப்பந்தம் குறித்து இலங்கைப் பிரதமருக்குத் தமது வாழ்த்தினைத் தெரிவித்திருந்த அமெரிக்கா, அதில் புலிகளின் பங்களிப்பைப்பற்றி அதிகமாக எதையும் சொல்லியிருக்கவில்லை.

இந்நிலையில் இவ் ஒப்பந்தத்தையடுத்து புலிகளுக்கு மகிழ்ச்சியளிக்காத ஒரு குற்றச்சாட்டை, ஏதோ, மன்னிப்பளிக்கப்பட்ட கைதிக்கு வழங்கும் எச்சரிக்கையின் பாணியில் விடுத்துள்ளதானது அவர்களை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்குவதாக உள்ளது.

எனினும் இதுகுறித்து புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ள பதில் நிதானமானதாகவே உள்ளது.

அமெரிக்காவைக் கண்டிக்கவோ, விசனிக்கவோ செய்யாதுஅவர்களின் குற்றச்சாட்டை நிதானமாக மறுத்திருந்ததுடன் இவ் ஒப்பந்தத்துக்கு அமையைச் செயலாற்றும்படி தமது உறுப்பினர்கள் அனைவருக்கும் கண்டிப்பான நெறிப்படுத்தல்கள் வழக்கப்பட்டுள்ளதாகவும் உத்தரவாதம் வழங்கியிருந்தார்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தில் கூட்டுவகிக்கும் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ் ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாக்கப் படவில்லையெனவும் அதுகுறித்து தமது கட்சி வலியுறுத்தியிருந்த ஏற்பாடுகள் நிராகரிக்கப் பட்டுள்ளனவெனவும், இவ் ஒப்பந்தத்தில் மனித உரிமை மீறல்கள் நிகழாதவாறு தடுக்கும் சரத்துக்கள் சரியாக அமுல்ப்படுத்தப் படுவதொன்றே முஸ்லிம்களுக்காக எஞ்சியிருக்கும் பாதுகாப்பென்றும் அதிருப்தி கலந்த கருத்தொன்றை டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகைக்களித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தம் நிறைவேறிய வேளைகளில் மௌனமாக இருந்துவிட்டு இப்போது இவர் இப்படியான கருத்தைத் தெரிவிப்பது அவர் கிழக்கு முஸ்லிம்களின் இன்னல்கள் குறித்துப் பாராமுகமாக இருக்கிறார் என்று எழுந்துவரும் குற்றச்சாட்டுக்களாலேயேயென ஊகிக்க முடிகிறது.

எவ்வாறெனினும் இத்தகைய அழுத்தங்கள் அதிகரித்தால் ஹக்கீம் அரசாங்கத்திடம் தனது எதிர்ப்பைத் தெரிவிக்க நிர்ப்பந்திக்கப் படக்கூடும்.

இவற்றைவிட மறுபுறம் மௌனமான இருந்து வரும் மற்றொரு எச்சரிக்கை இந்தியாவாகும்.

இந்தியா சம்பிரதாயபூர்வமாக இந்த ஒப்பந்தத்துக்கு வரவேற்புத் தெரிவித்தாலும் மேற்கொண்டு எவ்வித கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை.

அதேவேளை பேச்சுவார்த்தைகளை நடத்துவது குறித்து தென்னிந்திய மாநிலமொன்றில் இந்தியா இடம்தரவேண்டுமெனப் புலிகள் விடுத்திருந்த கோரிக்கையை இந்தியா தனது மௌனத்தால் மறுத்து வருகிறது.

உண்மையில் இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறதா, கவலையை அளிக்கிறதா என்ற கேள்வி உள்ளது.

ஏனெனில் இதுவரை இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தனது ஆளுமைக்கு உட்பட்டதாகக் கருதிவந்த இந்தியாவிற்கு தனக்கு மிக அருகாமையிலுள்ள நாடொன்றில், தான் முன்னர் நேரடியாகத் தலையிட்டு தீர்வை ஏற்படுத்த முடியாதுபோய்விட்டதாக இருக்க தொலைதூரத்திலுள்ள மேலை நாடுகள் தீர்வு முயற்சியில் பங்கேற்பதென்பது சற்று ஜீரணிக்கச் சிரமான ஒன்றே.

இதேவேளை உள்நாட்டிலும் சில எதிர்ப்புக்கள் உள்ளன.

ஜனாதிபதி இவ் ஒப்பந்தம் தனக்குக் காட்டப் படவில்லையெனவும் அதில் சில குறைபாடுகள் உள்ளனவெனவும் அவற்றில் சில அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் விதத்திலும் இந்நாட்டின் இறைமையை விட்டுக் கொடுக்கும் விதத்திலும் அமைந்துள்ளதாகக் குறை கூறியுள்ளார்.

இதேவேளை சிஹல உறுமய, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் ஜனாதிபதி கைச்சாத்திடாத இவ் ஒப்பந்தம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானதென வழக்குப் போட்டுள்ளன.

வழக்குடன் நின்றுவிடாது இது நாட்டைப் புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் ஒப்பந்தமெனவும் பாரிய ஆபத்தை விளைவிக்கப் போவதாகவும் சிங்கள மக்களுக்கு கிலேசத்தை ஏற்படுத்தும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழ்ப் பகுதிகளில் புலிகள் நடத்தும் பொங்குதமிழ் நிகழ்ச்சிகளுக்கு எதிரான சிங்கள மக்கள் எழுச்சி நிகழ்ச்சிகளை நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளன.

இத்தகைய பிரசாரங்களும் நடவடிக்கைகளும் மீண்டும் ஒரு இனக்கலவரத்துக்குத் தூபமிடும் ஆபத்தும் இருக்கவே செய்கிறது.

இதேவேளை இத்தகைய போக்குகள் வலுத்துச் செல்லுமானால் நாட்டில் பதட்டநிலை தோன்றி ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை மீண்டும் பொறுப்பேற்கத் தீர்மானிக்கலாம்.

அவ்வாறான சூழ்நிலையில் பாதுகாப்புப் படைகள் ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்டவையாகவன்றி ஜனாதிபதிக்குக் கட்டுப்பட்டவையாகவே இயங்கும்.

ஜனாதிபதி ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டவரல்ல.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தில் கூட்டுவகிக்கும் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ் ஒப்பந்தத்தில் முஸ்லிம்களின் நலன்கள் பாதுகாக்கப் படவில்லையெனவும் அதுகுறித்து தமது கட்சி வலியுறுத்தியிருந்த ஏற்பாடுகள் நிராகரிக்கப் பட்டுள்ளனவெனவும், இவ் ஒப்பந் தத்தில் மனித உரிமை மீறல்கள் நிகழாதவாறு தடுக்கும் சரத்துக்கள் சரியாக அமுல்ப்படுத்தப் படுவதொன்றே முஸ்லிம்களுக்காக எஞ்சியிருக்கும் பாதுகாப்பென்றும் அதிருப்தி கலந்த கருத் தொன்றை டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகைக் களித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நற்பெயர் குறித்து அவர் இவ் ஒப்பந்தத்தை ரத்துச்செய்ய விழையமாட்டாரேயன்றி அதற்குக் கட்டுப்படவேண்டிய கடப்பாட்டைக் கொண்டவரல்ல.

இதன்படி எந்தவெரு பிணக்குக்கும் நோர்வே மத்தியஸ்தர்களின் தீர்ப்பினை ஏற்க வேண்டியவருமல்ல.

எனவே இவ் ஒப்பந்தந்தில் தடங்கல்களுக்கும் இடமுண்டு என்பதுடன் இவ் ஒப்பந்தம் முறிவடைவதற்குரிய வாய்ப்புகளும் இல்லாமல்லை.

இத் தடைகளை சமாளித்தபடி எவ்வாறாயினும் இவ் ஒப்பந்தத்தை நிறைவேற்றி அடுத்த கட்டமான அரசியல் பேச்சுவார்த்தைக்கு நாம் சென்றாக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

யுத்த நிறுத்தமென்பதே எமக்கு ஒரு தீர்வல்ல.

உத்தரவாதப்படுத்தப்பட்ட ஒரு கௌரவமான நிரந்தர அரசியல் தீர்வே நாம் ஈட்ட வேண்டிய இறுதி இலக்கு.

அதனை ஈட்டுவதற்கு இந்த யுத்த நிறுத்தத்தைத் தாண்டி அரசியல் பேச்சுவார்த்தைகளென்ற கட்டத்துக்கு நாம் சென்றாக வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை இந்த யுத்த நிறுத்தத்தில் அதிக அக்கறை காட்டினாலும், இதற்கு அடுத்ததாக மனிதாபிமான நடவடிக்கைகள் என்பவற்றையே முன்மொழிந்து வருகிறார்.

அவர் எவ்வித அரசியல் தீர்வை வழங்கத் தயாராக இருக்கிறாரென்றும், அதை இன்றைய மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்றப் பெரும்பான்மை அற்ற நிலையில் எவ்வாறு செயற்படுத்த வழிவகை கொண்டுள்ளாரென்றும் எதுவித அறிகுறியும் தெரியவரவில்லை.

இதேபோல் புலிகளைப் பொறுத்தவரையும் அவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடத் தயாரா என்பது குறித்த உறுதியான பதிலோ, அல்லது அவர்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு பற்றிய எவ்வித வடிவமோ இதுவரை அவர்களால் வெளிப்படுத்தப் படவில்லை.

எனவே இந்த ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேறினாற்கூட இதன் அடுத்த கட்டம் என்பது இன்னமும் ஒரு பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியிலான வெற்றிடமாகவே உள்ளது. ■

நரன்

# சாதாரணன் எழுதுவது.....



என் வியப்பிற்குரிய பழைய தளபதி டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு,

தாடியும், கலைஞ்ச தலையும், கையில 'ஏகே'யும் கழுத்தில பைனக்குலரும் புடைசூழத் தோழர்மாருமாய் நீங்கள் நடந்து வார பவனியைப் பாத்து நான் தலைகனத்துப் போயிருந்த காலம் ஒண்டிருந்தது.

இந்த மாதிரி விண்ணன்கள் இருக்கிறதை அறியாமல சிங்களாக்கள் கொழுவிக்கொண்டிருக்கினம் எண்ட நடப்போடை தான் என்ரை அந்த நாள் கதை பேச்சுக்கள் ஒரே ஏத்தக்கமாய் இருக்கும்.

போதாக்குறைக்கு எங்கட பேராசிரியரும் அப்ப உங்களோட நிண்டவர். கிட்டத்தட்ட ஒரு பிடல்கஸ்ரோ லெவலில உங்களை அவர் காட்ட வெளிக்கிட்டது எனக்கு இப்பவும் நல்ல ஞாபகம். மாக்சீய நிலைப்பட்ட உங்கடை சமூகச் செல்நெறி ஊடாட்டங்களை அவர் நல்லாத்தான் எடுத்துரைப்புச் செய்தவர்.

ஆனால், இதுகளுக்கோ, ஏனைய பல கொலையளுக்கோ சமூகம் சந்திச்ச ஏராளம் மனித உரிமைச் சில்லாபில்லங்களுக்கோ எந்தக் கருத்துப் பதிவுகளும் வைச்சுக்கொள்ளாமல தமிழ்ச் சமூகத்தில கரிசனை உள்ள ஆளாய்த் தொடர்ந்து இருந்து வார 'நுளுந்தல் வித்தை'யை அவரிட்டைப் பாத்துத் தான் மலைக்கவேணும்.

அவற்றை கதையை விடுவம். இடது சாரிப் புரட்சிகரப் போராளி எண்டு அப்பிடி ஒரு வீரபுருஷனாய் யாழ்ப்பாணத்துக்கை வலம் வந்த நீங்கள், ஈபியாரெல்லெப்புக்குள்ளை உங்கட இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவெண்டு இந்தியாவுக்கு வெளிக்கிட்டது தான் பிழைச்சுது.

கடலுக்கை, கூட வந்த கொஞ்சப் பேரையும் காசையும் பறிகுடுத்தியள். அங்கை போய் இறங்கி சூளைமேட்டுச் சூடு வழக்கெண்டு நீங்கள் ஓடுப்பட்டுத் திரிய இஞ்சை உங்கடை தளபதிப் பதவியும் பறிபோய்ச்சுது. நீங்கள் அங்கை ஜெயிலுக்கை. இங்கை புலியள் ஈபியையும் அடிச்சு முடிச்சிட்டினம்.

சிறையால வெளிக்கிட்ட பிறகும் இஞ்சை வரேலாமல, சென்னையில நீங்கள் கடையளிலயும், தெரிஞ்சாக்களிட்டையும் கடன உடன வாங்கி உழண்டு திரிஞ்ச நேரம்- திரும்பவும் பிள்ளையொண்டைக் கடத்திக் காசு கேட்டதெண்டு பிடிச்சு ஜெயிலுக்கை போட்டிச்சினம். ஹான்ட்கப்போட உங்கடை படத்தையும் பேப்பரில பாத்து நான் நொந்து போனன்.

திரும்பக் கொழும்பு வந்து பிரேமதாசாவைக் கப்பெண்டு பிடிச்சதோடை தான் உங்கடை விலாசத்தை உலகத்துக்கே காட்டினியள். அதில இருந்து மேலமேல வந்து ஒரு கட்டத்தில, மலையகத்துக்குத் தொண்டமான், முஸ்லிம்களுக்கு அஷ்ரப், தமிழினத்துக்கு டக்ளஸ் எண்டு சொல்லுற அளவுக்கு சக்திமிக்க தமிழ் அமைச்சராய் உங்கடை கெட்டித்தனத்தைப் பொரிச்சுக் காட்டினியள்.

புலியளே கொஞ்சம் ஆடித்தான் போய்ச்சினம். மற்றத் துரோகியளை இணைச்சு ஒரு கூட்டைக் கொண்டு வரவேணும் எண்ட நெருக்கடி புலியளுக்கு உங்களாலதான் உண்டானது எண்டதை மறுக்கேலாது.

ஆனால், சனங்களின்ர மனத்திறுத்தி எதில வரும் எண்டதை அறிஞ்சு கொள்ளாமல, கூட்டங் கூட்டமாய் கூப்பிட்டுக் கதைச்சும், லைனில நிப்பாட்டி நிவாரணங்கள்-காசுகள் குடுத்தும் வளைச்சுப் போடலாம் எண்டு நினைச்சதில தான் உங்கட சூப்பர் சறுக்கலே நடந்தது.

இன்னுமொண்டு, கேட்பாரற்று எங்கயோ கிடந்த நீங்கள் உங்கட சொந்த முயற்சியால நாட்டின் அமைச்சரவைக்கு வரைக்கும் வந்தது, உங்களுக்கு எக்கச்சக்கமான தன்னம்பிக்கையை ஏத்திவிட்டிட்டுது.

தனி ஒரு ஆளாயே தமிழ் மக்களைக் கரை சேர்த்துப் போடுவன் எண்டெல்லாம் கனவும், நினைப்பும் தொல்லை தரத்தொடங்கியிட்டுது உங்களுக்கு.

உங்கட லட்சியம் எண்டு நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறதுக்கும் யதார்த்தத்தில நீங்கள் ஓடிக்கொண்டிருக்கிற ஓட்டத்துக்குமிடையில கனெக்ஷனும் இல்லை எண்டதே உங்களுக்கு விளங்கேல்லை.

புலியளுக்கு மாற்றாய் நீங்கள் தான் ஒரு ஆள் எண்டு நினைக்கத்தொடங்கியிட்டியள்... அப்பிடியே மற்றவையும் நினைக்கோணுமெண்டு விருப்பப்பட்டியளே தவிர, அதுக்கான ஒரு முயற்சியும் இருக்கேல்லை.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, நெடுந்தீவில் தனியாட்சி' எண்டு கூட்டமைப்புக்காறர் நக்கலடிச்ச மாதிரியே தனியாட்சி எண்டால் தான் உங்கடை செற்றப் கலையாது: இருக்கிறதைப் பாத்துக் கொண்டால் போதும் எண்ட அளவிலேயே உங்கடை தமிழ் மக்கள் மீதான அக்கறை சுருங்கிப் போச்சு.

அமைச்சராய் உச்சத்தில இருந்த நேரம் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்து நீங்கள் ஒரு கூட்டமைப்புக்கு ஒழுங்குகளைச் செய்திருந்தியள் எண்டால் இப்ப உங்கடை நிலைமை எப்பன் தெம்பாயிருந்திருக்கும்.

முற்பகலில விலத்தி ஓடின ஓட்டம் பிற்பகல் உங்களைப் பொங்கு தமிழ் எழுச்சியாய் துரத்துது எண்டதை இப்ப விளங்கியிருப்பியளாக்கும். போதாக்குறைக்கு, 'குடுத்தவனே பறித்துக் கொண்டாண்டி' எண்டு தங்கப்பதுமைப் பாட்டுப் போல ஆயுதங்களை வேற கேட்டிட்டினம். புலியளோ அரசியலிலும் விண்ணன்கள் எண்டு காட்டியிருக்கினம். ஹபிகேஎப் ஐத் துரத்திறதுக்கு பிரேமதாசாவோடை கூட்டை உண்டாக்கின மாதிரி உங்கடை கொட்டத்தை அடக்க தமிழ் கூட்டமைப்பை உண்டாக்கி இறக்கிவிட்டிருக்கினம். அது சுழண்டு திரியுது- தங்கடை முன்னாள் எதிரிக்காக!

உங்களுக்குக் கூட நிண்டவையையே வைச்சுக்கொள்ளத் தெரியேல்லை.

பிரேமதாசாவோடை கொழுக்கியைப் போட்டுத் தொடங்கின உங்கடை எழுச்சிக்குத் துணை நிண்ட உங்கடை ஆக்கள்ல ஆர் இப்ப உங்களோடை நிக்கினம்? அவையெல்லாம் எங்கை? எண்டு கேட்டால் நீங்கள் சொல்லப் போற பதிலில தான் உங்கட தனித்துவமே அடங்கி நிக்குது.

லெக்சரர் க. வைக்கேட்டால சொல்லுவார்: இரண்டே இரண்டு விஷயத்துக்கு உங்களைப் பாராட்டித் தான் ஆகவேணுமெண்டு, ஒண்டு, அமைச்சராய் வந்த பிறகும் நீங்கள் யாழ்ப்பாணம் போய் நிண்டது. மற்றது, ஆனானப் பட்ட புலியள் எத்தனையோ முறை ட்ரைபண்ணியும் அதிலெல்லாம் அவையை ஏமாத்தின உங்கடை சுழிப்பு.

எனக்கென்னவோ, யாழ்ப்பாணம் போய் நிண்டும், 'யப்பா யப்பா ஐயப்பா கையில காசைக்' காட்டப்பா' எண்டு சுத்தி நிண்ட எல்லோருக்கும் காசைக்குடுத்துப் போட்டு வெறுங்கையோடை திரும்பி வந்ததை எப்படிச் சாதனை எண்டு சொல்லுறதெண்டு தெரியேல்லை.

அதையும் விட, அந்த நாரந்தனைப் பழியும், அதைவைச்சுக் கூட்டுக்காறர் நாடகமாடக் குடுத்த வாய்ப்பும் தான் உங்கடை ஆகப் பெரிய வீழ்ச்சியாய் போச்சுது.

ஒவ்வொருத்தருக்கும் இயற்கை ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கிறது எண்டு சொல்லுவினம். உங்களுக்குக் கிடைச்ச சந்தர்ப்பத்தை நீங்கள் தவறவிட்டிட்டியள் எண்டது தான் என்ரை விமர்சனம்.

இப்பவாவது மறுபரிசீலனை செய்யிறதுக்குக் காலம் கிடைச்சிருக்கு எண்டு எடுத்துக்கொள்ளுவியள் எண்டால் சிலதை நீங்கள் யோசிச்சுப் பார்க்க வேணும்.

உங்கடை வேலைப் பற்றேர்ணில இருந்த பிழை என்னெண்டால், உங்கட வேலையளாலை திருப்திப்பட்டவை கொஞ்சப் பேராயும், எரிச்சல் பட்டவை கூடப்பேராயும் இருந்தது தான்.

அதிகாரத்தில இருக்கேக்கை உங்கட இலக்குக்குப் போய்ச்சேருறதுக்கு என்னென்னத்தைச் செய்துமுடிக்கிறது எண்டதை விட்டிட்டு அந்த நேரம் சுத்திநிண்டு துதிவிடுற ஆக்களில மயங்கிப் போனியள்.

அரசாங்கத்திட்டயும் அண்டி நிண்டு விசயங்களைச் செய்து கொண்டு போறதிலேயே சுகம் கண்டிட்டியள். கடைசிவரை சண்டை பிடிச்சும் சிலதை வாங்கிக்கொள்ளுற கெட்டித்தனத்தைக் காட்டவேயில்லை. அல்லது காட்டுவம் எண்டு நீங்கள் நினைச்சுக்கொண்டிருந்து அதுக்கிடையில கவிண்டுபோனியளோ தெரியாது.

தமிழ் மக்களின் பொது நலன் எண்ட அடிப்படையில ஆத்மார்த்த ரீதியான பலம் உங்களுக்குள்ள இருந்ததெண்டால், சண்டைபிடிச்சும் கன வேலையளைச் சாதிச்சுக்கொண்டு போயிருக்கேலும். செய்யேல்லை எண்டது தான் என்ர குற்றச்சாட்டு.

அதெல்லாம் முடிஞ்ச கதை. இப்ப தமிழ் மக்களின் எழுச்சியைக் குழப்பாமல (அது உங்களுக்கு ஏலாதெண்டது வேற கதை) தமிழ் மக்களுக்கு வேற கருத்தும் இருக்கெண்டு விண்ணாணம் விடாமல, இதுவரைக்கும் டிமிக்கி குடுத்துப் பாதுகாத்துக் கொண்டது போல உயிரைப் பாதுகாத்துக் கொண்டு ஒதுங்கியிருந்துகொள்ளுறது தான் சரி. உங்களைப் போல ஒரு சிலருக்குத் தான் உயிருக்குப் பிரச்சனையே தவிர, மற்றெல்லாரும் பரிபூரண சுதந்திரத்தை நோக்கியே பயணப்படுகிறம். எங்கடை உயிருக்குப் பிரச்சனை வாற காலத்தில அதைப் பாத்துக்கொள்ளலாம். தடைகள் போட வேண்டாம். போட்டாலும் நாங்கள் கண்டுகொள்ளப் போவதில்லை. "இது பாசிஸ எழுச்சி, இதுக்குள்ள ஜனநாயகத்தைக் கொண்டு வரவேணும், சர்வாதிகாரப் போக்கை எதிர்க்க வேணும்" எண்டெல்லாம் முயன்று மூக்குடைபட வேண்டாம் எண்டு கேட்டுக்கொண்டு....

அன்புடன்,
சாதாரணன்.

# கிழக்கு மண்ணில் பட்ட 'மகேஸ்வர பாதம்'

-கிழக்கான்-

சும்மா சொல்லக் கூடாது கிழக்கு மண் குடுத்து வச்சிருக்கு எண்டு தான் சொல்ல வேணும். இந்து கலாச்சார சமய விவகார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் எங்கட மண்ணில் காலடி எடுத்து வச்சிருக்கிறார் அல்லவா?

அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டமானும், பி.சந்திரசேகரனும் பொடியள்ர கட்டுப்பாட்டுக்குள்ள போய் பல மணிநேரம் ஒண்ணாக் குந்தியிருந்து, குடிச்சித் திண்டுபோட்டு பேச்சுவார்த்தை நடத்திப் போட்டு வாற விசயங்கள் ஊடகங்களில வரவர கொதிச்சுப் போயிருந்த அமைச்சர் மகேஸ்வரத்தார் எப்பிடியும் பொடியளச் சந்திச்சுப் பேசவேணும் எண்டு தான் மட்டக்களப்புப் பக்கம் வந்து போயிருக்கிறார்.

தடபுடல் அதிரடிப் பாதுகாப்புடன் மட்டக்களப்பு வந்த அமைச்சர் மகேஸ்வரத்தார் பட்டிருப்பு சோதனைச் சாவடியில அவர்களை இறக்கிப் போட்டுத் தானே தலைவராகவும், அமைச்சராகவும் கொக்கட்டிச் சோலைக்குப் போய் சந்திச்சுப் போட்டார்.

கொழும்பில இருந்து கொண்டு உங்கட கவன்மென்ற் அப்பிடியிப்பிடி எண்டு பல உத்தரவுகளைப் போடுது ஆனால், இங்க அப்படியெதுவும் நடந்தது அரிது. நேரடியாகவே நீங்கள் பார்க்கலாம் என்று அரசியல் துணைப் பொறுப்பாளர் சுட்டிக்காட்டிய போது கொழும்புக்குப் போய் உரிய நடவடிக்கை எடுப்பன் எண்டு சொல்லிப் போட்டு வந்தாராம்.

இதவிட ஒரு புளுகிலதான் இவர் இங்காலப் பக்கம் வந்தவராம். கொழும்பில இருந்து வெளிக்கிட்டு ஊர்ப்பக்கம் வரக்குள்ள நட்டநடு மத்தியானத்துக்குப் பிறகு தான் வந்தவர் பாருங்க. ஆனால், சில ஊடகங்கள் காலையில மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில நடைபெற்ற விசேட வழிபாடுகளில கலந்து கொண்டவர் எண்டல்லா சொல்லிப் போட்டாங்க.

முதன்முதலா மட்டக்களப்பு வந்த நம்மட அமைச்சர் மாமாங்கப் பிள்ளையாரையும் விலைக்கு வாங்கிப் போட்டார் பாருங்க. இதத் தெரிஞ்சி தானோ என்னவோ முருகண்டியானைப் பார்க்க வரவேணுமெண்டு கேட்டதற்கு அமைச்சருக்கு அனுமதி கிடைக்காமல் போனது? என்ன சொன்னாலும் முருகண்டியான் விசயம் தெரிஞ்சவர் தான்.

இன்னுமென்ன என்றால், மட்டக்களப்பு ஜெயிலுக்கை போன அமைச்சர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள 147 பேரையும் பார்வையிட்டதுடன், நீரிறைக்கும் யந்திரம் ஒண்டு வாங்கித் தாறன் எண்டு சொல்லிப் போட்டு வந்திருக்கிறாராம். பெடியள் பெட்டையள வெளியில எடுக்கிறதை விட்டுப் போட்டு நீரிறைக்கும் யந்திரம் வாங்கிக் கொடுக்கப் போவதாகக் கூறியிருப்பது தான் ஒருத்தருக்கும் விளங்கல்ல. இதவிட கொழும்புக்கு வந்த கையோட அறிக்கையொண்டு விட்டிருக்கிறார். மட்டக்களப்பில எஸ்.ரி.எ.ஃப் காறங்களை அனுப்பிப் போட்டுப் பொலீஸ்காறங்களைக் கட்மையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப் போறாராம். சும்மா சொல்லப் படாது நல்லாத் தான் கத விடப் பழகியுள்ளார்.

ஞாயிற்றுக் கிழமை ராவுக்குள்ள இருந்த சாராயக் கடையில போத்தல் வாங்கின ரெண்டு பேர் காசு குடுக்காமல் நழுவ, வாக்கு வாதப்பட்டு, இப்ப சமாதான காலம் தானே ஒண்டும் செய்ய மாட்டாங்கள் எண்ட நினைப்பில கட்டிப்பிடிக்க, இடுப்பில இருந்ததை எடுத்துச் சுட்டுப் போட்டல்லவா போயிருக்கானுகள். இனியும் இப்படி எத்தனை காலம்? எத்தனை சம்பவம் நடக்குமோ தெரியாது. சும்மா சும்மா வாங்கின எந்தக் கையும் சும்மா இருக்காது தானே!

காலயோட்டமடுவிலயும், புலிபாஞ்சகல்லிலையும் அம்பது அம்பது வீடுகள் கட்ட அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அவசர அவசரமான வேலையில இறங்கியிருக்கிறார். நல்ல விசயம் தான். ஏனெண்டால் அந்தக் காலத்தில இருந்து இந்தக் காலம்வரை இயக்கப் பெடியளுக்கு அவிச்சுப் போட்டு தின்னக்குடுத்து வாற இங்காலப்பக்கத்துச் சனங்களுக்கு கல்ஊடு கட்டி வாழுற அளவுக்கு வசதியில்ல. கஷ்ரப்பட்ட சனத்துக்குக் கட்டாயம் கிடைக்க வேண்டும். தான்தோன்றீஸ்வரா எல்லாம் உண்ட கையிலதான் இருக்குதப்பா. ■

## Vella Maxi Credit

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு

**கந்தராஜா பிரபு**

**Vella Credit**

Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509

## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

**கண்டியிலும் சந்திக்கலாம்**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் மார்ச் 17-23 திகதி வரை**

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street, No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கண்டியில் மார்ச் 24-25 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் மார்ச் 30, 31 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் ஏப்ரல் 06, 07 திகதிகளில்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019
**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
NO.51/5. Koolavady Road, Batticaloa. SRI LANKA.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் திரு. டேவிற் முடியப்பு

(முன்னாள் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர்)

பிறப்பு: 31.12.1929 | இறப்பு: 12.02.2002

அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த ஆருயிர் தந்தையாகவும் அன்பிற்கு இருப்பிடமாகவும் எமது குடும்ப ஒளிவிளக்காகவும் பிரகாசித்து காலமெல்லாம் கண் அயராது தந்தைக்குத் தந்தையாய் நின்று வளர்த்து ஆளாக்கிய அன்புத்தெய்வமே உம் பிரிவால் துயருறும் யாம் எம் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். எமது வாழ்நாள் தோறும் உங்கள் இனிய நினைவுகள் எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*உங்களைப் பிரிந்து தவிக்கும்*
*மனைவி, பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்கள்.*

*தகவல்:- றோபின் 416/2916036.*

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754

National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine service
சர்வதேச சமூக மாந்தீரிக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No:- HA/4/BT/219
அகில இலங்கை சமாதான நீதவான்

**தெய்வீக மருத்துவம்**
**டாக்டர் பாலு சோதிடர்**
S.A.M.P. J.P. (SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சனைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்தீரிக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனையை எழுதினால் அல்லது தொலைபேசி ∴பக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

THIEIVEEGAM SRILANKA
HEAD OFFICE
BATTICALOA SRILANKA.

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமை அலுவலகம்
மட்டக்களப்பு ஸ்ரீலங்கா.

தொலைபேசி/ ∴பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு:- (065) 24825
வெளிநாட்டவர்களுக்கு:- 009465-24825

காலை 9 மணி
பிற்பகல் 2 மணி


**கொழும்பிலும் நேரில் சந்திக்கலாம்**

"வாழ்விலிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
*"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"*

## மலையாள மாந்திரீகம்



பாரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறியவாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?. திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?. காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP


உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137, 47065- Fax: 344831
E-mail: drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## 2002 கொழும்பு மாநகரசபை உள்ளூராட்சித் தேர்தல்

நவீன மயமான கொழும்பு நகர் ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும்

மாநகர சபை முதன்மை வேட்பாளர்
**பிரசன்ன குணவர்த்தன அவர்கள் 32**

முன்னாள் பிரதி மேயர்
**டைரஸ் பெரேரா அவர்கள் 11**

**சாகர சேனாரத்ன அவர்கள் 33**

ஆகியோரின் இலக்கங்களுக்கு உங்களது பொன்னான வாக்குகளை இட்டு வெற்றிபெறச் செய்யுங்கள்.

Ad:-M.M. திலிப் குமார்-68/45, சித்தார்த்த வீதி, கிருலப்பனை.

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,
NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

சுவிஸ் பேர்ண் மாநகரில்.

## Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
**T.P. 0041-31-8191837**

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப்பதிவு செய்து திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவர் அவர்கள் வசதிகேற்ப செய்து தரப்படும். இலவச விமானநிலைய வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகை கட்டணத்தில் வாடகை கார்.

மேலதிக விபரத்திற்கு:-
**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road # 15-14 International Plaza, Singapore. 079903
Tel: Appu, கை தொலைபேசி எண்:
அப்பு, 00,65 97514941 Tel. Fax:- 0065 2857494.
E.mail: Sakun @Singnet Com.Sg

## லண்டன், பாரிஸ்
## இந்தியா ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும்
*இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்*

**டாக்டர் ஆர்.தியாகராஜன் DHMS,AMRSH (LON.).**

26.03.2002 முதல் லண்டன் பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்த்துமா (Asthuma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை-பேரின்மை (Sterrility) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

**முன்கூட்டி பதிவுக்கு**

லண்டன் தொலைபேசி: 07984803488 / 07833341693
email: homoeocare @ rediffmail. com
தொடர்பு: 0091-9843051 (இந்தியா) 0094-776025 (இலங்கை)
பாரிஸ் விஜயம் 30.03.2002 PΔ‹} 31.03.2002 வரை
பாரிஸ் தொலைபேசி: 0610225386, 0611401882
மார்ச் மாத இலங்கை விஜயம் 20.03.2002 முதல் 23.03.2002 வரை

# அலசுவது-இராஜதந்திரி

# ஆயுதக் களைவு!

இலங்கை ஆயுதப் படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்தம் பலப்படுத்தப்பட்டுள்ள இத் தருணத்தில் ஆயுதமேந்திய ஏனைய தமிழ் அமைப்புக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

வடக்கு கிழக்குப் பிரதேச மக்களின் ஆயுதப் போராட்டம் சுமார் இருபத்தைந்து வருடகால வரலாற்றைக் கொண்டதாகவே இருக்கின்றது.

தற்போது அரச படையினரோடு யுத்தம் மேற்கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, சுமார் ஐந்து அமைப்புக்கள் முழு அளவிலான ஆயுதப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தியிருந்தன.

வடக்கு கிழக்கு மக்களது நியாயமான அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதில் ஜனநாயக ரீதியான அணுகுமுறைகளுக்கு ஏற்பட்ட தோல்வி மற்றும் காலப் போக்கில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அடாவடித்தனங்கள் வடக்கு-கிழக்கு மக்களது பாரம்பரிய நிலப்பிர தேசங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறிய குடியேற்றங்கள் என்பவையே தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை ஏற்படுத்திவிட்டிருந்தன.

இலங்கையில் 1971ம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இயக்கத்தின் ஆயுதப் போராட்டமே அரசுக்கெதிராக வெடித்த முதலாவது கிளர்ச்சியாகும். ஜே.வி.பி இயக்க ஸ்தாபகர் ரோஹண விஜேவீர தலைமையில் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் இந்த ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

ஆனால், போதியளவு மக்களாதரவைப் பெறாத காரணத்தினாலும், உறுதியான அடித்தளமின்மையாலும் ஜே.வி.பியின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த வேகத்திலேயே அரச படைகளினால் முறியடிக்கப்பட்டிருந்தது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் என்பவை சகிதமே ஜே.வி.பி தனது போராட்டத்தை ஆரம்பித்தது. அதனிடம் நவீனரக ஆயுதங்களோ அல்லது ஆயுதப் படையினரது கனரக ஆயுதங்களை எதிர் கொள்ளக் கூடிய வல்லமையோ இருந்திருக்கவில்லை.

1971ம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சி ஆரம்பித்த காலத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசம் ஒரு பரிபூரண அமைதிப் பிரதேசமாகவே விளங்கியிருந்தது.

தென்னிலங்கை ஆயுதக் கிளர்ச்சியின் தாக்கம் எவ்விதத்திலும் வடக்கு-கிழக்கில் பிரதிபலித்திருக்கவில்லை. அப்பிரதேசங்களில் ஆயுதப் படையினர்கூட குவிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் 1983ம் ஆண்டின் பின்னர் வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டம் வெடித்தபோது முழு இலங்கையுமே அப்போராட்டத்தின் தாக்கத்தை அனுபவிக்க நேர்ந்தது.

வடக்கு-கிழக்குத் தமிழ் ஆயுதப் போராளிகளிடம் வெளிப்பட்ட உறுதிப்பாடு, மற்றும் நவீனரக ஆயுதங்களைக் கையாளுவதில் அவர்கள் பெற்றிருந்த தேர்ச்சி, இலங்கைக்கு வெளியே இந்தியாவிலிருந்து கிடைத்த ஆதரவு, போன்றவையே வடக்கு-கிழக்குப் பிரதேச ஆயுதப் போராட்டத்துக்கு வலுவூட்டின.

இன்றைய ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ்தேவானந்தா, மறைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் பத்மநாபா போன்றோர் பாலஸ்தீனத்திலும் ஆயுதப் போராட்டப் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் வேறு சில இளைஞர்களும் பாலஸ்தீனம், லெபனான் போன்ற பிரதேசங்களில் பயிற்சி பெற்றிருந்தனர்.

இந்தியாவில் தமிழகத்தைப் புகலிடமாகக் கொண்டிருந்த தமிழ்ப் போராளிகள் அங்கு தமது தளங்களை வைத்திருந்தனர். அத்துடன் வடக்கு-கிழக்கிலிருந்து திரட்டப்பட்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் தமிழகத்தில் பயிற்சி பெற்றனர்.


இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் காலத்தில் இலங்கையின் தமிழ்ப் போராளிகளுக்கு உத்தரப் பிரதேச மாநிலத்திலும் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

எனவே தனியொரு ஆயுதப் போராட்ட அமைபென்றில்லாது, பல்வேறு ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் களமிறங்கியிருந்தன.

இலங்கையின் ஆயுதப் படைகளுக்கு பல்வேறு கோணங்களிலும் இந்த ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் நெருக்குதல்களைக் கொடுத்து வந்தன.

யாழ்ப்பாணப் டச்சுக்கோட்டைக்குள் இலங்கை இராணுவம் நிலை கொண்டிருந்த சமயத்தில் நட்சத்திர வடிவிலமைந்திருந்த அக்கோட்டையைச் சுற்றிவர நின்று ஒவ்வொரு ஆயுதப் போராட்ட அமைப்புக்களும் தாக்குதல்களை நடத்தியிருந்தன.

ஒன்றுக்கும் மேற்பட்ட நிலையிலிருந்த வடக்கு-கிழக்கு ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அரச படையினருக்கு சிம்மசொப்பனமாகவே விளங்கியிருந்தன.



இலங்கையின் அரசபடைகளை ஒரு பொது எதிரியாகக் கருதிய வடக்கு-கிழக்கின் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் நாளடைவில் தமக்குள் பகைமை பாராட்ட ஆரம்பித்ததையடுத்தே பலதரப்பட்ட திருப்பங்களும் வடக்கு-கிழக்குப் போராட்டத்தில் தலைகாட்டத் தொடங்கின. அத்துடன் ஒரு பலவீனப்பட்ட தன்மையும் தோற்றம் பெறலாயிற்று.

மறைந்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஒருதடவை கருத்து வெளியிடுகையில் "அசாதாரண திறமைசாலிகளாக வடக்கு-கிழக்குப் போராளிகள் இருக்கின்றனர். இப்போராளிகள், மற்றும் அவர்களது அமைப்புக்கள் அனைத்துமே ஒன்று சேர்ந்திருக்கும் நிலை ஏற்பட்டிருந்தால் 'தனிநாடு' என்ற இலக்கை அவர்கள் மிக இலகுவாகவே எட்டியிருப்பார்கள்." என்று தெரிவித்திருந்தார்.

வடக்கு-கிழக்குப் போராளிகள் தனிநாடு, தமிழீழம் என்ற குறிக்கோளோடு திறமையான போராளிகளாக இருந்தபோதிலும் காலபோக்கில் தமக்குள் குத்து வெட்டுக்களை வளர்த்து தம்மைத் தாமே பலவீனப்படுத்திக் கொண்டனர்.

வடக்கு-கிழக்கு ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளாகவிருந்த டெலோ அமைப்பின் சிறீசபாரத்தினம், புளொட் உமாமகேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா ஆகியோர் இயக்கங்களுக்கிடையே நிலவிய முரண்பாடுகள் காரணமாக படுகொலை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்ட அமைப்புக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல்களில் ஆயிரக்கணக்கான அடிமட்ட ஆயுதப் போராளிகளும் கொல்லப்பட்டனர். இம்மரணங்கள் சகோதரப்படுகொலைகள் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன.

தமிழ் ஆயுதக் குழுக்களிடையே நிலவிய முரண்பாடுகளே நாளடைவில் வடக்கு-கிழக்குப் போராட்டத்தை பலவீனப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களையும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையடுத்தே வடக்கு-கிழக்கின் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தமது ஆயுதங்களை முதல் தடவையாகக் கையளிக்க முன்வந்தன.

எல்.ரி.ரி.ஈ உட்பட அனைத்து ஆயுதப் போராட்ட அமைப்புக்களுமே தமது ஆயுதங்களைக் கையளித்து தம்மை முழு அளவில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலாயின.

இருப்பினும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்மீது கொண்ட அதிருப்தி காரணமாக மீளவும் ஆயுத மேந்திப் போராட்டத்தில் ஈடுபடலாயிற்று.

இதன் பின்னர் வடக்கு-கிழக்கு யுத்தம் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது. எல்.ரி.ரி.ஈ அமைப்புடன் பகைமை கொண்டிருந்த தமிழ் அமைப்புக்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்க வந்திருந்த இந்தியப் படையினருக்கு ஆதரவாகவும், இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னர் இலங்கைப் படையினருக்கு ஆதரவாகவும் ஆயுதமேந்தின.

இதன் காரணமாக வடக்கு-கிழக்கின் அப்பாவிப் பொதுமக்கள் எதிர்நோக்கிய கஷ்ட, நஷ்டங்கள் எண்ணிலடங்காதவையாக இருந்தன.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையில் ஒரு தெளிவான அரசியல் போக்குத் தென்படாதிருந்த நிலையில் ஆயுதப் போராட்டங்கள் நிறுத்தப்படுவதோ அல்லது ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படுவதோ சாத்தியமாகியிருக்கவில்லை.

ஆனால் தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அரசுக்குமிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வ ஒப்பந்தத்தையடுத்து நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலேயே தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் அரச தரப்பு மேற்கொண்டுள்ளது.

பல்வேறு தமிழ் அமைப்புக்களும் தமது ஆயுதங்களைக் கையளிக்க முன்வந்துள்ளன. ஒரு சீரான அரசியல் தீர்வை எதிர்பார்த்தும், நிரந்தர யுத்த நிறுத்தம் ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையிலுமே தமிழ் அமைப்புக்கள் தமது ஆயுதங்களைக் கையளிக்க இணங்கியுள்ளன.

ஆயுதக் கலாச்சாரம் என்பது வடக்கு-கிழக்கு யுத்தத்தின் வெளிப்படாக விரிவடைந்துள்ளதாயினும் இன்று நாட்டின் பல்வேறுபகுதிகளிலும் நாசகார ஆயுதங்களின் பாவனை பெருமளவு அதிகரித்து விஷமக் கும்பல்களும் விழிப்படைந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

சர்வதேச ரீதியாக கள்ளச் சந்தைகளில் ஆயுத வியாபாரிகள் செலுத்தும் செல்வாக்கு உலகின் எப்பகுதியிலிருந்தும் எத்தகைய ஆயுதங்களையும் நினைத்த மாத்திரத்தில் தருவிக்கக் கூடிய வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளன.

எனவே ஆயுதங்களை வைத்திருப்போரிடமிருந்து அவற்றைக் களையலாம். ஆனால் மீளவும் ஆயுதங்களின் பாவனைகள் தோன்றாத விதத்தில் அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டமைப்புக்களை உறுதியாக கட்டியெழுப்புவதே ஒரு விரிவான ஆயுதக் களைவுக்கு வழியமைப்பதாக இருக்கும்.

# அதிரடி அய்யாத்துரை



**இந்தியாவில குண்டு** வைக்கப் போறாங்களெண்டு எழுதினால் எவனும் விழுந்தடிச்சுப் பத்திரிகை வாங்குவானெண்டது மெய்தான். அதுக்காக வழக்கொண்டில சிறையில இருந்தபடியே நீதிமன்றத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் ஆஜராகிக்கொண்டிருக்கிற ஒரு எம்.பி புலிகளின்ர பெயரில தமிழ்நாட்டில குண்டுவைக்க ஊடுருவியிருக்கிறதாக் கட்டுக்கதையளக்கிறது பத்திரிகா தர்மத்துக்கு மெத்தப்பிழைபாருங்கோ. விகடச் சஞ்சிகைக்கு ஜுனியரெண்டு முளைச்சவை இப்ப விபரீதமான விகடங்களெல்லாம் விடத் துடங்கிட்டினம்போல. இலங்கைப் பெயரெண்டால் எவன் கேக்கப் போறானெண்டு விசாரிக்காமல் எழுதிறது அந்த ஜுனியருக்கு மட்டுமில்லை சீனியருக்கும் சேத்துத்தான் இழுக்குங்கோ!

**சிவாஜிக்கு விழா எடுத்ததில** வியாபார நோக்கமில்லையெண்டு நாங்கள் நெச்சுக்கொண்டிருக்க விழாவுக்கு 'விஜயம்' தந்த அந்த நடச்சத்திரக் குடும்பத்துப் பொண்ணுகள் மட்டும் எங்கயோ மிஸ்ஸிங்காம். சிவாஜியின்ர விழாவைவிட அவைக்கு வேற என்ன விஷேச விழா அந்த ராத்திரியில யெண்டதிலதான் சம்திங் உதைக்குது. ஏற்பாட்டுக்காறரிட்டக் கேப்பமெண்டு சுத்திப்பாத்தன். ஆரும் கண்ணில படாததால விட்டிட்டன். எல்லாம் அந்த வல்லவனுக்குத்தான் வெளிச்சம்!

**அமெரிக்கத்** தூதுவர் முஸ்லிம்களுக்குத் தொல்லையெண்டு அறிக்கை விடுறார், ஒப்பந்தத்தில முஸ்லிம்கள் பாதுகாக்கப்படேல்லையெண்டு ஹக்கீம் சொல்லுறார், ஹக்கீம் முஸ்லிமகளின்ர ஏக பிரநிதியில்லையெண்டு புலிகள் சொல்லினம். எல்லாம் குழப்பத்துக்குத்தான் வழிதேடுது. என்ன இருந்தாலும் முன்னர் முஸ்லிமகளுக்குத் தனி மாநிலம் கேட்டுப் பின்னர் தனி மாவட்டம் கேட்டு இப்ப கப்பலோட கதை கப்சிப்பாயிருந்தவர் ஏதோ சற்றே வாய்திறந்து செப்பியிருக்கிறது கொஞ்சம் சீரியஸ்தான்!

**பட்டுத் தெளிஞ்சுதான்** பண்பாடும் படிக்குதுபோல எங்கட பாழாப்போன சனம். இப்பிடித்தான் திருமலையில வெட்டுப்போட்ட சட்டை போட்டுக்கொண்டு விஷயந்தெரியாமல் போன ஒரு பொண்ணு சட்டை வெட்டப்பட்டுத் திருப்பியனுப்பப்பட்டிருக்கிறாவாம். கண்டிக்க யாருமில்லையெண்டு கண்டபடி நடந்தவைக்கெல்லாம் இப்ப கெடிக் கலக்கமாம். பொங்குதமிழுக்கு விழாவெடுத்தால் போதாது, அதுக்கேற்ற உடை நடையையும் பயில வேண்டித்தான் இருக்கும்.

**இந்தியாப் படம்** வெளிவரமுன்னமே வீடியோக் கொப்பி ஓடின எங்கட மன்னார் மினிசினிமாக் கொட்டகைகளில இப்ப புலிகளிண்ட இராணுவத் தாக்குதல் படங்களெல்லாம் ஒப்பினா ஓடத்தொடங்கிட்டுதாம். தவளைப் பாய்ச்சல், ஓயாத அலைகளெண்டு சனத்துக்கெல்லாம் ஒரே திறில்தானாம். ஒப்பந்தம் வந்ததால ஒண்டும் செய்ய ஏலாமல் திண்டாடுதாம் பொலிசும் ராணுவமும். மினிசினிமாக் காரரிட்டப்போய் உதெல்லாம் ஒப்பந்தம் முறியும்வரைதான் முறிஞ்சால் முதலாவதா உள்ளுக்குப் போறவர் நீர்தானெண்டு உள்ளூர மிரட்டிப் பாத்தவையாம். ஒப்பந்தம் முறிஞ்சால் தாங்கள் புலிகளோட சேந்து வன்னிக்குப் போயிடுவமெண்டு துணிவாய்ப் பதில் சொல்லிட்டு ஹயாய்ப் படமோடுகினமாம் நம்மாக்கள். துணிஞ்சிட்டான் தமிழன்!







கடந்த 11ம் திகதியுடன் அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதல் இடம்பெற்று 6 மாதம் கடந்துள்ளது. பொதுவாக குறிப்பிட்ட ஒரு சம்பவத்தையோ நபரையோ நினைவு கூர்ந்து கௌரவித்து முத்திரை வெளியிடுவதுதான் வழக்கம். ஆனால் ஒஸாமா பின்லேடன் செய்த காரியத்துக்கு அவருக்கு வெறுமனே முத்திரை வெளியிட்டு போதாது என்று கருதிய அமெரிக்க இணையத் தளம் ஒன்று டொலர் நோட்டுக்குளில் ஒஸாமாவின் தலையையும் அவரது கெட்டித்தனத்தின் சின்னத்தையும் புகுத்தி வெளியிட்டிருக்கிறது.





இந்தக் கோணத்தில் வேறு இருவரை பார்த்த ஞாபகம் இருக்கும். யாரென்று புரிந்துவிட்டதா? டைட்டானிக் திரைப்படத்தில் கதாநாயகனும் நாயகியும் கப்பலின் முன்புறத்தில் இவ்வாறு நின்றுகொண்டு ஒருவர் கைவிரித்திருக்க மற்றவர் பின்னாலிருந்து அவரைப் பற்றிக்கொண்டு காற்றைக் கிழித்தவண்ணம் பயணம் செய்யும் காட்சியைப் பார்த்திருப்பீர்கள்.

இங்கே நீங்கள் காண்பதும் அதே டைட்டானிக் கப்பலில் பயணிக்கும் இரண்டு நாயகர்களைத்தான். ஆனால் ஒரு வித்தியாசம் இவர்கள் காதலர்கள் அல்ல. இருவரும் ஜென்ம விரோதிகள். ஆனாலும் என்னமாய் ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு கடலில் பறக்கிறார்கள். இதுவும ஒரு கற்பனை கிராபிக்ஸ் தான்.

## இதுவொரு பழைய காதல்...

**காதலுக்காக முடிதுறந்த எட்டாவது எட்வேட் மன்னரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவரது "லவ் ஸ்டோரி" பற்றி மேலதிகமாகக் கொஞ்சத் தகவல்கள்....**

இங்கிலாந்து ராணியாக அறுபத்திநான்கு வருடங்கள் பதவி வகித்துச் சாதனை புரிந்த விக்டோரியா மகாராணியின் கொள்ளுப் பேரர் தான் இந்த எட்டாவது எட்வேட். 1936ல் இங்கிலாந்து அரசராகப் பதவியேற்றவர்.

பட்டத்து இளவரசராக இருந்த போதே எட்வேர்ட்டுக்கும் வாலிஸ் சிம்சன் என்ற அமெரிக்கப் பெண்மணிக்கும் காதல் அரும்பியது. ஏற்கெனவே ஒருவரை மணந்து விவாகரத்துப் பெற்றிருந்தார் வாலிஸ். அதன் பிறகு சிம்சன் என்ற மிகப் பெரிய செல்வந்தரை இரண்டாம் திருமணம் செய்திருந்தார். சிம்சன் நடாத்தி வந்த கப்பல் கம்பனியின் லண்டன் கிளையை நிர்வகித்து வந்தார் வாலிஸ்.

அரசு விருந்தொன்றில் வாலிஸைச் சந்தித்தார் எட்வேர்ட். வாலிஸின் அழகும் புத்திசாலித்தனமும் எட்வேர்ட்டைக் கவர்ந்து விட்டது. இருவரும் நட்புக்காக அடிக்கடி சந்தித்தனர்.

நாளடைவில் நட்பு காதலானது! தன் காதலை வாலிஸிடம் சொன்னார் எட்வேர்ட். காதலின் உண்மையையும், உறுதியையும் பார்த்த வாலிஸ், சிம்சனை விவாகரத்துச் செய்துவிட்டு எட்வேர்ட்டைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்தார். அந்தச் சமயம் மன்னராகவிருந்த ஐந்தாம் ஜோர்ஜ் (எட்வேர்ட்டின் தந்தை) மரணமடைந்தார். எட்வேர்ட் மன்னரானார். வாலிஸைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் அறிவித்தார்.

அதைக் கேட்டதும் அரச குடும்பம் ஆடிப் போனது. காதல் விவகாரம் முன்னே தெரிந்திருந்தாலும், அது திருமணம் வரை போகும் என்று



யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

ஏற்கனவே இருமுறை மணமாகி விவாகரத்துப் பெற்ற பெண்ணை நீங்கள் மணந்தால் அவர் ராணி அந்தஸ்தைப் பெறமுடியாது. அவருக்குப் பிறக்கும் குழந்தை உங்களுக்குப் பிறகு மன்னராக முடியாது என்று எட்வேர்ட் மன்னரிடம் அப்போதைய இங்கிலாந்துப் பிரதமரான ஸ்டான்லி போல்ட்வின் கறாராகத் தெரிவித்தார்.

இங்கிலாந்து கிறிஸ்தவ சபையும் இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லை. எட்வேர்ட் தன் முடிவில் உறுதியாக இருந்தார்.

"காதலியா?, மணிமகுடமா? இரண்டில் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுங்கள்" என்று அரச குடும்பத்தினரும், பிரதமரும் கண்டிப்புடன் சொல்லிவிட்டனர். காதல் தான் வேண்டும் சாம்ராஜ்யம் தேவையில்லை என அறிவித்தார், எட்டாம் எட்வேர்ட். அதிர்ந்தது இங்கிலாந்து. சொன்னபடியே 1936ல் டிசம்பர் 10ம் திகதி முடிதுறந்தார் எட்வேர்ட்.

அப்போதைய உலகின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி இங்கிலாந்து சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தில் இருந்தது. காதலுக்காக அதை உதறித்தள்ளினார் எட்வேர்ட். அவருக்குப் பதிலாக அவருடைய தம்பி ஆறாம் ஜோர்ஜ் (தற்போதைய ராணி எலிசபெத்தின் தந்தை) மன்னரானார்.

எட்வேர்ட்-வாலிஸ் திருமணம் 1937 ஜூன் மாதம் நடைபெற்றது. இருவரும் மகிழ்ச்சிகரமாக 35 ஆண்டுகள் வாழ்ந்தனர். தனது 77வது வயதில் 1972ம் ஆண்டு காலமானார் எட்வேர்ட். அதன் பிறகு பதினான்கு வருடங்கள் கழித்து வாலிஸ் மரணமடைந்தார்.

## சுவிட்சை ஆப் பண்ணட்டுமா...
## நீதிமன்றத்திடம் கேள்வி

**த**னது உயிரைப் போக்கிக் கொள்ள அனுமதி கேட்டு நீதிமன்றத்திடம் விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றதுஎன மேற்கத்தேய மருத்துவ ஆராய்ச்சி ஒன்று கூறுகின்றது.

இறுதியாக இவ்வாறானதொரு சம்பவம் குறித்து லண்டனில் இருந்து அறியக் கிடைக்கின்றது. லண்டனைச் சேர்ந்த 40 வயதுப் பெண் டயனா பிரீட்டி இவர் முதுகுத் தண்டு இரத்தக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பினால் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த ஒரு வருட காலமாக படுக்கையிலேயே கிடக்கும் இவருக்கு வென்டிலேட்டர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. கை கால் செயற்படாவிட்டாலும் முழுமையான நினைவாற்றலுடனும் சுய சிந்தனையுடனும் இருக்கும் இவர் தனக்கு அளிக்கப்படும் வென்டிலேட்டர் சிகிச்சைக் கருவி சுவிச்சை ஒவ் செய்து உயிரைப் போக்கிக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென சட்டத்தரணிகள் மூலம் பிரிட்டிஷ் உயர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இப்போது இவரது வேண்டுகோளை ஆட்சேபித்து வைத்திய சாலையின் மருத்துவர்கள் ஆட்சேபமனு தாக்கல் செய்திருக்கிறார்கள். வழக்கு அடுத்து வரும் ஒரு வார காலத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பெண் உயிர் விட இப்போது அவரது கணவரின் உதவியை நாடப்பட்டுள்ளது. விசாரணையின் பின்னர் உயிரைப் போக்கிக் கொள்ள நீதி மன்றம் அனுமதிக்குமா என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நெட் ஜோக்


குற்றவாளிக் கூண்டில் ரொம்பவும் கூலாக நின்றிருந்தாள் அந்தப் பெண். கணவனுக்கு விஷம் வைத்துக் கொன்றதாக அவள்மீது குற்றச்சாட்டு.

"காபியில் விஷம் கலந்துவிட்டு அதை உன் கணவன் குடிப்பதை டைனிங் டேபிளில் அமர்ந்தபடி வேடிக்கை பார்த்திருக்கிறாய். உண்மையைச் சொல்.. அவன்மீது அந்த நிமிடத்தில் துளிகூடவா இரக்கம் வரவில்லை?"- நீதிபதி கேட்டார்.

"ஒரே ஒரு முறை மட்டும் அவனை இரக்கத்தோடு பார்த்தேன்... மைலார்ட்!" என்றாள் அவள்.

"அப்படியா? அது எப்போ?"-நீதிபதியின் குரலில் ஆர்வம் தெரிந்தது.

"'காபி ரொம்ப நல்லா இருக்கு.. இன்னொரு கப் கொடுக்கறியா' என்று அவன் கேட்டபோது!"



ஒரு அழகிய யுவதியின் முகத்தின் பாதியை புலி போன்று வடிவமைத்து பெண் புலியாக சித்தரித்திருந்தது இணையத்தளம் ஒன்று. கிரபிக்ஸ் முறையில் வடிவமைக்கப்பட்டிருந்த இந்தப் படம் கடந்த ஒரு வருட காலத்தில் அதிகளவிலான வர்களினால் பார்வையிடப்பட்டதாக இந்தப் படத்தை பிரசுரித்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

## உலகில் மோசமான நகரம் எது தெரியுமா?

**உ**லகில் மிகச் சிறந்த நகரமாக சுவிற்சலாந்து நாட்டின் சூரிச் நகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது இடத்தில் கனடாவின் வான்கூவர் நகரம் இருக்கிறது.


ஐனா சபையின் மனிதவள ஆணைக்குழு ஆண்டுதோறும் மனித வாழ்வுக்கு மிக சிறந்த நகரங்களை தெரிவு செய்து வரிசைப்படுத்தி வருகிறது. இதற்கென 39 எடுகோள்களை அந்த ஆணைக்குழு கொண்டுள்ளது. இதன்படி வரிசைப் படுத்தப்பட்ட 210 நகரங்களில் கொங்கோ நாட்டின் பிராம் வில்லே நகரம் உலகின் மிக மோசமான நகரம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.


## நெட் ஜோக்

**அ**திகாலை. படுக்கையிலிருந்து எழுந்த கணவனை கை பிடித்து இழுத்தாள் மனைவி- "வேலன்டைன்ஸ் டே அன்னிக்கு எனக்கு நீங்க ஒரு முத்துநகை பரிசு தரப்போறதா கனவு கண்டேன். இதுக்கு என்ன அர்த்தம்?"- காதல் பரிசுக்காகத் தூண்டில் போட்டாள்.

"இன்னிக்கு ராத்திரி உனக்குத் தெரியும்!" என்ற அவன், அன்று இரவு வண்ணக்காகிதம் சுற்றப்பட்ட அழகான ஒரு பார்சலை அவளிடம் நீட்டினான். அவளுக்குத் தாங்கமுடியாத சந்தோஷம். "ஓ.. வாங்கியே வந்தாச்சா.. ரொம்ப தாங்க்ஸ்..."-உள்ளம் உருவி அவனைக் கட்டிப் பிடித்து முத்தங்களை அள்ளித் தெளித்துவிட்டு, அந்த பார்சலைப் பிரித்தாள்.

உள்ளே இருந்தது... 'கனவுகளும் அதன் பலன்களும்' என்ற புத்தகம்.





## பறக்கும் மீன்

மரத்திலிருந்து வெடித்த பஞ்சு காற்றில் கலந்து வருவதுபோல் இருக்கிறது மேலே உள்ள படம். ஏதோ ஒரு பக்ரீரியாவை மருத்துவர் படம் பிடித்து வைத்திருப்பதுபோல் இருக்கிறது இரண்டாவது படம். ஆனால் இது இரண்டும் உண்மையல்ல. இவை உண்மையாக இருவகை மீனினங்களேயாகும். மேலே உள்ளதை சிங்க ஆண் ஜெலி பிஷ் (Lions mane jelly fish) என்றும் கீழே உள்ளதை க்றே பிஷ் என்றும் அழைக்கிறார்கள். வட அமேரிக்கக் கடலில் காணப்படும் இந்த இருவகை மீனினங்களும் அரிதான கடல் வாழ் உயிரினங்களாக கணிக்கப்படுகின்றன.


## வெண் பனி வீசிய மரம்

ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள காடுகள் குளிர்கால காலைப்பொழுதுகளில் இப்படித்தான் காட்சியளிக்கும்.

ஊசி இழைக் காடுகளில் உள்ள மரங்கள் பெரும்பாலும் பனி மழையில் அகப்பட்டு தமது பச்சையை மறந்து முற்றிலுமாக வெள்ளை உடை தரித்திருக்கும்.

இத்தகைய மரங்கள் குளிருக்கு வெகுவாக ஈடுகொடுக்கக்கூடியவை. சில பிரதேசங்களில் வருடம் முழுவதிலும் கூட இழைகளில் பனித்துகள்கள் தொங்கிக்கொண்டிருக்கும். ஆனால் அவ் விழைகள் பழுதடையவோ உதிரவோ மாட்டாது. இங்கே நீங்கள் படத்தில் காண்பதும் அத்தகைய தொரு காட்சியைத்தான்.





## சூரியப் பிரயோசனம்

நம் நாட்டில் மின்சார நெருக்கடிக்கான பிரதான காரணம் எனக் கூறப்படுவது நீர் மின் நிலையங்கள் வற்றிப் போய் இருப்பதுதான்.

ஆனால் அவ்வாறான வற்றிப் போன நிலப்பரப்புக்களையே பயன்படுத்தி தேவைக்கும் அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வழிமுறை பல தசாப்தங்களுக்கு முன்னரே கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது.

இங்கே படத்தில் காண்பது அமெரிக்காவில் உள்ள ஒரு சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தில் சூரிய ஒளியை உறிஞ்சுவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் உருக்கு கோபுரங்களையேயாகும். இந்த மின் உற்பத்தி நிலையத்தில் நாளொன்றிற்கு 1000 மெகாவோட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இப்படி ஒரு நிலையத்தை அமைத்தாலே எமது நாடு முழுவதற்கும் மின்சாரம் வழங்கப்போதும். மழைதான் இல்லை. வெயில் இருக்கிறதுதானே.

## எப்பொழுதும் தயார்

உலகில் உள்ள மிகப்பெரிய தீயணைப்புப் படை நிலையத்தின் ஒரு பகுதியைத்தான் காண்கிறீர்கள்.

இது வொஷிங்டனில் இருக்கிறது. இங்கே 150 தீயணைக்கும் இயந்திரங்கள் சுமார் 1000 தீயணைப்புப் படை வீரர்கள் என்று எப்பொழுதும் தயார் நிலையிலேயே இருக்கிறது இந்த நிலையம். இங்குள்ள 100 இயந்திரங்கள் தகவல் கிடைத்து 3 நிமிடங்களுக்குள் கிளம்பிச் செல்லும் அளவு எந்த நேரத்திலும் தயாராகி இருக்குமாம்.



## சரியான தகவல்

நம் நாட்டு மீனவர்கள் இன்னமும் தூண்டில் போட்டுக்கொண்டும் கிழிந்துபோன வலைகளுடனும்தான் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் செல்கிறார்கள். படத்தில் காண்பது அமெரிக்கர்களின் நவீன மீன்பிடி உபகரணம்.

கடலில் எங்கே மீன் இருக்கிறது என்று குறிப்பறிந்து சொல்லும் வல்லமை இந்த இயந்திரத்திற்கு இருக்கிறது. கப்பலில் முன் பகுதியில் தொங்கவிட்டுக் கொண்டே செல்லவேண்டியதுதான். கூடுதலான அளவு மீன்கள் இருக்கும் இடத்தில் மிக சரியாக சமிக்ஞைகொடுக்கும் இந்த கருவி. அந்த இடத்தில் வலையை வீசினால் குறி தப்பவே தப்பாது. புளோரிடா மாநிலத்தில் உள்ள இஸ்லாமோ ராடா என்ற இடத்தில் இக் கருவி பயன்படுத்தப்படுவதையே காண்கிறீர்கள்.




# தகவல் பெட்டி

## காலும் கண்ணிவெடியும்

செக் குடியரசில் உள்ள ஒரு செயற்கைக் கால் நிலையத்தின் செயற்கைக் கால்கள் தொங்க விடப்பட்டு இருப்பதைத்தான் இங்கே காண்கிறீர்கள். இந்த நிலையத்தில் விரல், கீழ் பாதம், முட்டங்கால் வரையிலான பகுதி என்று வெவ்வேறு வடிவத்தில் செயற்கைக் கால்கள் செய்யப்படுகின்றன.

இந்த நிலையத்திற்கு அதிக அளவிலான செயற்கைக் கால்களுக்கு ஆபிரிக்க மற்றும் தெற்காசிய நாடுகளிலிருந்தே கேள்வி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது அதிக அளவு யுத்தம் நடக்கும் நாடுகளில் இருந்துதான் செயற்கைக் கால்கள் கோரப்படகின்றன. இந்தக் கால்களை உற்பத்தி செய்யும் இதே செக் குடியரசு பாரியளவிலான கண்ணிவெடி தொழிற்சாலைகளையும் கொண்டிருக்கிறது.





## காதலர் தின பாண்

தினசரி சிறிய அளவில் ஒவ்வொரு பாணாக உற்பத்தி செய்து வெறுத்துப்போன ஒரு இந்தோனேசிய பேக்கரிக்காரர் சில நாட்களுக்கு விடுமுறை எடுக்க நினைத்தாரோ என்னவோ ஒரே முறையாக பாரிய பாண் ஒன்றை செய்து தனது பேக்கரி முன்னால் வைத்துவிட்டார்.

இதை எப்படி வாங்கிக்கொண்டு வீடு செல்வது என்று அருகில் உள்ளவர் சிந்திக்கின்றார். 70 இறாத்தல் எடையுடன் இந்த இதய வடிவிலான பாண் காதலர் தினத்தை முன்னிட்டு ஜகார்த்தா வாசி ஒருவரினால் தயாரிக்கப்பட்டது. அதனை.தலை கீழாக வைத்த பூக்கள் எல்லாம் அணிவித்து மக்களின் பார்வைக்காக வைத்திருக்கிறார்.

காதலர் தினத்தில் ரோஜாப்பூ மட்டும்தான் கொடுக்கவேண்டும் என்றில்லை. பாணும் கொடுக்கலாம் என்கிறாார்!

## மியூசியம்

அமெரிக்க விமானப்படை மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கும் விமானங்களைத்தான் இங்கே காண்கிறீர்கள். பாரியலவிலான கெலரி ஒன்றை உருவாக்கி விமானம் பறந்துகொண்டிருப்துபோல் ஒவ்வொன்றாய் தொங்கவிட்டிருக்கிறார்கள். அமெரிக்க விமானப் படை அதன் ஆரம்ப காலத்தில் பயன்படுத்திய பல விமானங்கள் இங்கு காட்சிக்காக வைக்கபட்டுள்ளன.

ஆரம்ப கட்ட விமானத்தில் ஆரம்பித்து இன்றைய அதி நவீன போர் விமானம் வரை காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒஸாமா பின் லேடனுக்கு இந்த இடம் தெரியாமல் இருந்து இருக்க வேண்டும் என்று நினைக்கலாம்!





சரத்குமார்

## ஹவுஸ்ஃபுல் சீக்ரெட்!

ஹாலிவுட் காமெடி நடிகரின் பெயர் வைத்து சமீபத்தில் ரிலீஸான படம் சென்னையின் மற்றைய தியேட்டர்களில் எல்லாம் ஃபிஃப்டி, ஃபிஃப்டி காற்று வாங்க வட பழனி ஏரியாவில் தாமரை தியேட்டரில் மட்டும் ஹவுஸ் ஃபுல் தெரிசலாம்! ஹவுஸ்ஃபுல் ஆன காரணம் வேடிக்கையானது.

முதல்நாள் முதல் ஷோ டிக் கெட்டுகள் மொத்தத்தையும் தாங்களே வாங்கி தெரிந்தவர்களிட மெல்லாம் திணித்து, நினைத்த படியே தெரிசல் பண்ணிக் காட்டியிருக்கிறார்கள். சிறிய திலகம், ரப்பர் புயல், ஆக்தியான இயக்குநர் என்று அத்தனை பேருமே இந்த ஹவுஸ்ஃபுல் சீக்ரெட்டின் பங்காளர்கள்தானாம். ஃபிலிம் காட்டின வங்க இப்ப ஷோ' காட்டறாங்கப்பா!



கிரண்
படம்: ஜெமினி

## மம்முட்டி-ஷோபனாவின் பெரிய கவுண்டர்

சமந்தி நிறுவனம் சார்பில் பிரபல வீடியோகஸ்தர் சீமோகன் தயாரிக்கும் பிரமாண்டமான படம் பெரிய கவுண்டர். இதில் மம்முட்டி கதாநாயகனாக நடிக்க, ஷோபனா கதாநாயகியாக நடிக்கிறார்.

மலையாளத்தில் வெளியாகி வெற்றி பெற்ற வல்லியேட்டன் என்ற படமே தமிழில் பெரிய கவுண்டர் பெயரில் மொழி மாற்றம் செய்யப்படுகிறது. இதில் கலாபவன் மணி, சித்திக், மனோஜ், கே.ஜெயன், கேப்டன் ராஜ், சாய்குமார், பூர்ணிமா, மோகன், பானு, சுகுமாரி ஆகியோர் நடிக்கின்றனர்.

மோகன் சிதாரா- ராஜா மணி இசையமைக்கிறார்கள். பூமி நாதன் எடிட்டிங் செய்கிறார். ராக்கி ராஜேஷ், பழனிராஜ் அதிரடி சண்டைப் பயிற்சி அளிக்கின்றனர். மருதபரணி வசனம் எழுதிப் பாடல்கள் இயற்றுகின்றார். ரஞ்சித் கதை, திரைக்கதை எழுதுகிறார். ஷாஜிகைலாஷ் இயக்குகிறார். ஏழு சண்டைக் காட்சிகள் மயிர்க்கூச்செறியும் விதத்தில் படமாக்கப்பட்டுள்ளது. இந்து அண்ணன்-தம்பிகளுக்கும், மாமன் மகன்களுக்கும் இடையே நடக்கும் பங்காளித் தகராறுதான் இப்படத்தின் மையக்கரு. கேரளாவில் படமாகியுள்ள இந்தப் படம் விரைவில் தமிழகம் முழுவதும் திரைக்கு வருகிறது.

## சங்கமம் தவிக்குதம்மா!

'சங்கம' நடிகை தாயாரின் பாதுகாப்பில் இருந்து விடுபட்டாலும் இன்னொரு சிறையில் சிக்கிக்கொண்டு விட்டதாகச் சொல்கிறார்கள். அது வேறு யாரும் இல்லை அவரது பாதுகாவலர் என்று சொல்லிக் கொள்பவர்தானாம். நாலு சான்ஸ் வாங்கி, நாலு காசைப் புரட்டலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த நடிகைக்குக் கல்யாண ப்ரஷர் வந்ததும் என்ன செய்வது என்று புரியாமல் தவிக்கிறாராம். அவரைப் பகைத்துக்கொண்டாலும் கஷ்டம் பிரிந்தாலும் அம்மா வீடுதான் கதி என்பதால் கல்யாணத்திற்கான நாளைத் தள்ளிப்போடுகிறாராம். இப்போதைக்குக் கல்யாணம் இல்லை என்று சொன்னால்தான் தயாரிப்பாளர்கள் புக் செய்ய ரெடியாக இருக்கிறார்கள். அதனால் ஒரு பாடலுக்கு நடனம் ஆடவேண்டிய பரிதாப நிலைக்கு நடிகை தள்ளப்பட்டு இருக்கிறாராம்.

## அறிமுகம் அலை பாய்கிறது!

இப்போதைக்குப் புதுமுகம்தான். நிறுவனமும் பெரிய நிறுவனமாக இருந்து, பெரிய அளவிலும் தயாரித்த படம் என்பதால் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் கிரிக்கெட்டரின் பெயர் கொண்ட காந்த ஹீரோ, தன்னைக் கண்டெடுத்த நிறுவனத் தின் இன்னொரு படத்தில் நடிக்காமல், சில லட்சங்கள் அதிகமாகக் கிடைக்கிறது என்பதற்காக வேறொரு படத்தில் நடிக்க ஆர்வம் காட்டினாராம். விஷயத்தைக் கேள்விப்பட்ட நிறுவனம், அவருக்குக் கும்பிடு போட்டு அனுப்பிவிட்டதாம். இனிமேல் புதுசாக அறிமுகப்படுத்துகிற வேலையே வைத்துக் கொள்ளக்கூடாது என்று விருது நிறுவனம் முடிவு பண்ணி விட்டதாம்.



த்ரீஷா

## இதெல்லாம் ஒரு கவர்ச்சியா?

'ஜெமினி' படத்தின் நாயகி கிரண் படுகெட்டிக்காரியாக இருக்கிறாராம். சொன்னதை விட எக்ஸ்ட ராவாகச் செய்து காட்டிப் போதுமா? என்று கேட்டு டைரக்டரைப் பரவசப்படுத்துகிறாராம்.

குஜராத்தைச் சேர்ந்தவர் கிரண். படு மாடர்ன் பழக்க வழக்கங்களைக் கொண்ட கிரண், கவர்ச்சி காட்டி நடிப்பதில் தயக்கம் காட்டுவதில்லையாம். கொஞ்சம் அப்படி இப்படி நடிக்கச் சொன்னாலும் இதெல்லாம் ஒரு கவர்ச்சியா? என்று ஆச்சரியப்படுகிறாராம்.

கிரணின் காஸ்ட்யூம்களைப் பார்த்து ஹீரோ விக்ரமே பல காட்சிகளில் வெட்கப்பட்டாராம். மும்தாஜுக்கு ஈடினையான கவர்ச்சியும், சிம்ரன், ஜோதிகாவைவிடச் சிறப்பான நடிப்பும் என்னிடமிருக்கிறது என்று கூறிக் கொள்கிறாராம் கிரண்.

"ஜெமினி" வெளியான பிறகு படங்கள் குவியும் என்ற எதிர்பார்ப்பில் சென்னையில் ஒரு நல்ல பங்களாவாகப் பார்த்து வைக்குமாறு புரோக்கர்களிடம் கூடச் சொல்லிவிட்டாராம்.

இப்போதைய ஹீரோயின்களில் ஜோதிகாவும், சிம்ரனும் தான் எனக்கு நம்பர் ஒன் எதிரிகள் என்று கூறும் கிரண், அவர்களை எப்படிக் கவிழ்ப்பது என்ற தீவிர யோசனையில் இருக்கிறாராம்.

நடிப்பின் மூலம் மார்க் கெட்டை பிடிக்கும் நடிகைகளுக்கு எப்படிப்போனாலும் கவர்ச்சியை மட்டும் நம்பி இருப்பவர்களுக்கு கிரண் ஒரு கவர்ச்சிகரமான சவால் என்கிறது பொலிவுட் வட்டாரம்.

நடிக்கவுள்ள அடுத்த படத்தின் பெயர் "திருடா"
இயக்கிய மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ்
சமீபத்தில் பிரபு-பிரபுதேவாவை வைத்து ஹிட்
கம்பைன்ஸ் நிறுவனம்தான் திருடாவை தயாரிக்
அஜீத்துக்கு ஜோடியாக நடிக்கவுள்ள நடி
செய்யப்படவில்லை. ஆனால், இசையமைப்பாளர் யு
அஜீத்தான் யுவன்சங்கரை சிபார்சு செய்ததாகச்
ஸ்வாமி என்பவர் கதை, வசனத்தைக் கவனி
கதை கலக்கலாக இருக்குமாம். ரெட் படம் ஊத்தி
மார்க்கெட்டை தூக்கி நிறுத்தும் வகையில் படம்
சரிதான்.



கமல்

## சிரஞ்சீவி-சிம்ரனின் டான்ஸ் மாஸ்டர்

தமிழில் பல மொழிப் படங்களைத் தயாரித்து வெளியிட்ட ஆர்.எஸ். ஆர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரிக்கும் பிரமாண்டமான படம் "டான்ஸ் மாஸ்டர்"

சிரஞ்சீவி, சிம்ரன், ஆஷிமா பல்லா ஆகியோருடன் முன்னணி நடிகர், நடிகையர் பலர் நடித்த இப்படத்தில் பாசம், நேசம், ஆடல், பாடல், சென்டிமெண்ட், கிளாமா ஆகிய அம்சங்கள் இடம்பெறுகிறது.

நியூசிலாந்து, சுவிற்சலாந்து, பின்லாந்து, ஹாலந்து, போலந்து ஆகிய நாடுகளில் படமான இந்தப் படத்திற்குப் பிறைசூடன் பாடல்கள் எழுத, எஸ்.ஏ. ராஜ்குமார் இசையமைக்கிறார். பி.ரவிசங்கர் வசனம் எழுதுகிறார். இதில் ஆறு பாடல் காட்சிகள், இரண்டு சண்டைக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இசை ஆல்பம் தயாரிக்கும் ஒரு இளைஞனின் வாழ்வில் ஏற்படும் சம்பவங்களை இப்படம் விளக்குகிறது. தற்போது ரஜனிகாந்த் கதையெழுதி, நடித்துத் தயாரிக்கும் "பாபா" என்ற படத்தை டைரக்ட் செய்யும் சுரேஷ்கிருஷ்ணா, "டான்ஸ் மாஸ்டர்" என்ற இந்தப் படத்தை இயக்குகிறார்.

# கமல் சரிகா விவாகரத்து சிம்ரன் விவகாரம் தான் காரணமா?

கமலும் சரிகாவும் பிரியப் போகிறார்கள் என்பது தான் தற்போது பொலிவுட் சினிமா வட்டாரங்களில் பேசப்படும் ...டான செய்தி. இவர்களது பிரிவுக்குக் கமல்-சிம்ரன் விவகாரம் தான் காரணம் என்று ஒரு சிலர் சொல்ல, இல்லை வேறு ...ாறுகள் தான் காரணம் என்று கமல் தரப்பில் கூறப்படுகின்றது. எவ்வாறெனினும், விவாகரத்துச் செய்து கொள்ளப் ...ாகிறார்கள் என்பது மட்டும் உறுதியாகிவிட்டது.

கமலும் சரிகாவும் பொருத்தமான ஜோடியாகத்தான் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவர்களுடைய திருமணமே ...ட்சித் திருமணம் தான். முதல் மனைவி வாணி கணபதியுடனான திருமணம் விவாகரத்தில் முடிந்ததையடுத்து ...ருமணம் என்கின்ற அமைப்பின் மீதே நம்பிக்கையற்றிருந்தார் கமல். அதைப் பற்றித் தன் நெருங்கிய நண்பர்களிடம் ...ிரமாக விவாதமெல்லாம் அவர் செய்ததுண்டு. திடீரென்று எதிர்பாராத சூழ்நிலையில் சரிகாவை அவர் ...திக்க நேர்ந்தது. தன்னுடைய குடும்பத்தில் ஏற்பட்டிருந்த குழப்பங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டு, பாதுகாப் ...ற சூழ்நிலையில் அப்போதிருந்தார் சரிகா. தனிமையில் இருந்த கமல்ஹாசனுக்கும், சரிகாவுக்கும் இயல்பாகவே ...தல் துளிர்த்தது. பிறகு அது ரிலேஷன்ஷிப்பாக மாறியது. இருவருக்குமே சம்பிரதாயமான பழமையான ...த்தனைகள் கிடையாது என்பதால் திருமண பந்தம் வேண்டாம் என்று தீர்மானித்துச் சேர்ந்து வாழலாம் (...ving Together) என்று தான் முடிவெடுத்தார்கள். அதன்படியே ஒன்றாக வாழ ஆரம்பித்தார்கள்.

...திரிகையில் இருவரைப் பற்றியும் ஏகத்துக்கு எழுதித் தள்ளியும் அதைப் பற்றி அவர்கள் ...லைப்படவில்லை. "எங்களுக்குச் சரி என்று பட்டதைச் செய்கிறோம்" என்று தைரியமாகத் தங்கள் ...ழ்க்கையைத் தொடர்ந்தார்கள். முதல் குழந்தை பிறந்து, சில வருடங்களில் இரண்டாவது குழந்தையும் ...றந்தது. இனிமேலும் திருமணம் செய்துகொள்ளாமலிருப்பது சரியல்ல என்று சரிகா சொன்னவுடன் ...லும் அதற்கு ஒப்புக்கொண்டார். சிவாஜி முன்னிலையில் குழந்தைகளுடன் சிம்பிளாகத் திருமணமும் ...ந்தது. கமல் சினிமாத் தொழிலைத் தொடர்ந்தார். சரிகா மனைவியாகத் தன் பணிகளைச் ...ய்தார்.

ஆனாலும், சில ஆண்டுகள் கழித்து மெல்லமெல்ல இருவரிடமும் கருத்து வேறுபாடுகள் தோன்ற ...ரம்பித்தன. தன்னுடைய பிஸியான செட்யூலின் காரணமாக கமலால் சில சமயங்களில் வீட்டில் ...க்க முடியாமல் போனது. ஏற்கெனவே திரைத்துறையில் பிஸியாகவே இருந்து பழக்கப்பட்ட ...ாவுக்கும் அந்தச் சூழ்நிலை மனஇறுக்கத்தைக் கொடுக்க ஆரம்பித்தது. நிறைய விவாதங்கள், ...விக்கணைகள்...

கருத்து வேறுபாடுகள் அதிகரிக்க அதிகரிக்கவே இருவரும் ஒரே வீட்டில் வெவ்வேறு அறை... வசிக்க ஆரம்பித்தார்கள். உறங்குவதும் வெவ்வேறு படுக்கைகளில் தான் என்று கேள்வி. ...த மூன்று வருடங்களாகவே இந்த எதிரும் புதிருமான நிலை தொடர்ந்திருக்கிறது. இரு...க்குமிடையேயான சகஜமான பேச்சுவார்த்தை என்பது மெல்ல மெல்லக் குறைந்து எப்போதும் சண்டை வெடிக்கும் சென்னிடிவ்வான இடமாக வீடு மாற ஆரம்பித்தது.

இத்தனை பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணம் கமலுடைய சினிமாத் தொழில் தான் என்று நினைத்த சரிகா, கமலை சினிமாவிலிருந்து விலகும்படி சொல்ல ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது.

கருத்து வேறுபாடு முற்றி இன்னும் தொடர முடியாது என்கின்ற நிலை கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஏற்படவே, டைவர்ஸ் யோசனையைச் சொல்லியிருக்கிறார் சரிகா. கமலுக்கு முதலில் இதில் சம்மதமில்லை. ஆனாலும், பிரச்சனை முற்றி வேறு விதமாகப் போய்விடக்கூடாது என்று எண்ணி ஒப்புக் கொண்டு விட்டார்.

இதற்கிடையில் தான் சிம்ரனுக்கும், கமலுக்கும் இடையில் நெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பம்மல் கே. சம்பந்தம் படப்பிடிப்பில் ஆரம்பித்த இந்த உறவு தொடர்கிறது. இந்த விவகாரமும் கமலின் விவாகரத்து முடிவுக்குத் தூபமிட்டிருக்கலாம் என்ற அபிப்பிராயமும் நிலவுகிறது.

## அஜித்தின் அடுத்த படம் 'திருடா'

"ரெட்" படத்தின் படுதோல்வியால் துவண்டு ...ாய்விட்டார் அஜித். மிக மோசமான டைரக்ஷ...க்கு எடுத்துக்காட்டாக அந்தப் படம் அமைந்தது. ...து ரேட்டை அதிகரிக்க நினைத்திருந்த அஜித்துக்கு ரெட்டின் தோல்வி பெரும் அடிதான்.

ஆஸ்திரேலியாவில் ஜாலியாக இருந்த அஜித் ...கு ரெட் படத்தின் படு ஊத்தல் பற்றித் தகவல் ... உடனே தனது ஹாலிடேயை ரத்துச் செய்து...ட்டு ஊர் திரும்பிவிட்டார்.

அடுத்த படத்திற்குத் தயாராகிவிட்டார். அவர் ...ஜெயகாந்தை வைத்து "வாஞ்சிநாதன்" படத்தை ... இந்தப் படத்தை இயக்கவுள்ளார். ...மான 'சார்லி சாப்ளினை'த் தயாரித்த ரோஜா ...

...உள்ளிட்ட பிற கலைஞர்கள் இன்னும் முடிவு ... ஷங்கர் ராஜா என்று முடிவு செய்துவிட்டார்கள். ...ால்கிறார்கள்.

...றார். ராஜு சுந்தரம் தான் நடனம். படத்தின் ...கொண்டதால் சரிந்து கொண்டுள்ள அஜித்தின் ...மையுமாம். ரசிகர்களின் மனதைத் திருடினால்



## கல்யாணத்துக்கு முன்பே கால்கட்டு!

தமிழ்ப் படப்பிடிப்புக்கு வரும் 'மஜ்னு' காதலி நடிகை காலில் ஒரு பெரியகட்டுப் போட்டு வருகிறாராம். இங்கேயிருந்து மும்பை சென்றதும் கால்கட்டை அவிழ்த்து விடுகிறாராம். என்ன காரணம் என்று விசாரித்ததில் அம்மணிக்கு வெயிட்டான இந்திப் படவாய்ப்பு ஒன்று கிடைக்க உள்ளதாம். அதற்கான பேச்சுவார்த்தை மும்பையில் தீவிரமாக நடந்து வருகிறது. இதற்கிடையில் தமிழில் ஒப்புக் கொண்ட சில படங்களைத் தவிர்ப்பதற்காகவே இப்படி கால்கட்டாம்!

## தமிழா... தமிழா...!

அதிகம் பேசாத இயக்குநரும், மெகா பட்ஜெட் டைரக்டரும், தமிழ் தெரியாத மும்பை தேவதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள்! இவர்களது மனது இப்போது சடாரென்று அலைபாய ஆரம்பித்து விட்டதாம். திடீரென்று தமிழ் மொழியின் காதலர்களாகிவிட்ட இருவரும் இனி தங்களது புதிய படங்களுக்குத் தமிழ் நன்றாகப் பேசத் தெரிந்த நாயகி, நாயகிகளுக்கு மட்டுமே வாய்ப்பளிக்க முடிவெடுத்திருக்கிறார்களாம். வாழ்க ஜென்டில்மேன்கள்! வளர்க தமிழ்!




## சினி விசிட்

## முள்ளும் மலரும்...

மூன்று பூக்களில் ஒரு பூவான தொடையழகி, தன் குடும்பப் படமாகத் தயாரித்துவரும் 'மூன்று மலர்கள்' படத்தைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாராம். படத் தயாரிப்பாளர்களில் ஒருவரான, நடிகையின் உடன்பிறப்புதான் மேற்படி நிலைமைக்குக் காரணமாம். படக் கலைஞர்களின் சம்பளத்தில் 'பர்ஸன்டேஜ்' பேசிக் கணிசமான தொகையைக் கறந்துவிட்ட சகோதரத் தயாரிப்பு, அத்துடன் நில்லாமல் ஒவ்வொரு நாள் ஷூட்டிங்கிலும், ஒரு லம்ப்பான தொகையை ஒதுக்கிக் கொள்கிறாராம். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நடிகை, ஒரு கட்டத்தில் பொங்கியெழுந்து விட்டாராம். 'இனி அவனே படத்தைத் தயாரிக்கட்டும்... நான் வேண்டுமானால் ஃப்ரீயாக நடித்துத் தருகிறேன்!' என்று ஸ்ட்ரிக்ட்டாகச் சொல்லி விட்டாராம். 'இத்தனை நாள் சுருட்டியதில் மீதிப் படத்தை எடுக்க முடியுமா... இல்லை இத்தோடு நழுவி விடுவோமா?' என்று யோசித்து வருகிறாராம் பாசமான சகோதரர்.

## மாதவன்-ரெய்மா சென் நடிக்கும் 'ரன்'

வெள்ளிவிழாப் பட நிறுவனமாம் ஸ்ரீ சூர்யா மூவிஸ் சார்பில் ஏ.எம்.ரத்னம் அதிக பொருட்செலவில் தயாரிக்கும் மிகப் பிரமாண்டமான படம் "ரன்". இந்தப் படத்தின் கதை, திரைக்கதை எழுதி என்.லிங்குசாமி இயக்குகிறார். இவர் 'ஆனந்தம்' வெள்ளிவிழாப் படத்தை இயக்கியவர்.

## ஷகீலாவின் 'அன்புத் தொல்லை'

தமிழில் ஏற்கனவே சில படங்களில் நடித்துள்ளார் கேரளத்து கவர்ச்சி 'லாரி' ஷகீலா. இப்போது மலையாளத்தில் 1000 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் ஏற்படுத்தும் ரோல்களில் 'நடித்து' வருகிறார்.

முன்பெல்லாம் மம்முட்டி, மோகன்லால் ஆகியோரின் படங்களை இவரது காலை 11 மணிக் காட்சி படங்கள் வசூலில் தூக்கிச் சாப்பிடும். ஆனால், இந்த வரவேற்பு படிப்படியாக குறைந்து வருகிறது.

இதனால் மீண்டும் தமிழுக்கு வருகிறார். தமிழில் ஒரு இடத்தைப் பிடித்துவிடலாம் என்று நம்புகிறாராம். இதனால் இழுத்துப் போர்த்திக் கொண்டு நடிக்கவுள்ளார். நடிக்கவுள்ள படத்தின் பெயர் 'அன்புத் தொல்லை'. அட்ராசக்கை....

திருப்பதி வெங்கடாஜலபதி பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில் ஷகீலா முக்கிய வேடத்தில் நடிக்கிறார். அவரது கவர்ச்சி இமேஜைத் தகர்த்து அருமையான கேரக்டர் ஆர்ட்டிஸ்ட் என்ற பெயர் கிடைக்கும் வகையில் அவரது ரோல் அமைந்துள்ளதாக படத்தின் டைரக்டர் ஹயாத் கூறுகிறார்.

அன்புத் தொல்லையில் பாண்டியராஜனும், சின்னிஜெயந்த்தும் நடிக்கிறார்கள். இருவரும் அண்ணன் தம்பிகளாக வருகிறார்கள். பாண்டியராஜனுக்கு ஜோடியாக வருகிறார் சீமைப் பசு என்று செல்லமாக அழைக்கப்படும் ரவளி.

இவர்கள் தவிர 'எழவு' வினுச் சக்கரவர்த்தி, ஆர்.சுந்தர்ராஜன், 'புர்ர்ர்' வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு சௌந்தர்யன் இந்தப் படத்திற்கு இசையமைக்கிறார்.

ஒரு பக்கம் ஷகீலா, இன்னொரு பக்கம் ரவளி... படம் எப்படி இருக்கப் போகிறது என்பதை நாம் கண்ணை மூடாமலே கற்பனை செய்து பார்த்துக் கொள்ள முடியும்!



பிரகாஷ்ராஜ்-மீனா
படம்: தயா

## மீண்டும், மீண்டும் காதல்!

'ஆளவந்தானின் உதவியாளராய் இருந்து இப்போது டைரக்டரானவர் அரவிந்த இயக்குனர். 'மனைவி தேவை' படத்தில் 'குட்மார்னிங்' சொன்ன நடிகையின் வலையில் சிக்கி கல்யாணமும் செய்து கொண்டாராம். சரி, கல்யாணம் செய்து கொள்வது தப்பில்லையே என்று உடனடியாகச் சிந்திப்பவர்கள் ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கள். அந்த டைரக்டர் ஏற்கெனவே காதலித்து மணம் முடித்தவர். இப்போது, சினிமா டெவலப்மெண்ட்டுக்காக நடிகையையும் திருமணம் செய்து கொண்டார். டைரக்டரே, காதலை இரண்டுமுறை செய்யலாமா?



## வயது வந்தவர்களுக்கு...

தாம்பத்ய தாற்பரியத்தைக்
கொச்சைப்படுத்தி
கவிதைகளாய்
சொல்ல வேண்டிய
கலவியினை
விரசமாய்
விபரிக்கிறார்கள்!
***
உள்ளத்தால்
உரைக்கவேண்டிய
உண்மையன்பினை வெறும்
உடல்களினால்
உரசிக்காட்டுகிறார்கள்!
***
வாழ்க்கையில்
வசந்தமாக்க வேண்டிய
இரவுகளுக்குக்
கோடையைக்
கற்பித்துக் காட்டுகின்றார்கள்!
***
விழிகளாலே
விரகம் விரிய
மனதிலே
காமத் தீ எரிய
வாலிபத்திற்கு
போலியானதொரு
வடிகாலை இடுகின்றார்கள்!
***
நிச்சலமான உடல்களுக்கு
உணர்ச்சிக் கனவூட்டி
எதிர்காலங்களையெல்லாம்
எரித்துச் சாம்பராக்குகின்றனர்!
***
நிலத்தைக் காட்டி
நீண்ட ஆசைகளுக்கு
முற்றுப்புள்ளியிட்டு
முடிவுரை தீட்டுகின்றனர்!

தாராபுரம் நிலாம், பாலாவி.

## என் குழந்தைக்காய்...

என்னுயிரின் அசைவில்
உன்வரவைக் கண்டேன்
உன் இமையசைவில் நான்
நான் என்னை மறந்தேன் உன்
விரலசைவில் நான்
மயங்கிப் போனேன் உன்
சிரிப்பைத் தான் நான் ரசித்த
முதலழகு என்பேன் உன்
தலையசைவில் நான் பணிந்து
நின்றேன் உன் பாத அசைவினால்
நான் மலர்ந்து நின்றேன் உன்
உடலசைவில் இந்த உலகை
மறந்தேன் உன் தோளசைவில்
நான் தொலைந்து போனேன்
உன் வாயசைவில் ஒரு விடியலைக்
கண்டேன் உன் மூக்கசைவில்
நான் முகம் மலர்ந்து நின்றேன்
உன் இருதொடை அசைவில் நான்
தொல்லைகளை மறந்தேன்
மொத்தத்தில் நாட்கள் நகரும்
பொழுதசைவில் உன்னை உன்
நினைவுகளை நான்
சுமந்து மகிழ்கிறேன்.

திருமதி.பிரியா கணநாதன், நோர்வூட், ஹற்றன்.

## எனது விருப்பமெல்லாம்..!

என்னோடிருந்த மேகமே...
இடிகளை மட்டும்
எனக்குத் தந்துவிட்டு
மழையாய் நீ
வேறோருவன் மேல்
பொழியப் போகின்றாய்...
***
வெளியே சொல்ல முடியாமல்
வேதனைகளைச்
சுமந்து சுமந்து
நான் சுருண்டு விட்டேன்!
***
தவறு யார் பக்கம்?
நீ ஏதோவொன்றை
காதல் என்று
நாகரிகமாகச்
சொல்லியிருக்கிறாய்
நான்
காதலைக் காதல் என்றே
தெரிவித்திருக்கிறேன்!
நடந்தது இது தான்!
***
உறவென்று வந்து என்
உயிரில் தீயிட்டுப் போகிறவளே!
எனக்கு மட்டும் தான் தெரியும்
என் காதலின் வலி!
***
நீ அதைப் புரியும் நிலையிலில்லை
இந்தச் சமூகத்தோடு சேர்ந்து
நிறம் மாறியது
நீ தான்!
***
ஆதலால்...
பூக்களின் புன்னகைப் புராணம்
விரும்பிய உனக்கு
வேர்களின் கண்ணீர் கதை
தெரிவது எப்படி?
***
நடந்தது நடந்தும்
உனது துரோகச் செயலை
மறந்து விட்டு உன்னை
வாழ்த்திப் பழகிய நான்
இப்போதும் உன்னை
வாழ்த்தியபடி தான்!
***
எனது விருப்பமெல்லாம்
நீ எப்போதும்
நலமாக இருக்க வேண்டும்
என்பதே!
என் சாவிலும் உன்
நலம் கேட்டபடியே
நான் சாவேன்!!!

என். தனுசுஜன், சண்டிலிப்பாய்.

## மனசுக்குள் ஒரு புயல்...

தூக்கமிழந்த
ஒவ்வொரு இரவும்
என்னையுமறியாமல்
பேய் விரித்தாடும்
உனது நினைவுகள்!
***
மனசுக்குள்...
இறுகப்பூட்டிய நினைவுகளுடன்
எத்தனை இரவுகள்
தூக்கத்தைக் களவாடுவது?
கண்ணயரும் நேரமெல்லாம்
தூது சொல்ல,
தூக்கமலைக்கும்
தொலைபேசி கூட
சுகமாய் தூங்குகிறதே!
***
அக்கரையிலிருந்து
அமைதிப் போராட்டம்
நடத்துகின்றாய் -நீ
காதலுக்காக...,
நானோ மௌனமாக...
சிலந்தி வலையில்
சிக்குண்ட கனவுகளைச்
சிதறாமல்
பிரித்துக் கொண்டிருக்கிறேன்!
***
அடிமனது
அலங்கோலமாக
பிய்த்தெறியப்பட்டிருக்கிறது
களங்கமில்லாத நேசத்திற்காக!
சிநேகிதர்கள் தந்த
சீதனங்கள் இது!
***
கேலிக் கூத்தான தேசத்திற்குள்
நமக்காக
எங்கொரு மூலையில் இடமிருக்குமோ?
துயரத்தால் கனத்த
இதயத்தை
மயிலிறகுத் தூரிகையால்
எண்ணெய் தோய்த்து
ஒத்தடம் செய்திட!
***
பேய், பிசாசுகள்
பிணந்தின்னும் கழுகுகள்
பிடரியைப் பிடித்துத் தள்ளுகின்றன!
***
காதலிப்பது பாவமா?
***
தூக்கமிழந்த
ஒவ்வொரு இரவும்
என்னையுமறியாமல்
பேய் விரித்தாடும்
உனது நினைவுகள்!

முகம்மது ஹாரீத், அட்டாளைச்சேனை-11.

## கலக்கம்!

கதிரவனும் தான்
மிகத் தொலைவிலுள்ளான்
பூமியை முத்தமிட முடியவில்லையே
என அவன் கலங்கியதுண்டா?

அன்பே தொலைவிலிருந்து
துன்பத்தைத் தரும் வித்தையை
நீ எங்கு கற்றாய்?

என்றும் மணம்வீசும் மலராக
நீ இருந்து விட்டுப் போ!

நான் உன்னில் இலையாக
இருப்பதற்குத் தானே
இறைஞ்சுகிறேன்!

பல முட்களை என்னில்
ஏற்றுக்கொண்டு உன்னை
நெருங்கத் தவிக்கிறேன்
அன்பே!

ஓ... ஒன்று கூற மறந்துவிட்டேன்

கதிரவன் தன் கதிர்
முத்தங்களால் சரி
பூமிக் கன்னத்தைத்
தினம் வருடிச் செல்கிறான்;
தடம் பதித்துச் செல்கிறான்,
ஆனால் நீ?
குறைந்தது உன் பார்வையைச் சரி
இவன் மேல்
பதித்துவிட்டுப் போகமாட்டாயா?

சில நேரம் நான் அழுகின்றேன்
எனக்கெதற்குக் காதலென்று!

ஆனால், கண்ணீரில் உன் விம்பம்
கண்டு மீண்டும் சிரிக்கின்றேன்,
நீ எனக்கு வேண்டுமென்று!

உன் பார்வையைச் சரி இவன்
மேல் பதித்துவிட்டுப் போ
என் கண்ணே!

வட்டகொடை, சி.சிவகுமாரன்.

## மரணவேதனை

மரணம் ஒரு
மடையன்!
இல்லையென்றால்...
மலர்களை
மணந்து
மண்ணுக்குள்
மறைப்பதில்
மனம் விரும்புவானா?
மொட்டுக்கள்
முத்துச்சரங்கள் -ஆகும்
முன்னரே
சமாதிகளாகின்றன!
அன்பின்
ஆழங்கள்
அர்த்தங்கள் என்பதன்
அடிச்சுவடுகள்
அறியாத
அரக்கனும் இந்த
மரணம் எனும்
மடையன் தான்!
முதலும்
முடிவுமற்றவன் இதன்
மூலகாரணியாகிறான்...
அவன்
உறவுகளில் -ஒன்றை
இழந்திருந்தால்...
மனிதனின்
மனவேதனை
உணர்ந்திருப்பான்!
அவனுக்கென்ன...
உல்லாசமாக
உயிர்களைப் பறிக்கிறான்!
உருக்குலைந்து போவது நம்
உள்ளமல்லவா?
பூமியின்
மேற்பகுதியில்
மேன்மையான
நல்வளங்கள்
இருந்தாலும் -அதன்
அடியிலே தீயாறு
ஓடிக்கொண்டிருப்பது போல்...
உலகிற்காக
உதடுகள் புன்னகை
உதிர்த்தாலும்...
இதயம் என்னவோ
ஓலமிட்டு
ஒப்பாரி வைக்கிறது!

என்.ஜெ.நிலா, உடப்பு.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். சுதா
வயது: 26
முகவரி:
769, HARROW ROAD,
KENSAL GREEN
NW 10 5PA,
LONDON.U.K.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரி.வி.



பெயர்:
எச்.எம். றம்சின்
வயது: 17
முகவரி:
551, காயர் வீதி,
ஏறாவூர்-02.
பொழுது போக்கு:
கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்:
ரா. மெய்யழகன்
வயது: 30
முகவரி:
140, பிரதான வீதி,
கொழும்பு-11.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

## தேன் கிண்ணம்

## நில் கவனி முன்னேறு

எப்பொழுதும் கடுகடுப்பாகவும் கோபமாகவும் நடந்துகொள்ளாமல் இருப்பது நல்லது. நமக்குக் கீழ் வேலையைச் செய்பவர்களும் மனிதர்கள் என்று எண்ண வேண்டும்.

வாய்கு வந்தபடி திட்டுவதும் கோபப்பட்டு கத்துவதும் கூடாது.

சிறு சிறு குறைகளுக்கு எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுப்பதும் சரியல்ல. இப்படி இருந்தால் நம்மைப் பார்க்க வருபவர்கள் சிறிது அச்சத்துடனும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்வார்கள்.

பேச வேண்டியதை மட்டும் பேசிவிட்டு நிறுத்திக் கொள்வார்கள்.

இவருடைய முகராசி அப்படி அதனால்தான் அவரைப் பார்ப்பதற்கே அச்சமாக இருக்கிறது என்று பலரும் நம்பைப் பார்த்துச் சொல்லும் வகையில் இருக்காமல், அவரைப் பார்த்துவிட்டாலே போதும் மனப் பாரம் முழுவதும் குறைந்துவிடும் என்று புகழும்பாடியாக இருக்க வேண்டும்.

நம்மிடம் பேச வருபவர்களை அன்புடனும் மரியாதையுடனும் நடத்துவது மக்கியம். அவர்களுடைய குறைகளைக் கேட்டு ஆவண செய்ய வேண்டும்.

அப்பொழுதான் நம்மீது வைக்கும் அபிப்பிராயம் உயர்வாக இருக்கும். நம்முடைய மதிப்பு மிகவும் மேன்மை பெறும்.

**“பெருமைக்கும் ஏனையச் சிறுமைக்கும் தத்தம் கருமே கட்டளைக் கல”** என்று வள்ளுவர் கூறுகிறார். நம்மிடம் அறிவு இருக்கிறது. உடல் ஆரோக்கியம் உள்ளது. இதுதான் நன்மை தீமை என்பதனை அறியச் செய்யும் நன்மையான வழியைக் காட்டும்.

இந்த அறிவைக் கொண்டு அனைவரிடமும் அன்பாகவும். பாசமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு சொல் கூறப்படும் சூழ்நிலை. தன்மை, இடம் ஆகியவற்றைக்கொண்டு உண்மையை ஆராய்ந்து,அறிந்து எச்சரிக்கையுடன் பேச வேண்டும்.

குறிப்பால் உண்மையை விளங்கிக் கொண்டு அதற்கு எச்சரிக்கையுடன் செயலாற்றுவது அவசியமாகும்.

## உங்களை மதிக்க வேண்டுமாயின்...



மற்றவர் வாய்முடி இருந்தால் நாம் அவருடன் பேசும்பொழுது, அவருடைய மனநிலையை புரிந்து கொண்டு நுணுக்கமாக கவனித்து அறிவின் ஆழத்தையும், மனதின் தன்மையையும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

கவிதை நெஞ்சங்களுக்கு!

'சிறப்புக் கவிதை' என்ற புதிய பகுதி இவ்வாரம் முதல் ஆரம்பமாகின்றது. முரசின் கவிதை நெஞ்சங்களை மேலும் மகிழ்வூட்டும் 'புதிய தேன் கிண்ண'மாக இது அமையவிருக்கிறது.

ஒவ்வொரு வாரமும் ஒரு கவிஞரின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கவிதைகள் இடம் பெறும். இவ்வாரம் க.வை. பழனிசாமி எழுதிய 'நீ இல்லாது தனித்து' என்ற கவிதை பிரசுரமாகின்றது.

வாசித்து வியந்த சிறப்புக் கவிதைகள் இருப்பின் கவிஞர் பற்றிய சிறு குறிப்போட நீங்களும் இப்பகுதிக்கு கவிதைகளை அனுப்பிவைக்கலாம்.

## சிறப்புக் கவிதை

## நீ இல்லாது தனித்து

இன்று நீ
வீட்டிற்கு வரவிருக்கிறாய்.

உனது நினைவில்
தெப்பமாய் நனைந்திருக்கிறேன்.

குறித்த மாலை வேளை
நெருங்க.. நெருங்க

கால்களுக்கு
வீட்டு வாசலுக்கு மட்டுமே
நடக்கத் தெரிகிறது.

விழிகள்
வீதியின் எல்லைவரை
நொடிக்கு நூறு முறை
நடந்து.. நடந்து...

கண்களுக்குக்கூட
கால் வலிக்கிறது;

இதுவரை
வீட்டிற்கும் வாசலுக்கும்
நடந்த தூரத்தில்... நிலவிற்கே
பொட்டு வைத்துத் திரும்பியிருக்கலாம்.

தெருவிளக்கெல்லாம்
கண்திறந்து கொள்கிறதே!
நிச்சயம்
நீதான் வந்து கொண்டிருக்கிறாய்.

நீ வருவது தெரிந்ததும்
என் கண்கள்கூட
முகம் கழுவிக்கொண்டன

ஒழுங்கு படுத்திய வீட்டை
மீண்டும்... மீண்டும்
ஒழுங்குபடுத்துகிறேன்.

நீ வாசல் மிதித்து
வருகிறாய்.

எனக்கோ...
விடுதலை வீரனின்
விழிகளில் விரியும்
சுதந்திரக்கொடியாய்ச்
சுகமாய்த் தெரிகிறாய்.
-••-
காட்டு வழியில்
கைவிடப்பட்ட
குழந்தையின் கதறல்
கேட்டிருந்தால்...

கடல் விழியில்
துடுப்பை இழந்தவனின்
தவிப்பை
நீ தெரிந்திருந்தால்...

பூகம்பம் பற்றியிழுத்த
பூமியைப் பார்த்திருந்தால்....

தேசமில்லாதுபோன
அகதியின் அவலம்
அறிந்திருந்தால்....

பரட்சி வெடிக்காத
அடிமை நாட்டில்
நீ வாழ்ந்திருந்தால்....

என் நிலையை
நீ புரிந்திருப்பாய்.
-••-
நீ என்ன
திருவிழாத் தேரா?
ஆண்டுக்கு ஒருமுறை
அனுக்கிரகம் பெற்றுப்போக.
நீ என்ன
ஏறிஞ்சி மலரா?
குறித்த காலத்தில்
மட்டும்
குலுங்கிப் பூப்பதற்கு.
நீ என்ன
வெட்டியெடுத்த வைரமணியா?
விலை கொடுத்த வர்க்கம்
வீட்டில் பூட்டி வைப்பதற்கு.
நீ என்ன
உலகத்தின் அதிசயப்
பொருளா?
உல்லாசப் பயணிகள்
ஊர்வலமாய் வந்து
உன்னை உற்றுப் பார்ப்பதற்கு?
எதுவும் இல்லை நீ....
எனக்கு என்றே
என்றும் இருக்கும்
எனது 'ஜீவன்'.
-••-
மண்ணில்
மனிதனின் மூச்சு
எதுவாக இருக்கும்?

விஞ்ஞான வாய்ப்பாட்டில்
விடையைத் தேடாதே
கற்கால மனிதனின்
தற்கால வளர்ச்சிக்கு...
உச்சரித்த மந்திரம் எது?

சரித்திர ஏடுகளில்
சான்றுகளைத் தேடாதே.

இருபால் இணைவதே
வாழ்க்கையென்றால்...
விலங்குகள் கூட வாழ்கிறதே.

மிருக மொழி படித்த
மனிதனை
மனித மொழிக்கு
மாற்றியது யார்?

கண்களின் சந்திப்பில்
கை கோர்த்துக்கொண்டவர்கள்...

இறப்பின் எல்லைவரை
இதயங்களும் கைகோத்து வாழ
வித்தையை எங்குக் கற்றார்கள்!

காதல் இல்லையென்றால்
காலன் இல்லாத
மனிதனின்
காலம் முடிந்துவிடும்

உழவன்
பயிர்செய்து வாழ்வான்.

மனிதன்
காதல் என்ற
உயிர்செய்து வாழ்வான்.
-••-
காதல் வெளி
எனக்கு வானவெளி.

உனது நெருக்கம்
எனக்கு வண்ணச் சிறகுகள்.

சிறகுகள் சிதைந்துவிட்டால்
பறவைக்குச் சிறைதானே!

வாழ்க்கை
எனக்கு விரிந்த கடல்.

உனது பார்வை
எனக்குப் பயணப்படகு.

படகைப் பறித்துவிட்டால்
பயணம் ஏது?

எனது கால்கள்
மணல் மீது இல்லை.
கனல் மீது...
காயம்பட்டுக் கிடக்கின்றன.
-••-
நீயோ
தேராய் வலம்வந்தாய்.
வெறும் வீதியாய்
நான் நிற்க....
விடை பெற்றுச் சென்றாய்.

காதல்...
சந்தையில் காட்டும்
செப்பிடு வித்தையா?
காதல்...
சிந்தையில் செய்த
சத்தியம் அல்லவா?

உனது நினைவுகள்
வீதியில் வரைந்த மாக்கோலமா?
நாளை வாசலைப் பெருக்கிப்
புதுக்கோலமிட.

உன்னை மறந்துவிட
நீ என்ன பயணவழியில் வந்த
வழிப்போக்கனா?

நீ எனது ஜனனப் பாதையில்
நான் சந்தித்த
'உயிர் மூச்சு'
-••-
உன் வீடு தேடி
ஓடி வருகிறேன்.

உனது கோபர வீடு
குற்றவாளியாய்க்
கைகட்டி நிற்கிறது.

நீ இல்லாத உன்வீடு...
இறைவன் இல்லாத
ஆலயம்தானே!

நீர் இல்லாத... நிலம்
சூரியனைப் பார்க்காத... பூமி
காற்றுத் தழுவாத... உயிர்
இந்த வரிசைகளில்
நீ இல்லாத நான்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## கணவனுடன் சண்டையிடும் கலை

**த**ம்பதியருக்குள் சண்டை, சச்சரவுகள் இல்லாத குடும்பங்கள் அரிது. சண்டைகள் இல்லாத தாம்பத்தியம் சுவாரசியமும் இல்லாதது. உங்கள் கணவருடன் நீங்கள் சண்டை போடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய சில விஷயங்கள்.....

சண்டையின் போது சம்பந்தப்பட்ட விஷயத்தைப் பற்றி மட்டுமே பேசுங்கள். நடந்து முடிந்த அல்லது நடக்கப் போகிறவற்றைப் பற்றிப் பேசாதீர்கள்.

எல்லா உறவுகளும் உங்களிடம் ஒரே மாதிரிப் பழகுவார்கள் என்று நினைக்காதீர்கள். குறிப்பாகக் கணவன் உங்கள் விருப்பப்படி நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். அப்படி எதிர்பார்க்கும் போது தான் சண்டையே ஆரம்பமாகின்றது.

உங்கள் பக்கம் தவறு இருக்கிறது என்று தெரிந்தால் தயங்காமல் மன்னிப்புக் கேளுங்கள். அதில் "ஈகோ" பார்த்துக் கொண்டிருந்தால் சண்டை வலுக்குமே தவிர, சுமூகமாகாது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் சண்டையின் போது உங்கள் குடும்பங்களை இழுக்காதீர்கள். அது மிகவும் அநாகரீகமானது.

சண்டையின் போது நீங்கள் என்ன நினைக்கின்றீர்களோ, அதை மட்டுமே பேசுங்கள். அதை விட்டுவிட்டு, அந்தச் சாக்கில் உங்கள் கணவரைப் பற்றி உங்கள் வீட்டார், அக்கம்பக்கத்தினர், தெரிந்தவர்கள் என எல்லோர் சொல்கிற அபிப்பிராயங்களையும் சொல்லாதீர்கள்.

தவறு செய்யாத மனிதர்கள் உலகத்தில் கிடையாது. உங்கள் கணவர் தவறு செய்துவிட்டு, அது தெரிந்து உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறாரா, அப்போது தான் உங்கள் வீறாப்பைக் காட்ட வேண்டும் என்று முகத்தைத் திருப்பிக் கொள்ளாதீர்கள். மன்னிக்கிற மனோபாவம் மகத்தானது.

கோபத்தில் உங்கள் கணவரை மிஞ்ச ஆளில்லையா? கோபத்தில் அவர் பேசுகிற பேச்சுக்களைக் கேட்க உங்களுக்குக் காது கூசுகிறதா? அவருக்குச் சரியாக நீங்களும் பேசி, பேச்சை வளர்க்காதீர்கள். அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுங்கள். அவரது கோபம் தணிகிறவரை அந்தப் பக்கம் எட்டிப் பார்க்காதீர்கள்.

சண்டையின் போது இருவருமே பேசினால் தான் அது பெரிதாகிறது. எனவே, யாராவது ஒருவர் மட்டுமே அப்போது பேசுவது என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள். அது நீங்களா, உங்கள் கணவரா என்பதில் மறுபடி சண்டை வேண்டாம்.

காலையில் போடும் சண்டையை மாதக்கணக்கில் நினைவில் வைத்திருந்து மாய்ந்து போகாதீர்கள். அந்த நிமிடத்தோடு மறந்து விட்டு, அடுத்து சகஜமாகி விடுங்கள்.

சாதாரணமாக நீங்கள் ஆரம்பிக்கிற பேச்சு சண்டையில் போய் முடியும் போலத் தோன்றுகிறதா? அந்தப் பேச்சுக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்து விட்டு, மற்றொரு சந்தர்ப்பத்தில் பேசிக் கொள்ளுங்கள்.

உங்கள் சண்டையில் உங்கள் குடும்பத்தவராகவே இருந்தாலும், மூன்றாவது நபர்களைத் தலையிட அனுமதிக்க விடாதீர்கள். நீங்கள் இருவர் மட்டுமே பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள்.

எப்பேர்ப்பட்ட தலை போகிற சண்டையாக இருந்தாலும், உங்கள் குழந்தைகளுக்கு முன்னிலையில் வைத்துக் கொள்ளாதீர்கள். குழந்தைகளின் தலை தெரிந்தால் உடனே பேச்சை நிறுத்தி விடுங்கள்.

கணவரின் காட்டுக் கூச்சலைச் சகித்துக் கொள்ள முடியாவிட்டால், உடனே உங்களை வேறு விஷயங்களில் திசைதிருப்புங்கள். உதாரணத்திற்கு, வீட்டைச் சுத்தப்படுத்துங்கள், அயர்ண் செய்யுங்கள், தோட்டக்கலையில் ஈடுபடுங்கள். இப்படி இன்னும் பல...

சண்டை போடும் போது குரலை உயர்த்தாதீர்கள். மெதுவாகப் பேசியும் சண்டை போடலாம். சத்தமாகப் பேசி, அக்கம் பக்கத்து வீடுகளுக்கு உங்கள் வீட்டு விவகாரங்கள் தெரிகிற மாதிரி நடந்து கொள்ளாதீர்கள். ●


செல்வாஸின் 
சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** K

பெயர்:........................

முகவரி:..............................

....................................

தொழில்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-03-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**காலி வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எம்.ஸி.எஸ். முயீனா,
258, நாவின்ன, உலுவிட்டிகே, காலி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





"**ஏ**தாவது ப்ராப்ளமா?" என்றாள்.

"நத்திங்.. நத்திங்.. ஆபீஸ் விஷயமா பேசிக்கிட்டு இருக்கோம்."

"இப்ப நாம எங்கே போறோம்?"

"இந்த டிக்கெட்டைப் பார்த்துக்கிட்டு இரு..." என்றான் வைரவன்.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் டிக்கெட் அது. வைரவனுடன் உள்ளே நுழைந்த போது பல பொலீஸ்காரர்கள் அவனுக்கு சலாம் போடுவதைக் கவனித்தாள் அனிதா. ஏர்போட்டில் எல்லோரையும் தெரியும் போல! அவர்கள் இன்முகத்துடன் தான் வைரவனை வரவேற்றார்கள்.

"வெளிநாட்டில் எத்தனை நாள் வைரவன்?"

"ஒரு வாரம்... இல்லைன்னா ரெண்டு வாரம்... எல்லாம் இவளைப் பொறுத்தது..."

"ஜப்பான்ல பெரிய காண்ட்ராக்ட்டா? பேப்பர்ல போட்டிருந்தான்..."

"ஆமாம்..."

இமிக்ரேஷன், கஸ்டம்ஸ் என்று பல பகுதிகளைக் கடக்கும் போது கூட ஆபீஸ் சிப்பந்தி அருகேயே இருந்தான். அவன் பார்வை பலமுறை இங்குமங்கும் அலைவதை அனிதா கவனித்தாள். அவளுக்கு எதுவும் புரியவில்லை. ஏன் இந்த ராத்திரியில் இத்தனை விரைவாக முடிவெடுத்துத் தேனிலவுக்குப் போக வேண்டும்? பெட்டியில்லாமல், படுக்கையில்லாமல் வெறும் ப்ரீஃப்கேஸுடன் என்ன ஹனிமூன் இது..?

சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் விமானம் அது. அனிதா பெரிய விமானத்தில் சென்றதில்லை. வைரவனுடைய கம்பெனி விமானத்தை ஒரு முறை கண்ணில் காட்டியிருக்கிறான், ப்ளையிங் க்ளப்பின் அருகில்.

தானியங்கும் படிகளில் ஏறி மேலே சென்று பாலம் அமைத்த வாசல் வழி... முதல் வகுப்பு ஸீட்டில் ஏறிக்கொண்ட போது, புன்னகையுடன் வரவேற்ற பணிப்பெண், அவர்களுக்கு முகம் துடைத்துக் கொள்ள வாசனையுடன் கூடிய சூடான ஈர டவல் ஒன்றைக் கொடுத்தாள். ஜூஸ் கொடுத்தாள். அந்தப் பெண் மஞ்சளாக இருந்தாள். வேட்டி போலிருந்த கவுனில் ஒரு கால் தெரிந்தது. இருக்கைகள் விஸ்தாரமாக இருந்தன. ஹெட்போனில் தமிழ் சினிமா பாட்டுக் கேட்டது.

"எதுக்காக இவ்வளவு அவசரம்?" என்றாள்.

வைரவன் பதில் சொல்லவில்லை. அடிக்கடி பின்னால் பார்த்துக் கொண்டிருந்தான். எப்போது கதவுகள் மூடும்? என்று அடிக்கடி விசாரித்தான். தலைமேலிருந்த டிவி பெட்டி பயணிகளை வரவேற்க, ஆக்ஸிஜன் மாஸ்க் பிரயோகம், ஸீட்பெல்ட் அணிவது போன்ற சம்பிரதாயங்களை விளக்கிக்கூற, கதவுகள் மூடப்பட்டு விமானம் பின்னோக்கி இழுக்கப்படத் துவங்கியதும் தான் வைரவன் மூச்சுவிட்டான்.

"என்னவோ நீங்க என்கிட்டேயிருந்து மறைக்கிறீங்க..." என்றாள் அனிதா.

"எல்லாம் ஜப்பான்ல சொல்றேன்..." என்று நெற்றியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான் வைரவன்.

அனிதா, சிங்கப்பூர் ஏர்லைன்ஸின் பத்திரிகையைப் பிரித்து வழவழப்பான விளம்பரங்களைப் புரட்டினாள்.

பின்னால் இழுக்கப்பட்ட விமானம் நின்றது. இன்ஜின்கள் துவக்கப்பட்ட 'டும்' சத்தம் கேட்டது. கொஞ்ச நேரத்தில் அதன் சுருதி அதிகமாகியதும் வைரவன் முழுவதும் சுதாரித்துக் கொண்டு அனிதாவின் கன்னத்தைத் திருப்பி முத்தம் கொடுத்தான்.

"வி மேட் இட்..." என்றான்.

"எனக்குப் புரியவே இல்லை..."

சொல்றேன் அனிதா... ரொம்பப் பணக்காரனா இருக்கிறதாலே எனக்கு எதிரிகள் அதிகம். அவங்கள்லாம் சதி பண்ணி என்னைக் காட்டிக்கொடுக்க முயற்சி பண்றாங்க. சில வேளை பதுங்கிப்பாய வேண்டியிருக்கு. சில வேளை தலைமறைவாகவும் இருக்க வேண்டி வருது. இது தான் தக்க சமயம்னு பார்த்து..."

"என்ன சதி?"

"அது உனக்குச் சொன்னாப் புரியாது. கிரேடிட் டெஃபிஸிட் செக் டிஸ்கவுண்டிங்... எல்லாம் பாங்க்கிங் சமாசாரங்கள்..."

"என்ன... இன்ஜின் நின்னுடுத்து?" என்றாள் அனிதா.

"ஆமா..." என்ற வைரவன், ஹோஸ்டஸ்ஸைக் கூப்பிடுவதற்குள் விமான பைலட்டின் குரல், "திஸ் இஸ் யுவர் கேப்டன் ஸ்பீக்கிங்... அரசாங்க காரணங்களுக்காக விமானம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அரை மணி தாமதம் எதிர்பார்க்கப்படுகிறது..." என்றது.



வைரவன் எழுந்து டாய்லெட்டுக்குப் போனான்.

விமானத்தில் தற்காலிகமாக ஏணி அமைக்கப்பட்டு ஸஃபாரி ஸூட் அணிந்த

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

இருவர் கையில் ரேடியோவுடன் முதல் வகுப்பு இருக்கைகளை நோக்கி வந்தனர். அனிதாவின் அருகில் வந்து இருவர்... "மிஸ்டர் வைரவன் எங்கே?" என்று கேட்டார்கள்.

"பாத்ரூம் போயிருக்கிறார்..." அனிதா சொல்ல அவர்கள் காத்திருந்தார்கள்.

"எனிதிங் ராங்?" அனிதா கேட்டாள்.

அதற்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. பைலட் அவர்களருகில் வந்து விசாரிக்க- அவர்கள் பாத்ரூம் கதவருகில் சென்று கதவைத் தட்டினார்கள். கொஞ்ச நேரமாகியும் கதவு திறக்காததை உணர்ந்து, அந்தக் கதவை அவர்கள் சற்றே பலாத்காரம் பண்ணித் திறந்த போது அனிதாவின் இதயம் துடித்தது.

வைரவன் வெளியே வந்து, "என்னது இது?" என்றான்.

"மிஸ்டர் வைரவன்... ப்ளீஸ், எங்க கூட வாங்க..." என்றார்கள்.

அனிதாவுக்கு இது ஏதும் புரியவில்லை. "நீங்களும் வாங்கம்மா..." என்றார், ஓர் அதிகாரி.

அனிதாவுக்குப் பயமாக இருந்தது.

அனிதாவைப் பார்த்து "அனிதா பயப்படாதே... ஏதோ கேள்வி கேட்டகத்தான் கூப்பிடறாங்க..." என்ற வைரவன், அதிகாரியிடம் "அவள் போகலாம் இல்லையா?" என்று கேட்டான்.

"இல்லை... அவங்களும் வர வேண்டும்..."

பிளேனை விட்டுப் படி இறங்கி வெளியே வந்ததும், பத்திரிகை போட்டோகிராபர்கள் சூழ்ந்து பளிச் பளிச் சென்று போட்டோ எடுக்க, அந்த இரு அதிகாரிகளும் வைரவனைப் புஜத்தில் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் செல்ல, ஒரு பெண் போலீஸ் அதிகாரி- அனிதாவின் கரத்தைப்பிடித்து அழைத்துச் சென்றாள்.

"ஜென்டில்மென்... இவரை வெறுமனே விசாரணைக்காகத்தான் அழைச்சுக்கிட்டுப் போறோம்..." என்றார் அதிகாரி.

"அப்ப கைது பண்ணலையா?" -பத்திரிகைக்காரர்கள் கேட்க...

"இன்னும் இல்லை..."

ஒரு நிருபர், அனிதாவுடன் தொடர்ந்து வந்து "உங்க கணவர் அரசாங்கத்தை ஏமாற்றிய விஷயம் தெரியுமா?" என்றார்.

அதற்குள் மனித வெள்ளம் அவர்களைச் சூழ்ந்து கொள்ள, அவர்கள் பிரளயத்துடன் ஜீப்பில் திணிக்கப்பட்டனர். வைரவன் முகத்தை அனிதா ஒரு முறை பார்த்தபோது, "ஐம் ஸாரி..."என்றான்.

அனிதாவுக்கு அழுகை வந்தது. வைரவனிடம் அவள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. போலீஸ் கார் ஒன்றின் பின்பக்கத்தில் அனிதா திணிக்கப்பட்டு, கூட பெண் அதிகாரியும் ஏறிக்கொண்டாள்.


கார் புறப்பட்ட போது பல நிருபர்கள் ஓடி வந்தபடியே, அனிதாவிடம் கேள்வி கேட்டார்கள்.

"உங்களுக்கு விஷயம் தெரியாதுங்கறீங்களா? அவர் சொத்து முழுவதையும் அட்டாச் பண்ணப் போறாங்களாமே? உங்க கணவர் இதைப்பத்தி உங்ககிட்ட ஏதும் சொல்லலையா?"

[அனிதா வருவாள்...]



கண்திறந்திடவேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்.
-சுப்பரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# தங்கச் சங்கிலி!

மறைமலை அடிவாரத்தில் கருப்பண்ணன் என்னும் பயங்கரமான திருடன் மறைவாக வசித்துவந்தான். அவனிடம் ஆறு சீடர்களும் இருந்தார்கள். கருப்பண்ணன் அவர்களை ஆங்காங்கே கொள்ளையடிக்க அனுப்புவான். அவர்களும் மிக சாமர்த்தியமாகக் கொள்ளையடித்துப் பொன்னையும், பொருளையும் கொண்டு வந்து சேர்ப்பார்கள். அவற்றுள் பத்தில் ஒரு பங்கை ஆறு பாகமாகப் பிரித்து அவர்களுக்குப் பரிசாக அளித்து வந்தான். இதில் அந்த ஆறு பேருக்கும் அதிருப்தி இருந்தது.

அவர்களுள் ஒருவன் ஒரு நாள், "நாம் கொள்ளையடிக்கும் பொருட்களை கருப்பண்ணன் சாமிக்குக் கொடுக்காமல் நாமே எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம்" எனப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அருகில் இருந்த புதரில் ஒரு சலசலப்புஏற்பட்டது. யாரோ இவர்கள் பேசியதைக் கேட்டு விட்டார்கள் என்கிற பயத்தில் ஆறு பேரும் புதரைத் தேடவாரம்பித்தார்கள்.

அங்கே எட்டுவயதுச் சிறுமி ஒளிந்திருப்பதைக் கண்டுபிடித்து இழுத்து வந்தார்கள்.

"ஏய் பெண்ணே! நீ யார்? உன் பெயர் என்ன? எதற்கா நாங்கள் பேசியதை ஒட்டுக்கேட்டாய்?" என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டு போனார்கள்.

சிறுமி நடுங்கிப் போனாள். "என் பெயர் மீனா. என் பெற்றோர்கள் என்னைக் கண்ணைக் கட்டிக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள்.கட்டை அவிழ்த்துப் பார்த்த போது தான் நான் இங்கே இருப்பது தெரிந்தது. உங்களிடம் உதவி கேட்டுக் காட்டைக் கடக்கலாம் என்று வந்தேன். ஆனால், நீங்களோ கொள்ளையடிப்பதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள். நீங்களெல்லாம் திருடர்களா? என்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவீர்களா?" என்று நடுங்கியபடி கேட்டாள்.



அவளது கழுத்தில் தங்கச் சங்கிலி பளபளத்தது. காலில் கூட தங்கக் கொலுசு இருந்தது.

ஆறு பேரும் அவளை ஏற இறங்கப் பார்த்து படபடவெனச் சிரித்தார்கள். அவர்களுள் ஒருவன், "ஏ! பெண்ணே! அந்த நகையைக் கழற்றி எங்களிடம் கொடு" என்றான்.

மீனா பயந்து அழத் தொடங்கினாள். பிறகு ஓட ஆரம்பித்தாள். ஆறு பேரும் அவளைத் துரத்திப் பிடித்து கழுத்தில் உள்ள தங்கச் சங்கிலியைப் பிடித்தார்கள். அடுத்த நிமிடம் அது பாம்பாக மாறி அவர்களைப் பயமுறுத்தியது. என்ன ஆச்சரியம். அந்தச் சிறுமி மீனா ராட்சசியாக மாறி நின்றாள்.

ஆறு பேரும் குலைநடுங்க, "எங்களை விட்டுவிடுங்கள்" எனக் கெஞ்சினர்.

"உங்களுடைய எஜமானுக்குத் துரோகம் செய்ய நீங்கள் நினைத்தீர்கள். இந்த மரத்தின் மேல் குடியிருக்கும் நான் அதைக் கேட்டு குழந்தை வடிவத்தில் உங்களிடம் பேசினேன். பைத்தியக்காரர்களா யாராவது அழகிய குழந்தையைக் கொண்டு வந்து காட்டில் விடுவார்களா? நான் சொன்னதை அப்படியே முழுமையாக நம்பிய நீங்கள் அடிமுட்டாள்கள்" என்றாள்.

"நாங்கள் அப்படி நினைத்தது தவறு தான் என்பதை உணர்ந்து விட்டோம். எங்களை ஒன்றும் செய்துவிடாதே" என ஆறு பேரும் கீழே விழுந்து நமஸ்கரித்தார்கள். பின்னர் எழுந்தனர்.

இப்போது அங்கே இருந்த அந்த ராட்சசி மறைந்து மீனா தோன்றினாள்.

நீங்கள் திருந்திவிட்டீர்கள். நான் யார் தெரியுமா? அந்தக் கருப்பண்ண சாமியின் மூன்றாவது மகள். ஆம்! என் அப்பா தான் கருப்பண்ணசாமி. என் அப்பா ஒரு கொள்ளைக்காரர் என்பதைச் சொல்லிக்கொள்ள வெட்கமாக இருந்தது. அதனால் ஒரு மந்திரவாதியிடம் ராட்சசியாக உருமாறும் மந்திரத்தைக் கற்றேன். இது வேறு யாருக்கும் தெரியாது. உழைத்துச் சாப்பிடாமல் கொள்ளையடித்துப் பிழைப்பது பாவம் அல்லவா? இன்றைய தினத்திலிருந்து நீங்கள் என் அப்பாவுக்கு உதவக்கூடாது. அப்படி உதவாமல் இருந்தால் அவரும் திருந்தி விடுவார்." என்றபடியே தனது கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்து "இதை விற்று வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்ளுங்கள்" என்றாள். □

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **23.03.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **438**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 436

பரிசுக்குரியவர்:
திவ்யா மோகன்ராஜ்,
தபாற்கந்தோர் வீதி, மன்னார்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **டிராவிட் ஜொனதன்**<br>வோல்ஸ் லேன், கொழும்பு-15. | **கு.கஜானன்**<br>ஸ்ரீசித்தார்த்த றோட் பசேஜ், கிருலப்பனை. |
| **கந்தசாமி நித்தியா**<br>கடற்கரை வீதி, ஒந்தச்சிமடம். | **ஜெ.நிதுர்ஷா**<br>க/ இந்து தேசிய கல்லூரி, புசல்லாவை. |
| **எஸ். காயத்திரி**<br>நெலுக்குளம் நலன்புரி நிலையம், வவுனியா. | **எம்.எஸ்.எஸ்.ஜெஸ்மின்**<br>கல்/திகழி மு.ம.வி., ஏத்தாலை, புத்தளம். |
| **எல். பாராத்**<br>பலாங்கொடை த.ம.வி., பலாங்கொடை. | **எம்.ஐ.தில்றஸ் பானு**<br>அல்மனார் மத்திய கல்லூரி, மருதமுனை 2, கல்முனை. |
| **பாத்திமா மின்ஹாரா முஸாரிக்**<br>புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, கண்டி. | **பாஸ்கரன் ஹனுஷ்யா**<br>சாயி சேவா பாலர் பாடசாலை, காரைதீவு.(கி.மா) |

## விடுகதைகளும் விடைகளும்

01. ஒற்றைக்கண் மனிதன், ஓடியோடி வேலியடைப்பான். அவன் யார்?

02. இது தொட்டாற்சிணுங்கி அல்ல, தொட்டால் சுருங்கி. அது என்ன?

03. விசில் அடிப்பவனுக்கு, வீட்டில் தனியிடம். அது என்ன?

04. மூன்று கண்கள் உடையவன், சமையலில் இவன் பங்கு தனி. அவன் யார்?

05. தட்..தட்.. என்று தட்டினால், பட்..பட்.. என்று பதில் தருவான். அவன் யார்?

06. தண்ணீருக்குள் இருப்பவன், தரைக்கு வந்தால் தாங்கமாட்டான். அவன் யார்?

07. ஏழு கலரிலே வண்ண மானான், இதயமெல்லாம் எண்ண மானான். அவன் யார்?

08. நெருப்பில் வந்தவன், அலங்கரிக்க உதவுகிறான். அவன் யார்?

09. ஆயிரம் கலைஞர்கள் சேர்ந்து கட்டிய மண்டபம், அருகில் போய் பார்த்தால் இனிப்புச் சுரங்கம். அது என்ன?

10. ஓடுவான், பறப்பான், உயரத்தில் பார்வைக்குச் சிறுப்பான். அவன் யார்?

**விடைகள்**

10. விமானம்
09. தேன்கூடு
08. தங்க நகைகள்
07. வானவில்
06. மீன்
05. கம்பியூட்டர்
04. தேங்காய்
03. குக்கர்
02. பஞ்சமிட்டாய்
01. ஊசி-நூல்

## வித்தியாசமான அடையாளம்



நரிகள் தாங்கள் சாப்பிட்டது போக மிச்சமிருக்கும் உணவை பூமியில் புதைத்து வைக்கும். அப்போது அடையாளத்துக்காக அந்த இடத்தில் சிறுநீர் கழித்து விட்டுப் போகும்.



அன்டிலோப்ஸ் எனப்படும் ஒருவகை கறுப்பு மான்கள் சிறுநீர் கழித்து அந்த ஈரத்தைத் தங்கள் பாதங்களில் பரப்பிக் கொண்டு நடக்கின்றன. அதன் பாதச்சுவட்டில் இருந்து வரும் வாசனை மூலம் தங்கள் இனத்தவர்களுக்கு தங்கள் அருகாமையைத் தெரிவிக்கின்றன.



குரங்கு போன்ற அமைப்பைக் கொண்ட லெமூர் என்ற மிருகம் தேவையான அளவுக்குச் சிறுநீரைக் கழித்து, அதன் உருவத்தைக் கால்களால் பதித்துவிட்டுப் போகும். இப்படி அவை தன் இருப்பிடத்தை தங்கள் இனத்துக்குத் தெரிவிக்கின்ற

## விதியின் விளையாட்டு

பீரங்கியின் போர் முரசை
பின்னாலிருந்து தூண்டிவிட்டு
உறங்கிக்கிடப்பவன் முதுகில்
உரசிப்பார்த்து
குளிர் காய்ந்து கொள்ளும் பூதமாய்
குறைந்தவன் என்று நினைத்து
ஆப்கான் மக்களை
அநியாயமாய் பணயம் வைத்து
வல்லரசு என்ற செருக்கில்
வன்மையாய் மக்களை அகதியாக்கி
சரமாரியாய் உன் விமான மழையைப்
பொழிந்து
சர்ச்சைகளை நீ எழப்பிவிட
மீண்டும் ஒரு உலக யுத்தம்-இதில்
அமெரிக்காவும் குற்றிவாளியல்ல
ஜோர்ஜும் குற்றவாளியல்ல
ஒசாமாவும் குற்றவாளியல்ல-விரைவில்
விதியென்னும் விளையாட்டில்
வீதிக்கு வருவர் பலகோடி மக்கள்.

யோ.அனுஷாந், தரம்-11,
தி/புனித அந்தோனியார் ம.வி., மூதூர்.

## பழங்களின் நாடுகள்

திராட்சைப் பழம் - கஸ்பியன்கடல் பகுதி
தோடம்பழம் - சீனா
எலுமிச்சம்பழம் - இந்தியா
அன்னாசிப்பழம் - பிரேஸில்
வாழைப்பழம் - தென் கிழக்கு ஆசியா
நெல்லிப்பழம் - இந்தியா
கொய்யாப்பழம் - மத்திய அமெரிக்கா
பலாப்பழம் - இந்தியா
பப்பாசிப்பழம் - மெக்ஸிக்கோ
முந்திரிகைப்பழம் - பிரேஸில்
மாம்பழம் - தென்கிழக்கு ஆசியா

தொகுப்பு:-றாமேஸ்வர், யாழ்ப்பாணம்.

## விஞ்ஞான விளக்கங்கள்

1. சவர்க்காரம் தயாரிக்க அலுமினியப்பாத்திரம் உகந்ததல்ல

★ சவர்க்கார தயாரிப்புக்கு எரிசோடா பயன்படுத்தப்படுவதால் அலுமினியப் பாத்திரம் அரிப்புக்குள்ளாகும்.

2. விதைப்பதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் "பரக்குவாட்" விசிறல் வேண்டும்.

★ பரக்குவாட் என்பது ஒரு களை கொல்லியாகும். இதைப்பயன்படுத்தி களைகள் அழிக்கப்படும். பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

3. அடுப்பை ஊதுவதனால் எரிகின்றது. மெழுகுதிரியை ஊதுவதனால் அணைகின்றது.

★ அடுப்புக்கு ஒட்சிசன் கிடைப்பதனால் அது எரிகின்றது. ஆனால் மெழுகுதிரியை ஊதும்போது அதனுடன் தொடர்புற்றிருக்கும் மெழுகு ஆவி தொடர்பை இழக்கின்றது. இதனால் அணைந்து விடுகின்றது.

4. வாண வெடிகளில் பல நிறங்களில் ஒளிகள் வெளிவருகின்றன.

★ வாண வெடிகள் உருவாக்கப்படும் போது பல்வேறு இரசாயன உப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ் இரசாயன உப்புக்களே பல நிறங்கள் உருவாகக் காரணமாக அமைகிறது.

5. வான மண்டலத்தில் நட்சத்திரங்களும் கிரகங்களும் அந்தரத்தில் உள்ளன.

★ நட்சத்திரங்களும் கிரகங்களும் ஒன்றையொன்று தம் ஈர்ப்புத் தன்மையால் கவர்ந்துள்ளதால்தான் அவ் வாறு உள்ளன. இதை விளக்கிய விஞ்ஞானி நியூற்றன் ஆவார்.

6. கடல் நீல நிறமானதாகும். ஆனால் செங்கடல் மட்டும் சிவப்பாக இருக்கிறது.

★ செங்கடலில் ஒருவகை சிவப்பு நிறத் தாவர அல்கா வாழுகின்றது. இதுவே சிவப்பு நிறத்துக்கு காரணம் ஆகும்.

தொகுப்பு:-கு.நிருசனா-தம்பிலுவில்-02.

# இப்படியும் ஒரு.....

சீராக ஓடிக்கொண்டிருந்த அந்த பஸ் திடீரென்று தனது வேகத்தைக் குறைத்துக் கொண்டு நின்றது. ரவி ஜன்னலால் எட்டிப் பார்த்தான். அது ஒரு சோதனைச் சாவடி.

"எல்லோரும் உங்கடை ஐசியை எடுத்துக் கொண்டு இறங்குங்கோ" என்று சிங்களத்தில் கூறினார் பஸ் நடத்துநர். பஸ்ஸுக்குள் சிங்களம் தெரியாதவர்கள் சிலரும் இருந்திருக்க வேண்டும். தபுறுவென்று முழுசினபடி இறங்கினார்கள். தமிழர்களின் முகங்க



ளில் பயம் தெரிந்தது. சிங்களவர்களின் முகங்களில் வெறுப்புத் தெரிந்தது.

எல்லோரும் இரண்டு நிரையாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். சிலரிடம் பொலிஸ் ரிப்போர்ட் கேட்கப்பட்டது. துருவித்துருவிக் கேள்விகள் கேட்கப்பட்டன. அவர்கள் நிச்சயமாகத் தமிழர்களாகத் தான் இருக்க வேண்டும். அடையாள அட்டையில்லாத ஒரு அறுபது வயதுக் கிழவி எச்சரித்து அனுப்பப்பட்டாள்.

ரவி தனது மீசையையும், தாடியையும் தடவியபடி கடவுளை நினைத்துக் கொண்டான். இப்போ ரவிக்கு முன் நின்றவனின் முறை வந்தது. அவனும் ஒரு தமிழன் தான். நல்ல வாட்டசாட்டமாக, ஸ்ரைலாகவும் இருந்தான். அவனுடைய ஐசியைப் புரட்டிப் புரட்டிப் பார்த்த இராணுவவீரன் பொலிஸ் றிப்போர்ட்டையும் கேட்டான். அவன் அதையும் கொடுத்தான்.

"பொன்னுத்துரை திவாகரனை, பென்னுத்திரை தவாகரன்" என்று ஆங்கில எழுத்துக்களைக் கூட்டிக் கூட்டி வாசித்த இராணுவவீரனுக்கு அவன் மீதுள்ள சந்தேகம் தீரவில்லை என்பது தெரிந்தது. ஒரு தடவை அவனை அணில் ஏறவிட்ட நாய் மாதிரி அவனின் கால்முதல் தலைவரை பார்த்த இராணுவவீரன்,

"எங்கை போறது?"

"வேலைக்குப் போறன்" என்றான்.

"எத்தனை வயசு?"

"முப்பத்திரெண்டு" என்றான்.

"திருமணம் முடிச்சிட்டியா?"

"இல்லை" என்றான்.

இராணுவ வீரனின் முகம் ஒரு தடவை மலர்ந்தது. ஜோர்ஜ் புஸ், பின்லேடனைப் பிடிச்சால் எந்தளவு சந்தோஷப்படுவாரோ? அந்தளவு சந்தோஷம்.

"ஏன் இன்னும் திருமணம் முடிக்க வில்லை?" இராணுவவீரன் கேட்டான்.

"......" அவனால் பதில் சொல்ல முடியவில்லை. முழுசினான்.

"இங்கேயே நில்!"

ஒரு பயங்கரவாதியைப் பிடித்த பெருமை இராணுவவீரனின் முகத்தில் தெரிந்தது. அந்த இளைஞனைத் தவிர மற்ற எல்லோரும் போய் பஸ்ஸில் ஏறிக்கொண்டார்கள். பஸ் புறப்பட்டது. இந்த நாட்டில் திருமணம் கட்டாய

**இணுவில் உத்திரன்**

சட்டமாக்கப்படவில்லையே! ஒரு வேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இப்படி ஏதாவது ஷரத்துக்கள் இருக்குமோ என்னவோ? அவனுக்குக் காதல் தோல்வியோ? கடன்பொறுப்போ? என்ன பிரச்சனையோ யார் கண்டது? கடவுளே இப்படியும் ஒரு சந்தேகமா?

வீட்டுக்கு வந்தவுடன் உடனடியாகத் தன் தகப்பனுக்கு ஒரு கடிதம் எழுதினான் ரவி,

அப்பா! உடனடியாக எனக்குப் பெண் பார்க்கவும். பெண் கறுப்போ, சிவப்போ, யாராக இருந்தாலும் பரவாயில்லை. எனக்கு அவசரமாக ஒரு கல்யாணம் செய்து வைக்கவும்.

இப்படிக்கு, ரவி.

முப்பத்திரெண்டு வயது நிரம்பிய அவனுக்கு அந்தக் கெதியெண்டால், முப்பத்தாறு வயது நிரம்பிய எனக்கு என்ன கெதி? நல்ல காலம், "தலைதப்பினது தம்பிராசன் செயல்" நினைத்தான் ரவி.

# புளிய மரம்

கனகராசா விடிந்ததும் விடியாததுமாக வானத்துக்கும், பூமிக்கும் எகிறிக் குதித்துக் கொண்டிருந்தார். "இவன் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான். எனக்கும் ரோசம் மானம் இருக்கு. இந்தக் கந்தப்பனை உண்டு இல்லை என்று ஒரு கை பார்க்காமல் விடமாட்டன்." இதைக் கேட்டுக் கொண்டே அடுப்படிக் குள்ளிருந்து தேநீர் கோப்பையுடன் வந்த மனைவி பொன்னி "இப்ப என்னத்துக்கப்பா இப்படித் துள்ளிக் குதிக்கிறியள் இந்தாங்கோ முதல்ல இந்தத் தேத்தண்ணியக் குடியுங்கோ," என்றபடி கணவனிடம் தேநீர் கோப் பையை நீட்டினாள். கனகராசாவுக்கு இருந்த ஆத்திரத்தில் அவனே சூடாக இருந்தான். மனைவியை எரிச்சலுடன் பார்த்தபடி தேநீர்க் கோப்பையை வாங்கி மடக் மடக்கென்று வாய்க்குள் ஊற்றினான். பொன்னி மெதுவான குரலில் தொடர்ந்தாள். "ஏனப்பா அந்தப் புளியமரத்தாலதானே பெரிய



சண்டை எல்லாம். பேசாம விட்டுப் போட்டு உங்கட வேலையைப் பாருங்கோவன்." "என்னடி நீ விசர்க்கதையல்லோ கதைக்கிறாய். நாங்கள் எத்தனை வருசமாய் அந்தப் புளிய மரத்தைப் பாதுகாத்து வாறம். இடையில் ஏற்பட்ட இடம்பெயர்வால் எல்லாரும் இடம்பெயர்ந்து இந்தக் கிராமத்துக்கு வந்தம். இப்போ அவங்கள் போகச் சொன்னவுடன, இந்தப் பக்கத்து வீட்டுக் கந்தப்பன் என்ர புளியமரத்தையும் சேர்த்தெல்லோ, வேலி அடைச்சு வைச்சிருக்கிறான்." என்று ஆவேசமாகக் கூறிய கனகர் இருக்கப் பிடிக்காமல் இரு கைகளையும் பிசைந்தபடி அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்தார். பொன்னிக்குத் தனது கணவன் ஆக்ரோசத்துடன் இருப்பதைக் கண்டு எதிர்த்துப்பேச வலுவின்றி சொல்ல வந்த வார்த்தைகளை அடக்கிக் கொண்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை அவளது உறவு முறையான தம்பி சித்திரன் வியர்த்து விறுவிறுக்க பொன்னி அக்கா -என்று கூவியபடி ஓடிவந்தவனின் செய்தியைக் கேட்டு பொன்னி தலையிலடித்துக் கொண்டு அவனோடு சயிக்கிளில் ஏறி புளியமரத்தடிக்கு வந்தவள் பயந்து நடுநடுங்கிப் போனாள்.

அங்கே கனகராசாவுக்கும், கந்தனுக்கும் வாக்குவாதம் முற்றிய நிலையில் கந்தன் பெரிய கத்தியுடன் ஓடிவர, கனகராசா பொல்லுத்தடியுடன் எதிர் கொள்ள ஓடிச்சென்ற பொன்னியும் சித்திரனும் உருப்பெருத்த கனகரைப் பிடித்து இழுக்க, கந்தனை அவனது மனைவியும் வேறொருவரும் மறிக்க, எல்லோரையும் திமிறிக் கொண்டு வந்த கந்தனின் கத்தி கனகுவின் கையைப் பதம் பார்த்தது.

**எஸ்.தயா-வவுனியா**

அதைக்கண்ட அதிர்ச்சியிலிருந்து பொன்னி மீளும் முன்னரே கனகரின் பொல்லுத்தடி கந்தனின் தோளைத் தாக்கியது. இதற்கிடையில் இரண்டு பக்கமிருந்தும் இருவரும் இழுத்துச் செல்லப்பட்டு சண்டையும் ஓய்வுக்கு வந்தது.

இந்த அனர்த்தம் நடந்து ஐந்து மாதங்களின் பின் கனகராசா தனது வளவைப் பார்க்கப் போன போது அங்கே கண்ட காட்சி அந்த இரும்பு மனதை உலுக்கி எடுத்து விட்டது. ஆம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த இடத்திற்குச் சென்ற விமானத் தாக்குதலில் புளியமரம் இரண்டாகத் துண்டாடப்பட்டு யாருமற்ற அநாதை போலக் கிடந்தது. "என்னால் வீணே நீங்கள் ஏன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். நான் இல்லாது போனால் இனிமேலாவது நீங்கள் நிம்மதியாய் வாழலாம்" என்று கூறுவது போல் இருந்தது அந்தப் புளியமரம். அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த கனகராசாவின் கண்களில்கூட கண்ணீர் பனித்திருந்தன.

# சிறகொடிந்த பறவைகள்

திடீரென ஏற்பட்ட மின் வெட்டால் எங்கும் ஒரே இருள் மயம். வீட்டின் ஒரு மூலையில் குப்பி விளக்கை கொழுத்தி வைத்து விட்டு பிள்ளைகளை அணைத்தவாறு இருந்தனர் சாமித்தம்பியும் லெட்சுமியும் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்கும் வெடிச் சத்தம் காதை அடைத்தது. லெட்சுமி.. லெட்சுமி வெடிச்சத்தம் வர வர அருகில கேட்பது போல இருக்கு நாங்க இந்தப் பிள்ளைகள இங்க வச்சிருந்து என்ன செய்வது..? வா அந்த வாத்தியார் குடும்பத்தோட நாங்களும் பள்ளிக் கூடத்துக்கு போய் இருப்பம் என்றார். சாமித்தம்பி.

பிறகு தனிய நாங்க இருந்து என்னதான் செய்வது இந்தக் காலத்தில சனத்தோட சனமாக இருக்கிறதான் நல்லது. வாங்க போவோம் என சிறு கூடையில் மாத்திரம் சில பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியில் வர, சுந்தர் தனது இருதங்கைகளான மாலதி, மைதிலி இருவரையும் கையில் பிடித்தவாறு அனைவரும் அந்த இரவில் பள்ளிக் கூடத்தை அடைந்தனர்.

பொழுதும் புலர்ந்தது. ஆனால் வெடிச்சத்தம் மட்டும் ஓய்ந்த பாடில்லை. கடவுளே எப்போது எங்களை எங்க வீட்டோடு நிம்மதியாய் தூங்கவிடப் போகிறாய். எம் நாட்டு மக்களின் அவல நிலை உணர்ந்து இந்தப் போருக்கு எப்போது விடுதலை கொடுக்கப் போகிறாய் கண்கெட்ட கடவுளே கண்ணைத் திறந்து பார் என ஆண்டவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள் லெட்சுமி.

இந்த வேளையில் லெட்சுமி... லெட்சுமி... எல்லாச் சனங்களும் பக்கத்து ஊருக்குப் போறாங்களாம். வாத்தியார் குடும்பமும் போகப் போகுதாம். நாங்களும் அவர்களோட போய் அவர்கள் இருக்கிற இடத்தில நாங்களும் இருப்பம் வா என மனைவி பிள்ளைகளை அழைத்துக் கொண்டு சென்றார். தங்கள் உயிரை காக்க விரைந்து சென்ற மக்களுடன் சாமித்தம்பி குடும்பமும் சேர்ந்து அந்த ஊரை அடைந்து காளிகோவில் மடத்தில் தங்கினர்.

ம்... என்ன செய்வது சொத்து



சுகம் அனைத்தையும் இழந்து ஊர் விட்டு ஊர்வந்தாச்சி இனிமே அந்த காளியம்மாதான் வழி காட்ட வேணும் என்றவாறு மனைவி லெட்சுமியை திரும்பிப்பார்த்தார் சாமித்தம்பி. லெட்சுமி வானவெளியை வெறித்துப் பார்த்தவாறு வாசலில் அமர்ந்திருந்தாள். என்ன லெட்சுமி இன்னும் நீ தூங்கல்லியா..? என்றவரிடம் எப்பதான் நிம்மதியா தூங்க முடியும். எங்கட காலம் முடிஞ்சு போச்சி இந்தப் பிள்ளைகளின் எதிர் காலம் இனிமே எப்படி அமையப் போகுதோ ம்.. எனப் பெருமூச்சொன்றை விட்டாள் லெட்சுமி.

இந்த வேளையில் எங்கிருந்தோ எதிர்பாராமல் இவர்கள் தங்கிய இடத்துக்குள் செல்லொன்று விழுந்து வெடித்தது. அந்த இடத்திலேயே சாமித்தம்பியும், லெட்சுமியும், கடைக்குட்டி மைதிலியும் செல்லுக்கு இரையாகினர். எந்தப் பாவமும் அறியாத அப்பாவி மக்களுக்கு மின்னாமல்,

**எஸ்.குமுதா -சம்பூர்-**

முழங்காமல் ஏன் இந்தத் தண்டனையோ தெரியவில்லை. தாய், தந்தை, தங்கையை பறி கொடுத்த சுந்தரும், மாலதியும் செய்வதறியாது வாய் விட்டுக் கதறினார்கள்.

அப்பா... எங்கட உயிரை காப்பாற்ற நினைத்து ஊரை விட்டு ஓடி வந்தோம். ஆனால் செல் வடிவில் வந்த எமன் எங்க இருவரையும் விட்டுவிட்டு உங்க மூவரையும் கொண்டு சென்று விட்டான். அப்பா இனிமே எங்களுக்கு யாரப்பா இருங்காங்க... அம்மா.. நீங்களும் எங்களை தனிய தவிக்க விட்டிட்டுப் போறீங்க தங்கச்சி மாலதியை நான் என்ன செய்வேன்... என்ன சொல்லி அவளை தேற்றுவேனம்மா. திக்கு திசை தெரியாதவர்களுக்கு தெய்வந்தான் துணை என்பார்கள் அந்த தெய்வமும் எங்களை கைவிட்டு விட்டது. இனிமேல் எங்களுக்கு யாரம்மா துணை சொல்லுங்க என அழுதான் சுந்தர்.

அண்ணனின் கரத்தினை பிடித்தவாறு அண்ணா.. அண்ணா நாங்க அநாதையாகிட்டோம் அண்ணா.. அநாதையாகிட்டோம் இனிமேலும் நாங்க உயிருடன் இருக்கத்தான் வேணுமா..? என அண்ணனின் மடியில் முகம் புதைத்து அழுத தங்கை மாலதியின் முதுகை தடவிய சுந்தர் தங்கச்சி அழாதம்மா அப்பாவும், அம்மாவும் இறந்திட்டாங்க நாங்களும் இறந்து போனா எங்கட தலைமுறையே அற்றுப் போய்விடும் எங்கட அப்பா அம்மா பெயர் வழங்கவாது நாங்க வாழ்ந்துதான் ஆகணும்.

தங்கச்சி நீ கவலைப்படாத அண்ணா நான் இருக்கேன் உன்ன கலங்க விடமாட்டேன் என்னம்மா செய்வது. இரெண்டு பேரும் சிறகொடிந்த பறவை போல ஆகிட்டோம். நமக்கு மட்டுமல்ல இந்த நிலை இன்று நம் நாட்டிலே எத்தனை எத்தனையோ பிஞ்சு உள்ளங்கள் தாய், தந்தை, சகோதரர்கள் உறவினர்கள் எல்லோரையும் இழந்து ஆதரவற்ற அநாதைகளாக இருக்கின்றனர்.

நீ அழாதம்மா நான் உன்னை நல்லபடியா வாழ வைப்பேன் உன்னை கண் கலங்க விடாது காப்பாற்றுவேன் என தங்கையின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் வார்த்தை சொன்னான் சுந்தர். ஆனால் அவன் மனசு தங்களை எல்லாம் விட்டுப் பிரிந்த தாய், தந்தை தங்கையை நினைத்து ஊமையாக அழுதது.

# கண்ணாமூச்சி ரே... ரே... 16

பட்டுக்கோட்டை பிரபாகர்

வெளியே வந்து பைக்கை ஸ்டார்ட் செய்தான் பரத். பின்னால் ஏறிக்கொண்ட சுசிலா, "இப்ப எங்கே பரத்?"

மதுலதாவோட நெருக்கமாகப் பழகின நடிகை சினேகப்ரியா. காலைல போன் செஞ்சேன். ஏ.ஆர்.எஸ். கார்டன்ல ஷூட்டிங்னு செல்லி அங்கே வாங்க பேசலாம்னு சொன்னாங்க. எனவே.."

"பரத், அதுக்கு முன்னால ஒரு லிம்கா ப்ளீஸ்.."

பாதையோரம் நிறுத்தி, வாங்கி, ஸ்ட்ராவை எடுத்துப் போட்டுவிட்டுக் குடித்தாள் சுசிலா. அவள் குடித்து முடிக்கும் வரை அருகே பரப்பி வைத்து விற்றுக் கொண்டிருந்த பிளாட்பார புத்தகக் கடையில் பார்வையைப் படரவிட்டான் பரத்.

ஒரு சினிமா எக்ஸ்பிரஸ் அட்டையில் மதுலதா சிரித்தாள். 'அவள் மார்பில் கட்டம் கட்டி "மதுலதாவின் சிறப்புப் பேட்டி-உள்ளே" என்று இருக்க..

"சுசி, இங்கே வா, நேத்து முப்பது நாப்பது புத்தகம் வாங்கிட்டு வந்தியே, அதிலே இது இருந்திச்சா பாரு!"

"இல்லைங்க. சிறப்புப் பேட்டின்னு போட்ருக்கு. வாங்கிக்கலாம்.."

வாங்கி பைக்கின் பெட்டியில் போட்டுக்கொண்டு புறப்பட்டு...

"பாய்! ரெண்டு நாற்காலிகளைக் கொண்டா. அப்படியே ரெண்டு கூல்ட்ரிங்ஸ் கொண்டா" என்றாள் ஸ்நேகப்ரியா அபிநயமாய் வணக்கம் வைத்துவிட்டு.

ஃப்ளோரில் நிறைய அட்டைப் பெட்டிகளும், கள்ளிப்பெட்டிகளும் அடுக்கப்பட்டிருக்க... நாற்காலி வந்ததும் அமர்ந்து, "கிளைமாக்ஸா? சண்டைக் காட்சியா?" என்றான் பரத்.

"ஆமாங்க சார். என்ன கேக்கணும் என்னை? போலீஸ்காரங்க நிறையக் கேட்டாங்க. நிறையச் சொல்லிட்டேன்."

இதைப் பெரிய ஹாஸ்யமாக எடுத்துக் கொண்டு அவள் விலாச் சதை அதிரச் சிரித்தாள். சுசிலா பரத்தின் காதுக்குப் பக்கமாகச் சாய்ந்து, "லிஃப்ட் யுவர் டர்ட்டி ஐஸ்" என்றாள்.

"கேளுங்க.."

"செத்தது மதுலதா கிடையாது. எல்லாம் செட்டப்புன்னு சொன்னா நீங்க நம்புவீங்களா?" என்றான் பரத் அதிரடியாக.

"என்ன சார் இது இப்படி ஒரு குண்டு தூக்கிப் போடறீங்க? இதென்ன சினிமாவா, அவளுக்குப் பதிலா டூப் ஆர்ட்டிஸ்டை போட்டுக்கிறதுக்கு. சொல்லப் போனா அவகூட கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்ட்டா.."

"யாரை சொல்றீங்க?"

"மதுலதாவோட டூப் ஆர்ட்டிஸ்ட் துர்க்காவைச் சொல்றேன்..."

"ஒவ்வொருத்தருக்கும் ஒரு டூப் ஆர்ட்டிஸ்ட் இருப்பாங்களா?" என்றாள் சுசிலா.

"அப்படி இல்லை. சிலருக்குத் தான் பர்ஃபெக்டா அமையும். ரஜினிகாந்த் மாதிரியே அதே சாயல்ல நளினிகாந்த்னு ஒரு ஆக்டர் இருப்பார் பார்த்திருக்கிறீங்களா? அந்த மாதிரி நிறைய சாயல் ஒத்துவர்ற முகமா இருந்தா அவங்களை நிரந்தரமா பயன்படுத்துவாங்க. டப்பிங் வாய்ஸ்ல மோகன் சாருக்கு ஒருத்தரே நிரந்தரமா குரல் கொடுக்கிறார் இல்லையா? அது மாதிரி இவங்க இவங்களுக்கு டூப் ஆர்ட்டிஸ்ட்னு வைச்சிடுவாங்க. துர்க்காங்கிற பொண்ணு மதுலதாவோட டூப் ஆர்ட்டிஸ்ட். தூரத்திலேர்ந்து நாங்களே சமயங்களிலே ஏமாந்துடுவோம். அவ்வளவு முக ஒற்றுமை."

பரத் சுவாரசியமாய் நிமிர்ந்து அமர்ந்தான்.

"துர்க்கா இப்ப எங்கே?"

"தொழிலை நிறுத்திட்டா. எவனையோ கல்யாணம் பண்ணிக்கிட்டா."

"துர்க்காவைப் பார்க்கணுமே நாங்க..."

"புரடக்ஷன் மேனேஜரைக் கேட்டீங்கன்னா அட்ரஸ் வைச்சிருப்பார். ஏக்நாத் வீடியோ மேகசின்ல "தேவதை தேடி வந்தாள்" படத்தோட வெள்ளி விழா நிகழ்ச்சிகள் வரும். அதிலே மதுலதா என்ன செஞ்சா, முதல்ல அவளை மாதிரியே டிரெஸ் மேக்கப் செஞ்சி துர்க்காவை மேடையில ஏத்திட்டு எல்லோரையும் ஏமாத்திட்டு அப்புறம் இவ ஸ்டேஜுக்கு வந்தா. அந்த பகுதியைக் கவர் பண்ணியிருந்தாங்க..."

> "செத்தது மதுலதா இல்லைன்னு ஊர்ஜிதமா வச்சிக்கிட்டுப் பார்த்தா... ஆள் மாறாட்டம் நடந்திருக்கணும். அப்படிப் பார்த்தா செத்தது ஒரே உருவ அமைப்பில இருக்கிற துர்க்காவா இருக்கலாம்..."

"மேடம்... ஷாட் ரெடி" என்று ஆள் வர...

"எதிர்பார்க்காத சில தகவல்களைச் சொல்லியிருக்கீங்க. ரொம்ப நன்றிங்க மேடம்" என்றான் பரத்.

துர்க்காவின் விலாசம் பத்தே நிமிடத்தில் கிடைத்தது. அந்த விலாசத்தில் முப்பதே நிமிடத்தில் பைக் பறந்தது.

சின்ன ஓட்டு வீடு. பூட்டியிருந்தது!

"துர்க்கா கல்யாணமாகிப் போய்டுச்சி. அவங்கம்மா வீட்டைக் காலி பண்ணிட்டு மருமகன் வீட்டோட போய்ட்டாங்க" என்றது பக்கத்து வீடு.

"கொஞ்சதம் விபரமா சொல்லுங்க... மருமகன் யாரு? வீடு எங்கே இருக்கு?"

"சரியாத் தெரியாதுங்க. அந்தப் பையன் போட்டோ பிடிக்கிற ஆளுன்னு ஒரு தடவை சொன்னாங்க. துர்க்காவைக் கொடுமைப்படுத்தியிருக்கான். கடுதாசி எழுதி வைச்சிட்டு அவன் பின்னாடி போய் கல்யாணம் பண்ணிக்கிச்சி. ரெண்டே வாரத்துல தகராறுன்னு திரும்பிடுச்சி. அப்புறம் சமாதானம்னு போச்சி. யாரோ அது மூஞ்சியில ஆசிட்டாமே, அதை அடிச்சிட்டாங்கன்னு தகவல் வந்து கிழவி ஓடிச்சி. அப்ப பார்த்தது தான். எப்ப காலி பண்ணாங்கன்னு கூடத் தெரியாதுங்க.."

"மருமகன் பேரு தெரியுமா?"

"தெரியாதுங்க..."

இன்னும் இரண்டு வீடுகளில் விசாரிக்க... அவர்களுக்கு இந்த அளவு கூடத் தகவல்கள் தெரியவில்லை.

புறப்பட்டார்கள்.

"என்னவோ ஒரு குழப்பம் இருக்கிற மாதிரி தெரியலை?" என்றான் பரத்.

"ஆமாம் பரத். கொஞ்சம் அந்த ராகம் வீடியோஸ் கடை வாசல்ல நிப்பாட்றிங்களா? ஸ்நேகப்ரியா சொன்ன வீடியோ கேஸட் எடுத்துக்கலாம்."

"யெஸ்" என்று நிறுத்தினான்.

★★★

பரத்தின் வீட்டில் ஐந்து முறை திருப்பித்திருப்பி மதுலதா வேஷத்தில் துர்க்கா மேடையேறுகிற அந்த ஒரு காட்சியையே போட்டுப் பார்த்தார்கள்.

பரத்தின் உதட்டில் இருந்த சிகரெட்டிற்கு நெருப்பு வைத்துவிட்டு சுசிலா கேட்டாள்,

"என்ன பாஸ், என்ன நினைக்கிறீங்க?"

"நீ என்ன நினைக்கிறே சுசி?"

"செத்தது மதுலதா இல்லைன்னு ஊர்ஜிதமா வச்சிக்கிட்டுப் பார்த்தா... ஆள் மாறாட்டம் நடந்திருக்கணும். அப்படிப் பார்த்தா செத்தது ஒரே உருவ அமைப்பில இருக்கிற துர்க்காவா இருக்கலாம்..."

"இடிக்குது சுசி. துர்க்கா கல்யாணமாகிப் போயிட்டா. அவ முகத்தில ஆசிட் அடிச்சிட்டாங்க. கௌசல்யாவோட அக்கா பார்த்த பைத்தியம் துர்க்காவா இருக்கலாம்."

"அந்தப் பைத்தியம் தான் கடத்தப்பட்டது பத்திப்பேசறதும்... தன்னை மதுலதான்னு சொல்லிக்கிறதும் வினோதமாப் படலையா பரத்? வீடியோவில பார்த்தமே... துர்க்காவோட முகத்தை உன்னிப்பாப் பார்த்தா வித்தியாசம் தெரியுது. மத்தப்படி கழுத்துக்குக் கீழே பாதம் வரைக்கும் மதுலதா மாதிரியே உடல் அமைப்பு."

"சரி ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறதாகவே வச்சிக்கலாம். இதை செஞ்சது யார்? அவங்களுக்கு என்ன லாபம்?"

அது அடுத்தக்கட்டம். ஆள் மாறாட்டம் நடந்திருக்கா இல்லையான்னு முதல்ல நாம ஊர்ஜிதம் செஞ்சாகணும் பரத்."

"அந்தப் பைத்தியக்காரப் பொண்ணை சந்திச்சா பாதிக்கிணறு தாண்டிடலாம் சுசி."

"துர்க்காவைக் கண்டு பிடிச்சிட்டா மிச்ச பாதியைத் தாண்டலாம்."

"ரெண்டும் வேறவேறன்னு சொல்றியா? எனக்கென்னவோ துர்க்கா தான் பைத்தியம் ஆகிட்டான்னு படுது. ஒக்கே. துர்க்காவைக் கண்டு பிடிப்போம். நமக்கு என்ன என்ன தகவல்கள் தெரியும்?"

"துர்க்கா காதலிச்சிக் கல்யாணம் செஞ்சிக்கிட்டா, லெட்டர் எழுதி வெச்சிட்டு, புருஷன் ரெண்டே வாரத்தில கொடுமைப்படுத்தினான், தகராறாகி வீட்டுக்கு வந்தா, அப்புறம் சமாதானமாகப் போனா, நடுவில மூஞ்சில யாரோ ஆசிட் அடிச்சிட்டாங்க, அவ அம்மா மருமகன் வீட்டோட போயாச்சு, இப்ப எங்கேன்னு தெரியலை..."

"ஒரு முக்கிமான தகவலை விட்டுட்டே சுசி."


"என்ன?"

"துர்க்கா கட்டிக்கிட்டது போட்டோ பிடிக்கிற ஒருத்தனை."

"ஆமாம்."

"மதுலதா வாழ்க்கையில ஏற்கனவே ஒரு போட்டோகிராஃபர் குறுக்கிட்டான். நிர்வாண போட்டோஸ் இருக்குன்னு மிரட்டினானே, நாம கூட கேசை எடுத்துக்கலையே உன்னால, அவன் அப்புறம் என்ன செஞ்சான்?"

(கண்ணாமூச்சி தொடரும்)



# பிரதியுக்ஷாவின் கொலையில் ஆதாரங்கள் அழிப்பு



பிரதியுக்ஷா கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகப் போலீஸார் மற்றும் டாக்டர்கள் மீது அவருடைய தாயார் குற்றம் சாட்டியுள்ளார்.

நடிகை பிரதியுக்ஷாவின் கொலையை மறைக்க ஆந்திர போலீஸ் பல தகிடுதத்தங்களைச் செய்து வருவதாகத் தெரிகிறது. முதலில் தற்கொலை என்று போலீஸார் கூறினர். பிறகு தற்கொலை அல்ல கொலை என்று டாக்டர்கள் கூறினர். இதையடுத்து பிரேதப் பரிசோதனை. அதில் கொலை என்று தெரியவர, மீண்டும் பிரேதப் பரிசோதனை அதில் தற்கொலை என்று மாறியது.

பிரதியுக்ஷாவின் காதலர் சித்தார்த்த ரெட்டியின் தந்தை ஆந்திராவில் பெரிய தொழிலதிபர். அவருடைய குடும்பம் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதால் தான் போலீஸ் கொலையைத் தற்கொலை என்று மறைக்கப்பார்க்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

இது குறித்து பிரதியுக்ஷாவின் தாயார் சரோஜினிதேவி நிருபர்களிடம் கூறியதாவது:

பிரதியுக்ஷாவும் சித்தார்த்த ரெட்டியும் காதலித்து வந்தனர். ஆனால், இந்தக் காதலுக்கு சித்தார்த்த ரெட்டியின் தந்தை கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தார். எங்களுக்கும் மிரட்டல் வந்தது.

அவரது தூண்டுதலின் பேரில் தான் என் மகள் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். பிரதியுக்ஷா மருத்துவமனையில் இருந்த போது அவளைப் பார்க்க என்னை ஏன் அனுமதிக்கவில்லை? ஆனால், சித்தார்த்தைப் பார்க்க அவருடைய தந்தையை மட்டும் அனுமதித்தது ஏன்?

பிரதியுக்ஷா கொலை செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அவர் அணிந்திருந்த ஆடைகளைத் தடயவியல் துறைக்கு மருத்துவமனை நிர்வாகம் அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஆனால், ஏன் அனுப்பவில்லை?

என் மகள் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டதற்கான தடயம் அவரது ஆடையில் இருந்தது. ஆடையை அனுப்பினால் எங்கே எல்லா விஷயமும் தெரிந்து விடுமோ என்று தான் மருத்துவமனை நிர்வாகம் ஆடையை அனுப்பவில்லை.

ரெட்டியின் குடும்பத்தினர் தான் சதி செய்து என் மகளைக் கொன்றுவிட்டதோடு, உண்மையை மறைக்கப் பார்க்கிறார்கள். நான் விடமாட்டேன். கடைசிவரை போராடுவேன் என்றார் சரோஜினி தேவி.

பிரதியுக்ஷாவை சித்தார்த்த ரெட்டியின் வீட்டினரே ஆட்களை விட்டுக் கற்பழித்து, விஷம் குடிக்கச் செய்ததாகவும் இது தெரிய வந்த சித்தார்த்தும் விஷம் குடித்ததாகவும் பின்னர் இருவரும் சேர்ந்தே மருத்துவமனைக்கு வந்ததாகவும் லேட்டஸ்ட் ஹைதராபாத் தகவல் கூறுகிறது.

அவரது ஆடையில் விந்து உறைந்திருந்ததும் தெரியவந்துள்ளது. ஆனால், இந்த ஆடைகளை பாரன்சிக் லேபுக்கு மருத்துவமனை அனுப்பவில்லை.

சித்தார்த்த ரெட்டியின் பண பலமும், ஜாதி பலமும் இதனால் கிடைத்த அரசியல் பலமும் போலீஸின் கைகால்களைக் கட்டிப் போட்டுவிட்டதாகத் தெரிகிறது. சக நடிகையின் மரணத்தில் பெரும் இரகசியம் நிலவி வரும் நிலையில் தென்னிந்திய சூப்பர் டூப்பர் ஸ்டார்கள் இது குறித்து இதுவரை ஒரு அறிக்கை கூட விடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மொட்டைக் கடிதத்திற்கு இப்படியும் ஒரு தண்டனை!

ஒரு வாளியில் கால்பங்கு சாணி. கால்பங்கு மனித நரகல். இரண்டையும் தண்ணீர் ஊற்றிக் கரைத்து ஓர் இளைஞரின் தலையில் கொட்டி அபிஷேகம் செய்தால் எப்படி இருக்கும்?

நினைக்கவே கூசும் இந்த அசிங்கம் நிஜமாகவே நடந்திருக்கிறது. இப்படி ஓர் அவலத்துக்கு ஆளான அந்த இளைஞரின் பெயர் ஆறுமுகம். 'ஊர்ப் பெண்களை இழிவுபடுத்தி மொட்டைக் கடுதாசி போட்டதற்குத் தான் இந்த தண்டனை' என தங்கள் செயலை நியாயப்படுத்தி கோரஸாய்க் குரல் கொடுக்கிறது தவணை கிராமம்.

தமிழகத்தில் செங்கோட்டைக்குப் பக்கத்தில் உள்ள தவணை கிராமத்தில் சுமார் இருநூறு குடும்பங்கள். ஜமீன்தார் காலத்துக் கட்டடுப்பாடுகள் இன்னும் இங்கே ஜீவனுடன் இருக்கின்றன. மாதத்தின் கடைசி நாளில் இங்குள்ள தவசிக் கோயிலில் ஊர்க் கூட்டம் நடக்குமாம். 'இதுதான் கிராமத்தின் போலீஸ் ஸ்டேஷன். கோர்ட் எல்லாமே! ஊர் நாட்டாமை தான் நீதிபதி. அவர் கொடுப்பதுதான் தண்டனை' என்கிறார்கள்.

"போன மாசம் செங்கோட்டை தாசில்தாருக்கு ஒரு மொட்டை பெட்டிஷன் போயிருக்கு. அதில் எங்க ஊரு நாட்டாமையோட குடும்பப் பெண்களையெல்லாம் பத்தி ரொம்ப அசிங்கமா எழுதியிருக்கிறதாம். அதை நான்தான் எழுதியிருக்கிறேன்னு நாட்டாமை குடும்பத்தினர் சொல்றாங்க. அய்யா... நான் படிக்காதவன். கவுன்சிலரா இருந்ததால கையெழுத்து மட்டுமே போடத் தெரியும். என் மீது இப்படி அபாண்டமா பழியைப் போடுறாங்களே? இது நியாயமா?

போன 27ம் தேதி காலை 8 மணி இருக்கும். தீடீர்னு வீட்டு முன்னாடி ஊரே திரண்டு நிக்குது. தலையாரி முருகையா என் கையைப் புடிச்சி இழுத்து 'நீதான்லே நம்மூரு பொம்பளைங்களைப் பத்தி மொட்டை பெட்டிஷன் எழுதுனது?' என்று கோபத்தோடு கேட்டார். 'அய்யா... எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. நாம் போயி எப்படி எழுதுவேன்? வேணும்னா வாங்க, எழுதலேன்னு நம்ம குலதெய்வம் முன்னாடி குடும்பத்தோட வந்து சத்தியம் பண்றேன்'னேன். அவங்க கேக்குற மாதிரி இல்லை. 'இவங்கூட என்னலே பேச்சு. அடிங்கலேய்'னு சொன்னதுதான் தாமதம். ஊர் நாட்டாமை சண்முகவேலும், அவரது தம்பி தலைமை ஆசிரியர் ராமச்சந்திரனும் என்னைப் புடிச்சிக்கிட்டாங்க. ராமச்சந்திரனோட மனைவி ராசம்மாள் உள்ளிட்ட பொம்பளைங்க வாளியிலிலே கரைச்சு வெச்சிருந்த சாணியையும், நரகலையும் எந்தலை யிலே ஊத்துனாங்க. செருப்பாலேயும் அடிச்சாங்க. ரொம்ப அவமானமாப் போச்சு" என்கிறார் கண்ணீருடன்.

அண்டை மண்டலத்திலிருந்து

# பகைமை பாராட்டும் தமிழக அரசியல்

தமிழக அரசியலில் தனிமனிதப் பகைமை என்பதும், துவேஷம் என்பதும் திராவிட இயக்கங்களின் வழித் தோன்றலாக வளர்ந்து கொண்டே வருகிறது.

சமீபத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி அ.தி.மு.க. ஆட்சி பதவிக்கு வந்த பின்பு முதன் முறையாகச் சட்டசபைக்கு வந்தார். அப்போது அவரும், முதலமைச்சர் ஜெயலலிதாவும் பரஸ்பர வணக்கமும் தெரிவித்துக் கொள்ளவில்லை ஒருவரையொருவர் பார்ப்பதையும் த்விர்த்துக் கொண்டனர். அவர்கள் இருவரும் சபையில் ஒன்றாக அமர்ந்த அந்த சில நிமிடங்கள் கனத்த அமைதி சபையில் நிலவியது.

இருவருக்கிடையிலும் நிலவிவரும் ஆழ்ந்த பகையுணர்ச்சி இருவரையுமே இயல்பு நிலையிழக்க வைத்திருந்ததை நித்திய சாட்சியாகப் பார்த்தவர்கள் உணர முடிந்தது.

முன்னதாக அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து சட்டசபைக்கு செல்வதையே தி.மு.க. தலைவர் கருணாநிதி தவிர்த்து வந்தார். தனது சட்டமன்ற உறுப்பினர் பதவி ஏற்பைக் கூட அவர் சபாநாயகர் அறைக்கு வந்து வருகை ஏட்டில் கையெழுத்திட்டதோடு முடித்துக் கொண்டார்.

இதற்கிடையே, சட்டமன்ற உறுப்பினர் எவரும் தொடர்ந்து 60 நாட்களாக சபைக்கு வரவில்லையெனில் பதவி இழக்க நேரிடும்' என்பதை தமிழக சட்டசபை சபாநாயகர் காளிமுத்து சுட்டிக்காட்டி, "ஆகவே தி.மு.க. தலைவர் தயக்கமின்றி சபைக்கு வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். சபாநாயகர் காளிமுத்துவின் வேண்டுகோளுக்கு முரசொலியில் நீண்ட கடிதம் எழுதினார் கருணாநிதி.

'ஆரோக்கியமான அரசியல் நிலைநாட்டப்படவேண்டும் என்று தானே ஜெயலலிதா வெற்றிநாளில் அவருக்கு பிறந்த நாள் வாழ்த்து கூறினேன். ஆனால் அவரோ, "தி.மு.க.வும் அதன் தலைவர் கருணாநிதியும் இனி எழுந்து கொள்ளவே முடியாத அளவுக்கு பலத்த அடி வழங்கியுள்ளோம்" என்றார்.

பரவாயில்லை; அதையும் பொறுத்துக் கொண்டு பதவி ஏற்பு விழாவிற்கு செல்வதன் வாயிலாக இனியாவது தமிழக அரசியலில் பண்பாடு காத்திட வழிகாட்டுவோம் என்று எண்ணி அன்பழகன் சென்றார். ஆனால் அந்த விழாவில் எதிர்கட்சித் தலைவரான அன்பழகனை ஆறாம் வரிசையில் உட்கார வைத்தார்கள். இதை சுட்டிக்காடடிய என்னை "பொறாமைக்காரன், புலம்புகிறவன், காழ்ப்புணர்ச்சி கொண்டவன் என்று அர்ச்சனை செய்துவிட்டார். இந்த அர்ச்சனைகள் அவைக்கு வெளியே ஜெயலலிதாவால் செய்யப்படுவது போதாதா? அவற்றை நான் அவைக்குள்ளே அமர்ந்தும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா?

இவ்வாறு கடிதம் எழுதிய போதிலும் தொடர்ந்து 60 நாட்கள் சட்டசபைக்கு செல்லாமல் இருந்தால் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் என்பதாலேயே ஆளுநர் உரைநிகழ்த்தும் நாளன்று சட்டசபைக்கு வந்த கருணாநிதி வெறும் ஒன்பது நிமிஷமே சபையில் அமர்ந்திருந்து விட்டு எதுவும் பேசாமலேயே வெளிநடப்பு செய்துவிட்டார்.



இதற்குப் பின் சட்டமன்ற நிகழ்வுகள் முடிந்து வெளியே வந்த ஜெயலலிதா, நிருபர்களிடம் "கருணாநிதி இவ்வளவு அச்சப்படத் தேவையில்லை. தைரியமாக அவர் சட்டப் பேரவைக்கு வரலாம். யாரும் அவரை எதுவும் செய்துவிடமாட்டார்கள். முதல்வர் இருக்கையில் நான் அமர்ந்திருப்பதை ஒரு நிமிஷத்திற்கு மேல் பார்க்கச் சகிக்காமல் தான் அவர் அவையை விட்டுச் சென்றிருப்பார் போல் தெரிகிறது. ஆரோக்கியமான அரசியல் சூழலையே கருணாநிதி கெடுக்கிறார்" என்றார்.

இவ்வாறாகத் தனிமனிதப் பகைமை இருபக்கமும் அனல் வீசும் நிலையில் கருணாநிதி சட்டசபைக்கு வந்து ஜனநாயகப் பணியாற்றுவதோ, ஜெயலலிதா அவர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறும் நிலையோ எள்ளளவும் நடக்க வாய்ப்பில்லை என்றே தமிழ் நாட்டின் சாதாரணக் குடிமகன் கருதுகிறான்.

தி.மு.க வினர் ஆட்சியில் இருக்கும் போது ஜெயலலிதாவை இழிவாகப் பேசும் போக்கும், தனிப்பட்ட ரீதியில் தரக்குறைவான பெண்ணாக மக்கள் மத்தியில் ஜெயலலிதா பற்றிய சித்திரத்தை உருவாக்கும் அரசியலையும் நடாத்தினார்கள். அ.தி.மு.க. வினரும் கருணாநிதியை ஒரு பெரும் பகைவராகவும், கொடுமைக்காரராகவும் மக்கள் மத்தியில் ஆவேசமாகப் பிரச்சாரம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

1989ம் ஆண்டு கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது இதே மார்ச் மாதம் பட்ஜெட் தாக்கல் செய்யக் கருணாநிதி முற்பட்டார். அப்போது ஜெயலலிதாவும் அவரது கட்சியினரும் ஆவேசமாகப் பேசினார்கள். ஒரு அதிமுக உறுப்பினர் கருணாநிதியின் கையிலிருந்த பட்ஜெட்டைப் பிடுங்கினார். இதையடுத்து திமுகவினரும் அதிமுகவினரும் சட்டசபையில் கடுமையாக மோதிக் கொண்டனர். ஜெயலலிதா மேல் தாக்குதல் நடைபெறாவண்ணம் அன்றைய தினம் கே.கே.எஸ் ராமச்சந்திரனும், திருநாவுக்கரசும் அரணாகச் சூழ்ந்து கொண்டு தாக்குதல்களை ஏற்றனர். ஆனபோதிலும், சட்டசபைக்கு வெளியே ஜெயலலிதா தலைவிரி கோலமாக வெளியேறி, நான் மானபங்கப்படுத்தப்பட்டேன் இனி சட்டசபைக்குள் திமுக ஆட்சியிலிருக்கும் வரை நுழையமாட்டேன்" என்று கோபமாகப் பேசியதை ஒட்டு மொத்த தமிழகமும் அதிர்ச்சியோடு பார்த்தது. இந்த நிகழ்ச்சி ஜெயலலிதாவிற்குத் தமிழகத்தில் பெருமளவில் அனுதாபத்தைப் பெற்றுத்தந்தது.



இந்தச் சம்பவத்திற்குப் பின் நடந்த 91ம் ஆண்டு தேர்தலில் திமுக படுதோல்வியைத் தழுவியது. ராஜீவ் காந்தி கொலையுண்ட சம்பவம் அதிமுக காங்கிரஸ் கூட்டணியைப் பெரும் வெற்றியடைய வைத்தது. இந்தத் தேர்தலில் சென்னைத் துறைமுகம் தொகுதியில் இருந்து சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கருணாநிதி சட்டப் பேரவைக்குச் செல்ல மறுத்துத் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

அதிமுக வினர் ஜெயலலிதா மானபங்கப்படுத்தப்பட்டதற்குப் பதிலடியாகக் கருணாநிதியின் வேட்டியை உருவக்கூடும், அதனால் தான் சட்டசபைக்குச் செல்லவில்லை என்று பொது மக்கள் மத்தியில் அக்கால கட்டத்தில் பேச்சு நிலவியது. இதை உறுதிப்படுத்தும் விதமாக அன்றைய திமுக உறுப்பினர் பரிதி இளம் வழுதி சட்டசபைக்கு பேண்ட் அணிந்தே சென்றார். மறுபடியும், திமுக ஆட்சிக்கு வந்தபோது தான் பரிதி இளம் வழுதி தைரியமாக வேட்டி கட்டிக்கொண்டு சட்டசபைக்கு வந்தார்.

91 முதல் 96 வரையிலுமான அதிமுகவினர் ஆட்சிக்காலத்தில் ஜெயலலிதாவின் ஆணவமும், அகம்பாவமும், உச்சக்கட்டத்தில் இருந்தது. எடுத்தேன், கவிழ்த்தேன் என்றே தடாலடியாக எதையும் செய்வார். எதிர்க்கட்சிக்காரர்களைக் கிஞ்சித்தும் மதித்ததில்லை. இதனால் 96ல் அவர் படுதோல்வியைச் சந்தித்தார்.

## கானகன்

தற்போது ஐந்து வருட இடைவெளியின் பின் அவருடைய குணாம்சங்கள் மாறியிருக்க வாய்ப்புண்டு. முதிர்ச்சியும், பக்குவமும் பெற்றிருப்பார் என்று மக்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், அந்த எதிர்பார்ப்பு மெல்ல, மெல்லப் பொய்த்துக் கொண்டே வருகிறதோ என்ற சந்தேகமும் தமிழக மக்களுக்கு ஏற்படாமல் இல்லை.

முதலில் ஜெயலலிதா மீது நம்பிக்கையும் ஏற்பட்டது. தனது பதவி ஏற்பு நிகழ்ச்சியின் போது அமைச்சர்கள் யாரும் தன் காலில் விழக்கூடாது என்று கண்டிப்புடன் ஜெயலலிதா சொன்னார். இது ஒரு ஆரோக்கியமான அணுகுமுறையாகவே கருதப்பட்டது. அதற்கடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் அன்பழகன் ஆறாவது வரிசையில் அமர்த்தப்பட்டது தொடர்பாக ஜெயலலிதாவே தன் கைப்பட அன்பழகனுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக்கடிதம் எழுதினார். இதுவும் வரவேற்கத் தக்க மாற்றமாகவே அனைவராலும் கருதப்பட்டது. ஆனால், மன்னிப்புத் தெரிவித்த போதே பொருத்தமில்லாத- கொஞ்சமும் ஏற்றுக்கொள்ளவியலாத- காரணங்களையும் ஜெயலலிதா சேர்த்துப் பேசிய போது இவருக்கு உண்மைகளைப் பிரதியட்சமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வரவில்லை என உணரமுடிந்தது.

# மண்ணெண்ணெய் மகேஸ்வரனின் சுரண்டல்

சென்றவாரத் தொடர்ச்சி....

**பல்லாண்டுகள் முற்றுகைக்குள் கிடந்து இடர்பட்ட யாழ்ப்பாணத்து மக்கள் புதிய அரசாங்கத்தினால் மீட்சி அடைய முடியுமென எதிர்பார்த்தனர். ஆனால், பொருட்களுக்கான விலை ஏற்றமும், தட்டுப்பாடும் வாழ்க்கைச் செலவின் அபரிதமான உயர்ச்சியும் அவர்களை எதிர்கொண்டுள்ளன. இத்தகைய நெருக்கடிகளுக்கு ஆளும் கட்சியின் ஒரே பிரதிநிதியானவரே காரணகர்த்தாவாக விளங்குகிறார். அரசாங்க அமைச்சராக விளங்குபவரே கருணையற்ற பொருளாதாரச் சுரண்டலில் ஈடுபட்டுள்ள போது சிக்கல்படும் மக்கள் அரசாங்கத்திடம் விடிவு கோரி விண்ணப்பிக்க முடியாமல் தவிக்கின்றனர்.**

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள விலையேற்றமும் மகேஸ்வரன் தனது வர்த்தக மேம்பாட்டுகக்காக இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தியுள்ளார் என்று மக்களை நம்பவைக்கின்றது. மண்ணெண்ணெய் மகேஸ்வரன் இதன் மூலம் பெரும் பணத்தைத் திரட்டியுள்ளார் என்றும் நம்பப்படுகிறது.

மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவை யாழ்ப்பாணத்திற்குக் கட்டுப்பாடாகவே வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுடனேயே இந்த எரிபொருட்கள் வினியோகிக்கப்படுகின்றன. இவை மேலதிகமாக வினியோகிக்கப்பட்டால் அவை விடுதலைப் புலிகள் வசம் சேர்ந்துவிடும் என்பதனாலேயே இத்தகைய கட்டுப்பாடு. கொழும்பில் விற்பனை செய்யப்படுவதைப் பார்க்க யாழ்ப்பாணத்தில் இப் பொருட்களின் விலை அதிகமாக இருப்பதற்கு இவை கப்பல் மூலம் வடக்கிற்குக் கொண்டு செல்லப்படுவதும் ஒரு காரணமாகும்.

கள்ளச்சந்தையில் இவை முடக்கப்படுவதனாலும் தட்டுப்பாடு நிலவுகிறது. இன்று யாழ்ப்பாணத்தில் நிலவும் மின்சாரத்தட்டுப்பாட்டின் காரணமாக மக்கள் மண்ணெண்ணெயை அதிகமாகப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திற்கு ஒவ்வொரு மாதமும் 13 லட்சம் லீட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. மண்ணெண்ணெய் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வருவதில் தாமதம் ஏற்படும் போது இவற்றின் விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதிருக்கிறது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள் கொண்டுசென்ற கப்பலையும், கடற்படைக்குச் சொந்தமான காவல் படகுகளையும் விடுதலைப் புலிகள் பருத்தித்துறைக் கடலில் தாக்கியழித்ததன் பயனாகப் பெரும் மாற்றம் ஏற்பட்டது. யாழ்ப்பாண மக்களுக்கு கொண்டு செல்லப்பட்ட மண்ணெண்ணெய்க் கப்பலே இவ்வாறு தாக்கியழிக்கப்பட்டதாக உத்தியோக பூர்வ செய்திகள் கூறின. ஆனால், அரச படைகளுக்காகவே எரிபொருள் அக்கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டது என்ற வதந்தியும் எழுந்தது. இதன் பயனாகக் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த எரிபொருட்களை ஆயுதப்படையினர் கைப்பற்றிக்கொண்டனர். பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இந்த எரிபொருள் பயன்படுத்தப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது. பொதுத்தேர்தலுக்கான நடவடிக்கைகள் தொடங்கியதன் பயனாக யாழ்ப்பாணத்திற்கான எரிபொருளை அனுப்பி வைப்பதில் போதுமான அக்கறை செலுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இன்று பெற்றோல் ஒரு லீட்டர் 125 ரூபா முதல் 140 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் ஒரு லீட்டர் 75 ரூபா முதல் 85 ரூபாவாகவும், டீசல் 70 ரூபா முதல் 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் உத்தியோக பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட விலை பெற்றோல் 78 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் 24 ரூபாவாகவும், டீசல் 38 ரூபாவாகவும் இருந்தன. இவ்விலை ஏனைய பிரதேசங்களில் நிலவும் விலையை விட அதிகமாக இருந்த போதிலும் இன்று ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு இன்னும் கொடூரமானது.

யாழ்ப்பாணத்திற்குத் தேவையான அளவு மண்ணெண்ணெய் கிடைக்காத போதும் இவ்வருடம் மக்கள் பாவனைக்காக சுமார் 400,000 லீட்டர் வந்து சேர்ந்தது. இதனால், ஓரளவாவது நிலமையைச் சமாளிக்க ஏற்ற வினியோக முறை கடைப்பிடிக்கப்டாமையினால் போதிய பலன் கிட்டவில்லை. இதற்குக் காரணம் அமைச்சர் மகேஸ்வரனின் அடாவடித்தனமான அரசியல் தலையீடே!

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடும், கடுமையான விலை ஏற்றமும் நிலவுவதற்கு, அதனை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் சாதனங்கள் அரிதாக இருப்பது பிரதான காரணமாக இருந்தாலும் வேறு இரு காரணங்களும் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்லப்படும் மண்ணெண்ணெய் விநியோகத்தில் நிலவும் சிக்கலும் ஒரு காரணம் என்று தெரியவருகிறது. கூட்டுறவுக் கடைகள் மூலமாக மண்ணெண்ணெய் மக்களுக்கு விநியோகிக்கப்படுவதில்லை. அடுத்தது, இப்பொருளைத் தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதில் கட்டுப்பாடு வகுப்பதற்கு அதிகாரத்திலுள்ளவர்கள் சிரத்தை எடுக்காமை. இவ்விரு முறைகளும் அனுசரிக்கப்பட்டிருந்தால் மண்ணெண்ணெயைப் பெறுவதற்கு மக்கள் இத்தனை சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்காது.

பதிவு செய்யப்பட்ட தனியார் வர்த்தகர்களுக்கு பாகுபாடு எதுவுமில்லாமல் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட அதிகாரத் தரப்பினர் இதில் தலையிட முடியாதபடி அரசியல் செல்வாக்குப் பிரயோகிக்கப்படுகிறது. இத்தகைய அரசியல் தலையீட்டில் ரி.மகேஸ்வரனே சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக "வீரகேசரி" நாளேட்டில் பெப்ரவரி 3ம் திகதி இதழில் வெளியாகியுள்ள செய்தியில், "அமைச்சர் மகேஸ்வரனின் அரசியல் தலையீட்டின் பயனாகத் தனியார் வர்த்தக முகவர்கள் மண்ணெண்ணெயைத் தொடர்ச்சியாகப் பெற்றுவருகின்ற வேளையில் மக்களுக்கு எதுவும் கிடைப்பதில்லை" என்று குறிப்பிட்டுள்ளது. மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் ஆகியவை தனியார் வர்த்தகர்களால் மிக அதிகமான விலைக்கே விற்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் தொடரும் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டால் துயரடையும் மக்கள், பொருள் கொள்வனவு செய்வோர் கழகங்கள் மூலமாகச் சட்ட ரீதியான உதவிகளைப் பெற முயற்சிகளை மேற்கொண்டனர்.

யாழ் மாவட்ட நீதிபதி ரி.விக்னராஜா அவர்கள் இக்குழுக்களின் கோரிக்கையை ஆராய்ந்து, மண்ணெண்ணெய் வர்த்தகத்தில் தனியார் வர்த்தகர்கள் ஈடுபடலாகாதெனக் கட்டளை பிறப்பித்தார். கூட்டுறவுக்கடைகளின் மூலம் மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு விலைக்கே விற்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அத்துடன் தனிப்பட்ட வர்த்தகர்கள் மண்ணெண்ணெயை விற்பதானால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கே விற்க வேண்டும் என்றும், விற்பனையைக் கண்காணிக்க விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

நீதிபதியின் கட்டளைகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாமல் ஊழலுக்குப் பெயர்போன அதிகாரிகளின் துணையுடனும், அரசியல்வாதிகளின் அனுசரணையுடன் கறுப்புச் சந்தையில் மண்ணெண்ணெய் வர்த்தகத்தைத் தொடர்கின்றனர். பொருளின் விலையும் வகைதொகையின்றி உயர்ந்துள்ளது. நீதிமன்றத் தீர்வின் பின்னர் விலை இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. இவர்கள் ஐந்து மடங்கிற்கு மேல் இலாபமடைகிறார்கள்.

நன்றி 'சண்டே லீடர்' (தொடரும்)

# ஸ்போர்ட்ஸ்

## இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணிக்கு வெற்றி

**இ**ந்திய, சிம்பாப்வே கிரிக்கெட் அணிகளிடையே மொஹாலியில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 64 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 319 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இந்திய அணியின் தலைவர் கங்குலி 86 ஓட்டங்களையும், ராகுல் டிராவிட் 66 ஓட்டங்களையும், லக்ஷ்மன் 52 ஓட்டங்களையும், மொங்கியா 45 ஓட்டங்களையும் பெற்றனர். பிரெண்ட் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 43.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கம்பெல் 62 ஓட்டங்களையும், பிரெண்ட் 63 ஓட்டங்களையும் பெற்றனர். ஹர்பஜன்சிங், மொங்கியா ஆகிய இருவரும் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள்.

5போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியாவும், சிம்பாப்வேயும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

## பாகிஸ்தான் அணிக்குள் முரண்பாடு இல்லை என்கிறார் வக்கார்

**பா**கிஸ்தான் அணி வீரர்களிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள கருத்தினை அணித் தலைவர் வகார் யூனுஸ் மறுத்துரைத்துள்ளார்.

அணி வீரர்களிடையே ஒற்றுமையும், கட்டுக்கோப்பும் காணப்படுகிறது. சகல தெரிவுகளும் ஏகமனதாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அணி வீரர்களின் திறமை குறித்து நான் நம்பிக்கை வைத்துள்ளேன். அவர்கள் சிறந்த பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர். போட்டியொன்றில் தோல்வியென்பது ஒரு அங்கமாகும். ஆசிய இறுதியாட்டத்தில் வீரர்கள் திறமைகளை வெளிக்காட்டாதது குறித்து கவலை கொண்டுள்ளேன். என்று கூறியிருக்கிறார்.



வசீம் அக்ரம், சக்லைன் முஷ்தாக் ஆகியோர் அணியில் சேர்த்துக்கொள்ளப்படாதது குறித்து கருத்து வெளியிட்ட அவர் வசீம் சிறந்த பந்து வீச்சாளர். முஷ்தாக்கும் அவ்வாறே எனினும் அவர்கள் ஆட்டத்துக்கான தகுதி பெற்றிருக்கவில்லை. எனினும் சார்ஜா தொடருக்கும் நியூஸிலாந்து தொடருக்கும் வஸீம் பங்கேற்பார் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

**ம**ல்லாக்கப் படுத்திருந்தபடி வண்ணதாசன் கதையொன்றை வாசித்துக் கொண்டிருந்தாள் மங்கா.

ஒரு கதையை முடித்துப் புத்தகத்தை மூடினாள். அந்தக் கதைப் பெண்ணின் தனிமையும் சோகமும் அவளை அழுத்தியது.

வீட்டின் நிசப்தம் எங்கோ ஒரு வெட்டவெளித் தனிப்பாறையில் அவளை நிறுத்தியது. கூரையைப் பார்த்தாள். பெரிய சலாகைகளும், வளைகளுமாக விரிந்திருந்த அந்தக் கூரையைச் சிலகணம் பார்த்தபடி படுத்திருந்தாள்.

விளிம்புகள் தென்படாத அந்தப் பிரமாண்டமான கூரை மெல்லமெல்லக் கீழிறங்கி வந்தது.

அவள் நெஞ்சுக்குள் எதுவெதுவோ சுருண்டு பந்தாகித் தொண்டையை நோக்கி அசைந்தது.

கத்தலாம் என்று அவள் வாய் திறப்பதற்குள் பெருஞ்சத்தத்துடன் இறங்கிய கூரை அவள் மீது கவிந்து அவளை முடிக்கொண்டது.

மங்கா திடுக்கிட்டு எழுந்தாள்.

நிமிர்ந்து பார்த்தாள்.

மேலே கூரை அப்படியே இருந்தது.

அவளை முழுவதுமாக மூடிய இரும்புக்கவசமென நிசப்தம் கனத்தது.

கட்டிலை விட்டுக் கீழே இறங்கினாள்.

பாரத்தில் உடல் தள்ளாடுவதை உணர்ந்தாள்.

சிறிது நேரம் கட்டிலருகே சாய்ந்து நின்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

கண்ணாடியைப் பார்த்தாள்.

தலையும் உடையும் கலைந்திருந்தன.

அறையிலிருந்து வெளியே வந்தாள்.

மைதானம் போல கூடம்.

ஆளரவமின்றி அச்சுறுத்தியது.

சமையலறைக்குச் சென்று தண்ணீர் எடுத்துக் குடித்தாள். பாத்திரத்தை வைத்த சத்தம் பேரிடியாய்க் கேட்டது.

பாத்திரங்கள், நாற்காலிகள், பெட்டகங்கள், சுவரிலிருந்த படங்கள், திரைச்சீலைகள் யாவுமே எதுவித அசைவுமின்றி அவளையே பார்த்துக் கொண்டிருந்தன.

"ஏதாவது பேசுங்கள்" என்று கத்தவேண்டும் போலிருந்தது.

அந்த மௌனத் தாக்குதலைத் தாங்கமுடியாமல் வீட்டைவிட்டு வெளியே வந்தாள்.

தோட்டத்தின் நடுவே இருந்த

# காணாக் கட்டுடலை...

இலக்கிய நயம் தருவது

சதுரக் கல்லில் போயமர்ந்தாள்.

தென்றலின் அலைவும், குருவிகளின் கீச்கீச் சத்தமும் ஆசுவாசமளித்தன.

காதோர மயிர்க்கற்றையை அலைத்தபடி ரகசியம் பேசிச் சென்ற காற்றைப் பிடித்து முத்தமிட ஆசை கொண்டாள்.

தலையாட்டி நலம் விசாரிக்கும் மரக் கிளைகளுக்கு "ஆமாம், சந்தோஷமாயிருக்கிறேன்" என்று கத்திச் சொல்ல வேண்டும் என்று எண்ணினாள்.



அந்த மரக்கிளையில் இரண்டு புறாக்களைக் கண்டாள்.

ஒன்றையொன்று முத்தமிட்டுக் கொண்.... இல்லை.. இல்லை ஒன்றின் இறகை மற்றது தன் அலகால் கோதிவிட்டுக் கொண்டிருந்தது.

நெருங்கிச் சென்று அவற்றோடு பேச்சுக் கொடுக்க விரும்பினாள்.

பறந்து போய் விடுமோ என்று பயமாக இருந்தது.

மெல்ல ஓசையெழுப்பாமல் நடந்து சென்றாள்.

ஒரு புறாவின் இறகுகளை மற்றது தன் அலகால் விலக்கி ஆராய்ந்து கொண்டிருந்தது.

ஆராய்வது பெண் புறா என நினைத்தாள் மங்கா.

வசந்தன் உடலைப் பார்த்திருக்கிறேனா நான்...? பொல்லாத வெட்கம் என்னை எப்போது விட்டது?

அந்தக் கள்வன் மட்டும் என்னைக் கூசாமல் பார்ப்பான். வெட்கம் கெட்டவன்!

அவன் தூர இருக்கும் போது மட்டும் தான் ஆசையாகப் பார்த்துக் கொள்ள முடிகிறது.

அருகே வந்து விட்டால்... அதுவும் கள்ள நோக்கத்தோடு நெருங்கும் அவன் கண்களை நேர் நோக்கவே முடியாது.

என்னையே பார்வையால் விழுங்கியபடி நிற்பவனிடம் நான் என் கண்களைக் காட்டிக் கொடுக்க முடியாது.

என் பார்வை செல்லும் இடங்களை அவன் கண்டுபிடித்துவிட்டால் அதைவிட வேறு வினை வேண்டாம்.

சிரித்தே என்னைக் கொன்று விடுவான்.

எதுவும் கேட்கா விட்டாலும், அவன் புன்னகை ஒன்று போதாதா ஆயிரம் கேள்விகளாய் என்னைக் குத்தித்துளைக்க?

அவன் என்னைத் தழுவிக் கொள்ள வரும் வேளைகளில் எல்லாம் அவன் பாதத்து விரல்களைத் தவிர வேறென்ன நான் பார்த்திருப்பேன்?

நாணத்தின் பாரம் இமைகளை உயர்த்த விடுவதேயில்லை.

தழுவிக்கொண்டுவிட்டால் எல்லையில்லா இன்ப நிலையில் நான் என்னை, இப்புவியை மறந்து விடுவேன்.

அந்த மயக்கத்தில் கண்கள் திறப்பதெங்கே, அவனைக் காண்பதெங்கே?

கூடிமுயங்க வேண்டிய எத்தனையோ சந்தர்ப்பங்களை இந்தப் பாழும் ஊடல் வேறு வந்து கெடுத்துவிடுகிறது.

ஊடலில் முதுகைத்திருப்பி நின்றால், அவன் மேனி அழகைப் பார்ப்பதெப்படி?

அவன் மட்டும் கள்வன், என் பின்னழகை வர்ணித்தபடியே வந்து கைச்சிறைக்குள் என்னை விழ்த்திவிடுவான்.

என் உடலறிந்த அவனுடலை இந்தக் கண்கள் ஒரு போதும் அறியவில்லையே.

**புலவி பறக் கொடுப்பான் புல்லியினா னிற்பன்**
**கலவி களிமயங்கிக் காணேன் – நிலவியசீர்**
**மண்ணாளுஞ் செங்கோல் வளவனை யானிதன்றோ**
**கண்ணாரக் கண்டறியாவாறு!**

(முத்தொள்ளாயிரம்)

★ **வாராவாரம் பல்வேறு கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் உங்களுக்குத் தெரியாததுஎன்று எதுவுமில்லையா?**

பி.கே.ரவி, லிந்துல.

*"இன்னும் கண்டறியப்படாத உண்மைகளாக முன்னால் மாபெரும் சமுத்திரம் பரந்து கிடக்கிறது.நான் கடற்கரையில் கிடக்கும் சிப்பி, சோகிகளைப் பார்த்து வியந்து பெருமிதப்பட்டு ஓடியோடிப் பொறுக்கிக் கொண்டிருக்கும் சிறுவன்" இதைச் சொன்னது கூட நானல்ல, மனித சரித்திரத்திலேயே மகத்தான விஞ்ஞானியாகக் கருதப்படும் ஐஸக் நியூட்டன்.*

★ **"பெருமையடிப்பது ஒரு கலையாக இருந்தால் நாட்டில் எத்தனையோ பட்டதாரிகள் இருப்பார்கள்" என்று பண்பலை வானொலிக்காரர்கள் "பெருமையுடன் வழங்குவதாக"ப் பல நிகழ்ச்சிகளை அறிவித்து வருகிறார்கள். இது பற்றி சிந்தியா என்ன சொல்கிறீர்கள்?**

என்.மொஹமட், கண்டி.

*நல்ல காலம் நாங்கள் இத்தாலியில் இல்லை. இத்தனை வேலையில்லாப் பட்டதாரிகளை ஒரு நாடு தாங்கிக் கொள்ள முடியும் என்று தோன்றவில்லை.*

★ **சிந்தியா, நீங்கள் செய்யாத ஒரு குற்றத்திற்காக யாரிடமாவது பேச்சு வாங்கியதுண்டா?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

*பேச்சுவாங்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அப்படித் தான் நினைத்துக் கொள்கிறேன்.*

★ **உண்மையான நேசத்தை விட்டுக் கொடுக்க முடியுமா?**

எம்.புனிதன், பசறை.

*விட்டுக்கொடுப்பும் சேர்ந்தது தான் உண்மையான நேசம்.*

★ **நம் நாட்டு அரசியல்வாதிகளிடம் பணம், பதவி, நாட்டுப்பற்று இம்மூன்றில் எது அதிகம் காணப்படுகின்றது?**

ஆர்.அழகராஜ். சிறியபம்மக்கொல்ல தோட்டம்.

*பட்டி மன்றத்திற்குரிய கேள்வி. எனவே நடுவர் பாணியிலேயே சொதப்.... மன்னிக்கவும் சொல்கிறேன். நாட்டுப்பற்றை அதிகம் காட்டிக் கொண்டால் தான் பதவி. பதவி கிடைத்தால் தான் பணம். பணம் அதிகம் சேர்ந்து விட்டால் பழையபடி நாட்டுப்பற்றைக் காட்டிக் கொள்ள ஆரம்பித்து.... ஐயையோ அழகராஜ்! என்னை வெளியே எடுத்து விடுங்களேன்.*

★ **ஏனைய தமிழ்க் கட்சிகள் ஆயுதங்களை முழுதாகக் கொடுத்துவிடுமா?**

ம.விஜயரூபன், மட்டக்களப்பு.

*நீங்கள் உங்களுக்குச் சரியானது என்று படும் ஒரு கருத்தைச் சொல்லப் பாதுகாப்பில்லை என்று உணரும் போது, ஆயுதங்களை வைத்திருக்கும் ஒரு தரப்பிற்குச் சாதகமாகவே உங்கள் கருத்தை நீங்கள் வெளிப்படுத்த முடியும். ஒரு நாட்டில் எதிர் எதிரான இரண்டு தரப்பினர் மட்டும் ஆயுதங்கள் வைத்திருக்க முடியும் என்று நாம் ஒப்புக்கொள்ளும் நிலையில், ஏனைய அபிப்பிராயங்கள் எல்லாம் விழுங்கப்பட்டு விடுகின்றன. இரு தரப்பும் சண்டை செய்யும் போதாவது ஏனைய தரப்பு அபிப்பிராயங்களுக்கு சிறிதளவு இடமிருக்கும். ஆனால், சண்டையினால் இந்த நாட்டைச் சின்னாபின்னமாக்கிய வல்லவர்கள் சமாதானம் பேசுகிறோம் என்று காட்டிக்கொண்டால் மற்றவர்கள் மூச்சுக் கூட விடமுடியாது. பத்திரிகையாளர் ஒருவர் இதை "சமாதான பாசிசம்" என்று வர்ணித்திருக்கிறார்.*

*சரி.. விஜயரூபன்! நீங்கள் கேட்டது மற்றத் தமிழ்க்குழுக்களின் ஆயுத ஒப்படைப்புப் பற்றி, அந்தத் தலைவர்களில் ஒருவர் சொன்னார்: நாங்கள் பாதுகாப்பாய் அரசியல் செய்ய முடியும் என்று உணர்ந்தால் நாங்களாகவே ஆயுதங்களைக் கொடுத்துவிடலாம், பிரச்சனையில்லை. மாறாக, எங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று அரசு கருதினால் அவர்களாக எங்களிடமிருந்து பறித்துக்கொள்ளட்டும். கொடுத்தவர்களுக்கு எடுக்கவும் உரிமை இருக்கிறது" என்றார் விரக்தியாக. எனக்கென்னவோ, இந்தத் தமிழ்க்கட்சிகளை எல்லாம் அரசின் துணைப்படைகள் தான் என்று முத்திரை குத்திவிட்டதே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் புலிகள் சாதித்த வெற்றி என்று தோன்றுகிறது.*

★ **சம்பவம் கேட்டால் சரித்திரம் சொல்பவர்களைப் பற்றி?**

பி.விக்னேஸ்வரன், ஹட்டன்.

*அந்த வடிவேலுகளைப் பார்த்திபனிடம் தான் அனுப்ப வேண்டும்.*



★ **ரோஜாக்கூட்டம் எப்படி?**

ஐ.ஆர்.ஐராஜப்ரியா, கொட்டகலை.

*செயற்கைத் தன்மைகள் மிகுந்த காட்சிகளோடு ஒரு சென்டிமென்ட் கவிதை.*

★ **மோகம் முப்பது நாள் என்கிறார்களே, அது என்ன?**

சோ. சங்கரலிங்கம், திருப்பழுகாமம்.

சிந்தியா பதில்கள்

*இப்படி என்ன என்ன என்று சுந்தராம்பாள் மாதிரிக் கேட்டுக் கொண்டே போனீர்கள் என்றால் நான் நொந்து நூலாகிப் போவேன். இதற்கு முயற்சி செய்கிறேன். Honey Month என்று ஆங்கிலத்திலும் ஒரு பழைய வார்த்தை இருக்கிறது. "கல்யாணத்தின் பின் ஒரு மாதம் தான் தேன் போல் இனிக்கும்" என்ற அர்த்தத்தில் அது சொல்லப்படுகிறது. தமிழில் "மோ", "மு"-மோனையும் சரியாக அமைந்து விட்டது. மற்றப்படி எதிலிருந்து எது வந்தது என்பதை வேறு யாராவது தான் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும். ஒரு வேளை உலகம் முழுவதிலும் அனுபவமும், அதை வெளிப்படுத்தும் விதமும் ஒன்றுபோலத்தான் இருக்கிறதோ என்னவோ!*

★ **சிந்தியா, உங்களை நான் உயிருக்குயிராய் காதலிக்கிறேன். அதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?**

கை.ரமேஷ், பொத்துவில் நகர்.

*உயிரெல்லாம் வேண்டாம். உங்கள் செலவில் ஒரு ஜெனரேட்டர் வாங்கித் தரமுடியுமா?*

ன்னர் விக்கிரமாதித்தன் வழமை போல் தனது நாடாறு மாத ஆட்சியை மிகச் சிறப்பாக நடாத்தி முடிப்பதற்கு சில தினங்களே பாக்கியிருந்தன. எனவே, தனது காடாறு மாத காலத்தை எங்கு சென்று கழிக்கலாமென்று அமைச்சர் பட்டியுடன் ஆலோசித்தார். இருவரும் வேதாளத்தை அழைத்து அதனுடைய கருத்தையும் கேட்க முடிவெடுத்தனர்.

வேதாளத்திடம் விக்கிரமாதித்த மன்னரின் அடுத்த காடாறு மாதத்தை நல்ல முறையில் செலவிட ஏற்றவோரிடம் பற்றிய விபரத்தை அறிந்து கூறும்படி கேட்டனர். வேதாளம் சிலநாழிகை அவகாசம் கேட்டு, மறைந்து நின்று தனது அதிநுட்ப சக்தியால் நல்லதோரிடத்தைத் தெரிவு செய்து மன்னர் விக்கிரமாதித்தனிடமும், அமைச்சர் பட்டியிடமும் தனது முடிவைக் கூறியது.

# மன்னாதி மன்னன் 96

உஜ்ஜயினி மாகாளி பட்டணத்திலிருந்து வடக்கே ஆயிரம் காத தூரத்திற்கப்பால் உள்ள வாரணாபுரி என்ற இடத்திற்கு மன்னர் இம்முறை செல்வதே பொருத்தமாக இருக்கும் என்று வேதாளம் கூறியது. அந்த நகரத்தில் என்ன விசேஷம் இருக்கிறது என்று அரசரும், அமைச்சரும் வேதாளத்திடம் வினவினர்.

## வாரணாபுரி மர்மம்



## இராஜகுமாரன்

"வாரணாபுரி நகரம் சோபை இழந்து போய்க் காணப்படுகிறது. அந் நகரத்தில் வாழும் மக்கள் அனைவரும் சூரிய உதயம் கண்டதும் உயிரற்றுப் பிணம் போலாகி விடுகின்றனர். சூரியன் மறைந்ததும் அவர்களனைவரும் பேய்களைப் போல் எழுந்து நடமாடுகின்றனர். ஆகவே, இதற்கான காரணத்தைக் கண்டறிந்து அந்த நகர மக்கள் முன்பு போல் சீராகவும், சிறப்பாகவும் வாழ வழி தேடுவது அரசருக்கு ஒரு பெரும் கடமையாக இருக்கும். ஆகவே, அத்தகைய ஓரிடத்திற்கு மன்னர் விக்கிரமாதித்தன் போவதே சாலச்சிறந்தது," என்று வேதாளம் தனது கருத்தைத் தெரிவித்தது.

இக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர் பட்டி வேதாளத்திடம் "இத்தகைய துர்ப்பாக்கியமான நிலை வாரணாபுரி மக்களுக்கு ஏற்பட்டதற்கான காரணத்தை அறியலாமா?" என்று வினவினார். அந்த நகரத்திற்கு அத்தகைய நிலை ஏற்படுவதற்கு அந்த நகரத்தை ஆட்சி புரியும் அரசன் கோயில்சொரூபனே காரணம் என்று கூறிய வேதாளம், அதற்குரிய சம்பவத்தையும் விளக்கியது.

மன்னர் கோயில்சொரூபன் வாரணாபுரி நகரத்தை நீதி வழுவாமல் ஆட்சி புரிந்து வந்தான். இருப்பினும் அவனுடைய கர்ம வினையின் பயனாக ஒரு சாபத்திற்குள் வீழ வேண்டிய நிலையேற்பட்டது.

ஒருதடவை வேட்டைக்குச் சென்ற மன்னன் கோயில்சொரூபன், நாள் முழுவதும் வேட்டையாடிக் களைத்துப் போய் வனத்தின் நடுவேயிருந்த குளத்தில் இறங்கி தாகத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்பினான். அவன் நீரருந்தச் சென்ற குளத்தில் ஒரழகிய மங்கை நீராடிக் கொண்டிருந்தாள். அவளுடைய அழகைக் கண்டு மன்னன் மதிமயங்கினான். எப்படியாவது அவளை அடைந்துவிட வேண்டுமென்று துடிதுடித்தான். அவளருகே நெருங்கிச் சென்றான்.

தன்னை நோக்கி ஓர் ஆடவன் நெருங்கி வருவதைக் கண்டு அந்தப் பெண் தன்னருகில் வரவேண்டாம் என்று பலமாகக் கூச்சலிட்டு எச்சரித்தாள். இருப்பினும் மன்னன் கோயில்சொரூபன் அப்பெண்ணுடைய எச்சரிக்கையை செவிமடுக்காது மென்மேலும் அவளை நெருங்கிக் கொண்டே போனான். அப் பெண் குளத்திலிருந்து வெளியேறி கரையில் வந்து அங்கிருந்த அவளுடைய உடைகளை மாற்றுவதற்கு முன்னரே மன்னனும் அவள் பின்னே ஓடிச்சென்று அவளை அணைப்பதற்கு இரு கைகளையும் நீட்டிக்கொண்டே போனான்.

அந்தப் பெண் அரசனை நோக்கி "அடே துன்மார்க்கனே! நாட்டையும், நாட்டு மக்களையும் நல்வழிப்படுத்த வேண்டிய ஓர் அரசனான நீ இத்தகைய காமாந்தகாரனாக இருக்கிறாயே; பல தடவைகள் எச்சரித்தும் நீ என்னை அணுகி வந்தாய். எனவே உனக்கும் உன் நாட்டு மக்களுக்கும் நான் சாபமிடுகிறேன். இப்போதிருந்தே நீயும் உன் நாட்டு மக்களும் பகல் நேரத்தில் உயிரிழந்து விடுவீர்கள். மாலையானதும் நீங்கள் எல்லோருமே பேய்களாக மாறி சஞ்சரிப்பீர்கள்!" என்று சாபமிட்டாள். வேதாளம் இக்கதையைக் கூறி முடித்ததும் மன்னர் விக்கிரமாதித்தன் "இத்தகைய பெரிய சாபத்தைக் கொடுக்கக்கூடிய அந்தப் பெண் யார்?" என்று வினவினார்.

இவ்வினாவிற்குப் பதிலளித்த வேதாளம் "மாமன்னரே! அந்தப் பெண் அந்த வனத்தில் பல வருடங்களாகத் தவமியற்றிவரும் ஒரு மாமுனிவரின் மனைவியாவாள். அவள் கற்பில் சிறந்தவள் என்பதனால் அவளுடைய சாபம் உடனடியாகவே பலித்துவிட்டது" என்று கூறிமுடித்தது.

வேதாளம் சிபார்சு செய்ததைப் போல் இத்தகைய விசித்திரமான நகரத்திற்கே போய்விடலாம் என்று மன்னர் விக்கிரமாதித்தன் தீர்மானித்தார். காடாறு மாதம் செல்ல வேண்டிய நாள் வந்ததும், அமைச்சர் பட்டியிடம் இராஜ்ஜிய பாரத்தை ஒப்படைத்துவிட்டு தனது இஷ்ட தெய்வமான காளிகாம்பாளைச் சென்று வணங்கி, ஆசி பெற்று வேதாளத்தின் உதவியுடன் வாரணாபுரியை நோக்கிச் சென்றார்.

நகரின் எல்லையிலிருந்த ஒரு சத்திரத்தில் அன்றிரவுப் பொழுதைக் கழிக்க எண்ணிய மன்னர், சத்திரத்தை நடத்தி வரும் எவரையும் அங்கு காணாமல், எவராவது தென்படுவார்களா? என்று பார்த்தார். ஆனால், அவருடைய பார்வைக்கு எந்த மனிதரும் தென்படவில்லை. ஆவியுருவில் அலைந்து கொண்டிருந்த ஒருவரை நிறுத்தி "இங்கு இரவு தங்குவதற்கு வசதி கிடைக்குமா?" என்று வினவினார். அந்த ஆவி கூறிய எந்த வார்த்தையும் மன்னர் விக்கிரமாதித்தனுக்குப் புரியவில்லை. அது செய்த சைகைகளை வைத்துக்கொண்டு அங்கேயே இரவுப் பொழுதைக் கழிக்கலாம் என்று கருதி வேதாளத்தைத் துணைக்கு வைத்துக்கொண்டு ஓய்வெடுத்தார்.

அடுத்த நாட்காலையில் மன்னர் கண் விழித்துப் பார்த்த போது அந்தச் சத்திரத்தில் பலர் உயிரற்று வீழ்ந்து கிடந்ததைக் கண்டார். நகரத்தைச் சுற்றி வந்த போதும் அவரால் எந்த மனிதரையும் உயிருடன் காணமுடியவில்லை.

வேதாளத்திடம் மன்னர், "இந்த நகரத்தில் ஒருவர் தானும் உயிருடன் இருக்க மாட்டார்களா?" என்று கேட்டார்.

"ஏனில்லாமல், ஒரேயொருவர் மட்டும் இந்த நகரத்தில் உயிருடன் வாழும் நிலையிலுள்ளார். ஆனால், அவர் தற்பொழுது இந்த நகரத்திலில்லை," என்று கூறிய வேதாளத்திடம், "அந்த மனிதர் யார்? தற்போது எங்கேயிருக்கிறார்?" என்று கேட்டார்.

வேதாளம் அந்த நகரத்தில் உயிருடன் வாழக்கூடியவரைப் பற்றி இவ்வாறு கூறியது: "மாமன்னரே! அரசன் கோயில்சொரூபனின் ஒரே மகளான சற்குணவதி என்பவள் தான் உயிருடன் வாழும் தகுதியுடையவர். இவள் தன்னுடைய பூர்வஜென்ம புண்ணியத்தினாலும், அதி உயர்ந்த தெய்வ பக்தியினாலும் முனிவர் பத்தினி அளித்த சாபத்திற்கு உட்படாது உயிருடன் வாழ்ந்து வரக்கூடியவர். இருப்பினும், சற்குணவதிக்கும் ஒரு தோஷம் இருந்தது. வெகு தூரத்திற்கப்பாலுள்ள ஒரு மலையில் வாழும் அரக்கன் ஒருவன் சற்குணவதியை அபகரித்துச் சென்றுவிட்டான். தன்னுடைய மலைக் குகையில் அவளை அடைத்து வைத்து துன்புறுத்தி வருகிறான். தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி அவளை இம்சிக்கிறான்.

சற்குணவதியோ தான் மூன்று வருடங்கள் ஒரு நோன்பு நோற்றுவருவதால் அந்த மூன்றாண்டுகளுக்குள் எவரையும் திருமணம் முடிக்கலாகாது. அவ்வாறு மணம் முடித்தால் மணமான அன்றே அவளுடைய கணவன் தலைசிதறி இறந்துவிடுவான் என்று தந்திரமாக சாக்குச் சொல்லிக் கொண்டு அரக்கனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டு வாழ்கிறாள்."

இவ்வாறு வேதாளம் சற்குணவதியின் கதையைக் கூறியது.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி



நோட்டீஸ்பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்று மில்லை

*-காதில பூ கந்தசாமி-*

கனாக் கண்டிருக்கிறிலோ எப்பவேனும் நீங்கள்? கண்டாலும் நான் அடிச்சுச் சொல்லுவன் நான் கண்ட கனா மட்டும் கண்டிருக்க மாட்டியல். மேல்லோகத்துக்குப் போயிட்டுவந்ததாக் கனாக் கண்டிருக்கிறியலோ? அங்க எங்கட அரசியல் தலைவர்மாரையெல்லாம் கண்டு கதைச்சிருக்கிறியலோ? என்ர கடவுளே! எல்லாரும் அந்தப்படியே எப்பனும் மாறாமல் இருக்கினம். என்னக் கண்ட உடன சுத்தி வளைச்சு நிண்டெல்லே புதினம் கேக்கினம்! நான் புதினம் சொல்லியே களைச்சுப் போனன். அமிரண்ணை ஒரு பக்கம், அவரோட யோகேஸ் அண்ணை அவருக்குத் தேத்தண்ணி வாத்துக் குடுத்துக்கொண்டு சரோஜினி அக்கா, பக்கத்தில மேயர் சிவபாலன், தங்கதுரை எம்.பி, ஆலாலசுந்தரம் எம்.பி, தர்மலிங்கம் எம்.பி, மதிமுகராசா எண்டு ஒரு கூட்டமே நிக்குது. மற்றப் பக்கம் பாத்தால் டெலோ தலைவர் சிறீ சபாரத்தினம், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா, புளொட் தலைவர் உமா மகேஸ்வரன், உபதலைவர் மாணிக்க தாஸன், இன்னொருபக்கத்தில எங்கட மாமனிதன் குமார் பொன்னம்பலம். தமிழீழத்துக்குக் குரல் குடுத்தவையில முக்கால்வாசிப்பேர் அங்கதான் இப்ப இருக்கினம். எல்லாரும் இப்ப என்ன நடக்குது நாட்டில, தாங்கள் வழி நடத்தினபடி தங்கட தங்கட கட்சிகளிண்ட அடுத்தடுத்த தலைவர்கள் கொண்டு நடத்தினமோ எண்டு கேட்டுத் துளைக்கேக் என்ன பதிலச் சொல்லவெண்டுதான் நான் திகைச்சிட்டன். பின்னப் பாத்திட்டுச் சொன்னன், சரி நான் வேனுமெண்டால் என்ர உடம்ப ஒரு பதினைஞ்சு நிமிஷம் கடனாத் தாறன். ஒவ்வொருத்தராய்ப் போய் நீங்களே நாட்டு நடப்பப் பாத்துக்கொண்டு உங்களுக்கு வேண்டியவையைச் சந்திச்சுக் கொண்டு வாங்கோ எண்டு. அமிர் அண்ணைதான் முதலில வெளிக்கிட்டவர். அவர் நேர கொழும்பில இருக்கிற கூட்டணிக் கட்சி அலுவலகத்துக்குப் போய் அங்க தங்களுக்க ஏதோ பிணக்குப்பட்டுக்கொண்டிருந்த கூட்டணி எம்பிமாருக்கு முன்னால போய் நிண்டு கேட்டார்.

அமிர்: என்னப்பா சண்டை, என்னை யாரெண்டு தெரியேல்லையே?

<u>சங்கரி:</u> நாங்கள் எம்பிமாரெண்டது உமக்கு முதலில தெரியுமே, எப்பிடிச் சொல்லாமல் கொள்ளாமல் உள்ளுக்கு வந்தீர்?

அமிர் திகைச்சுப்போனார், தன்னை அவ்வளவு சீக்கிரம் மறந்திட்டாங்களா எண்டு. பிறகுதான் தான் இப்ப காதில பூ கந்தசாமியிண்ட உருவத்தில இருக்கிறத உணர்ந்து, இப்பிடி மாறுவேஷத்தில கதை குடுத்துப் பாத்தால் என்ன எண்டு யோசிச்சார்.

<u>அமிர்:</u> ஓமையா, ஓமையா, நீங்கள் மக்களால தெரிவு செய்யப்பட்ட படியால மக்களைச் சந்திக்கிறதில்லையிண்டது எனக்குத் தெரியும். எதுக்கும் ஒரு சில விஷயங்கள ஞாபகப் படுத்திட்டுப் போகலாமெண்டு வந்தனான்.

<u>சங்கரி:</u> என்ன எங்கட வயசப் பாத்திட்டு அறளை பேந்தவையெண்டு மட்டுக்கட்டிட்டீரோ? எனக்கு வரலாற்றில மூலை முடுக்கெல்லாம் பாடம். நீர் படிப்பிக்க வராதயும் கண்டீரோ.

<u>அமிர்:</u> அதில்லையய்யா, அமிர்தலிங்கம் எண்ட ஒருத்தர் உங்கட கட்சியில இருந்தவரெல்லே, ஞபகமிருக்கே?

<u>சங்கரி:</u> அவன்பாவி எப்பயோ மேல போட்டான், என்னத்துக்கு இப்ப அவன்ட கதைய இழுக்கிறீர்? அண்ணை போனதாலதான் எனக்குத் திண்ணை காலியானதெண்டிருக்க நீர் பழங்கதையக் கிண்ட நிக்கிறீர்.

<u>அமிர்:</u> அதில்லையையா, கிட்டடியில நடந்த பொதுத்தேர்தலில, ஆளுக்கால் செல்வநாயகத்திண்ட பெயரப்போட்டுப் படத்தப் போட்டு விளம்பரம் செய்தியல், ஒரு நன்றிக்குத்தன்னும் உங்கட தலைவரெண்டிருந்த அமிர்தலிங்கத்திண்ட பெயர உச்சரிக்கேல்லையே?

<u>ரவிராஜ்:</u> ஐசே, இங்கால வாரும் உம்மை ஒருக்கா வடிவாப் பாக்க வேணும். நீர் எதிர்க் கட்சிக்காரரிண்ட தூண்டுதலில பேசிறீர் போல கிடக்கு. அவற்றை பெயரை உச்சரிச்சரிக்கிறதோ? நாங்கள் பார்லிமண்டுக்குப் போற வழியத் தேடினால் நீர் பரலோகம் போகவல்லோ வழி சொல்லுறீர்.

<u>அமிர்:</u> சரி, அவரைச் சொல்லிப் பிரச்சாரம் செய்ய வேண்டாம், கடைசி உங்கட கட்சிக்காக உயிர்நீத்த மனிசனெண்ட வகையில அவற்ற சாவுக்கு யார் காரணமெண்டாவது சொல்லியிருக்கலாம் தானே? அதில கூடநிண்டு சூடுபட்ட சிவசிதம்பரம் ஐயாதன்னும் சாட்சி சொல்லாமல் கைகழுவிப்போட்டாரே?

<u>சிவசிதம்பரம்:</u> தம்பி தம்பி, என்னை இழுக்காதயும் உந்த வம்பில. சூடுகண்ட பூனை அடுப்படியை நாடாதெண்டுவாங்கள். நான் அந்தப்படியே இந்தியாவுக்குப் போய் ஐஞ்ஞாதவாசகமிருந்திட்டு இப்பதான் தள்ளாத வயதில திரும்பி வந்திருக்கிறன். இன்னொருக்கால் வம்பில மாட்டிவிடாதயும்.

<u>அமிர்:</u> எல்லாம் சரி, இப்ப அமிரண்ணையப்போல ஒருவர் எங்கட தமிழ்ச் சனத்துக்கெண்டு இருந்திருந்தால் பாராளுமன்றத்தில எங்கட பிரச்சினையை நல்ல நக்கல் நளினங்களோட பிட்டுப் பிட்டுப் பேசியிருப்பாரெல்லே? அதுக்குத்தான்னும் ஆள் இல்லாமல்போனது ஒரு குறையாத் தெரியேல்லையே உங்களுக்கு?

<u>ரவிராஜ்:</u> இப்ப பேசிற காலமில்லை கண்டீரோ. இப்ப செய்யிற காலம். அவை செயலில காட்டுவினம். கை தட்டுறது ஒண்டுதான் எங்கட வேலை. நீர் இங்கயிருந்து கனக்கப் பேசிக்கொண்டிருக்கிறீர் நல்லதுக்கில்லையெண்டு நினைக்கிறன். நீர் யாரெண்டது உள்ளபடி சொல்லும், எங்க உம்மட ஐடென்ரிக்காட்டைக் காட்டும் பாப்பம்.

<u>அமிர்:</u> எங்கட இடத்தில ஐடென்ரிக்காட்டொண்டும் குடுக்கிறதில்லை.

(ரவிராஜ் பயந்துபோய்) தம்பி..., சொறி அண்ணை நீங்கள் எங்க, அங்கால இருந்து வந்த நீங்களோ, ஏன் சொல்லேல்லை முன்னமே. சும்மா பகிடிக்கு நாங்கள் ஏதும் பிழையா நடக்கிறமோவெண்டு அறிய வந்திருக்கிறியல்போல. இருங்கோவன்.

<u>அமிர்:</u> நான் அங்கால இருந்து வரேல்லை, மேல்லோகத்தில இருந்து அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமேதான் வேற உருவத்தில வந்திருக்கிறன். நல்லது. இது எந்த மட்டில என்னை மதிக்கிறியலெண்டு தெரிஞ்சுகொண்டன். இது எனக்கு மட்டுமில்லை. பின்னால வரப்போற எல்லாருக்கும்தான் நடக்கப்போகுது. ஏதோ, பிழைப்புக்கு அரசியல் செய்தாலும் பிழையான அரசியலைச் செய்யாதேங்கோவெண்டு மட்டும் சொல்லிட்டுப் போறன். எனக்கு நேரமாயிட்டுது.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

17.03.2002 தொடங்கி 23.03.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

| | | | |
|---|---|---|---|
| கும்பம் | - புதன் | மீனம் | - வெள்ளி, சூரியன் |
| மேடம் | - செவ்வாய் | இடபம் | - இராகு, சனி |
| மிதுனம் | - வியாழன் | விருட்சிகம் | - கேது. |

சந்திரன் துலாம் விருச்சிகம் தனு மகரம் இராசியில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்கஷ்டங்கள் தீரும். தொழில் உயர்ச்சியும், பணவரவும் உண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் எதிலும் விழிப்புடன் செயற்படுவது இலாபம் தரும்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 5

**இடபம்:** (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) குடும்பத்தில் பிரச்சனை, எதிர் பாராச் செலவு. பண முடங்கல் உண்டாகும். உத்தியோகத் தர்கள் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 6

**மிதுனம்:** (மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) கொடுக்கல் வாங்கல் சிக்கல், தொழிலில் மறைமுக எதிர்ப்பு. பொருள்வரவு குன்றல் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த உயர்வுகள் தடைப்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 4

**கர்க்கடகம்:** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) செய் தொழில் நன்மை.பொருள் வரவு, பெரியோர் உதவி, வெளியிடப் பிரயாணம் உண்டு. உத்தியோகத்தர்கள் விழிப்பாகச் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் மறையும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 7

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) மனக்குறைகள் நீங்கும். பெரியோர் உதவியுண்டு. பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் சில பிரச்சனைகளுக்கு ஆளாவார். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 2

**கன்னி:** (உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) பெரியோர் பகை, வீண் சிரமங்கள் உண்டாகும். தேக சுகம் பாதிப்புறும். பொருள்வரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் உள்ளோர் கவனமுடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் வந்து சேரும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 3

**துலாம்:** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழிலில் பிரச்சனை, வீண் செலவு, குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை, அன்னியரால் தொல்லையுண்டாகும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 6

**விருட்சிகம்:** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை,) தொழில் கஷ்டங்கள் தீரும், பணவரவு வந்து சேரும். பெரியோர் உதவி உண்டாகும். உத்தியோகத்தில் சிலருக்கு மறைமுக எதிரிகளால் பிரச்சனை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் மாற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 5

**தனு:** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்,) மனதில் கவலைகள் தோன்றும், பெரியோர் பகை கொள்வர், பொருள் வரவு தாமதமடையும். உத்தியோகத்தில் சிலருக்கு மாற்றம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் நன்னிலை அடைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 1


**மகரம்:** (உத்தராடத்து பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை,) பெரியோர் உதவி,தொழில் சிறப்பு, அன்னியர் சகவாசம், கௌரவக் குறைவு உண்டாகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்,
அதிஸ்ட இல.: 3

**கும்பம்:** (அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் சிறப்புடன் பொருள் வரவுண்டாகும். பெரியோர் உதவியுண்டு. வீண் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 4

**மீனம்:** (பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி, ரேவதி,) மனக்குறை நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெரியோர் உதவுவர். பொருள் வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஒத்தாசை கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 5

Regd. as a News Paper at the G.P.O.






# உயர்ந்தவர்கள்

உலகிலேயே உயரமான குடிமக்கள் இந்த கோத்திரத்தினர் தான். இவர்கள் "டிங்கா" எனும் கோத்திரவாசிகள். சூடான் மற்றும் சவானா, நைல்நதியை அண்டிய கரையோரங்களில் வாழும் இந்த பழங்குடி சமூகத்தினரின் ஆண்கள் சராசரியாக 6.5 அடி உயரத்திற்கும், பெண்கள் 5.10 அடி உயரத்திற்கும் வளரக் கூடியவர்கள். இதேயளவு உயரமாக வளரும் டுட்சி இனத்தைச் சேர்ந்த ஒரு கோத்திரத்தினர் ருவாண்டா, புருண்டி ஆகிய மத்திய ஆபிரிக்க நாடுகளிலும் வாழுகின்றனர். மிகப் பழமைவாத பழக்கவழக்கங்களைக் கொண்ட இவர்களில் ஆண்கள்

# நீள் கூந்தல்



பெண்களின் கூந்தல் சராசரியளவில் இரண்டரை முதல் மூன்றடி நீளத்துடன் அதன் வளர்ச்சியை நிறுத்திக் கொள்கிறது. இங்கே நீங்கள் காண்பது உலகிலுள்ள மிக நீளமான கூந்தலைத் தான். இது 12 அடி 8 அங்குலத்திற்கு வளர்ந்திருக்கிறது. இவர் டயான் என்ற சுவீடன் பெண்மணியாவார். இறுதியாக 1983ம் ஆண்டு 5 அடி நீளமாக இருந்த கூந்தலை வெட்டியெறிந்த பின்னரும் இப்படி உலக சாதனையளவில் வளர்ந்திருக்கிறது. சாதாரண நேரங்களில் இதனை வாரிப் பராமரிக்க பல மணிநேர பிரயத்தனத்தில் ஈடுபடும் இவர் தூங்கும் போது உயர்த்திக் கட்டி இரண்டு பின்களைப் பயன்படுத்தி தலை முடியைத் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்துக் கொள்கிறாராம்.



# சவால்

உலக பொலீஸ்காரனான அமெரிக்காவிற்குத் தற்போது சவாலாக இருக்கும் ஒரே இராணுவம் மக்கள் சீனக் குடியரசின் ஆயுதப் படைகள் தான். 1992ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி சீன ஆயுதப்படைகளில் 30 லட்சத்து 30 ஆயிரம் பேர் இருந்தனர். இந்த எண்ணிக்கை தற்போது மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. உண்மையான தொகையைச் சொல்ல சீன அரசு தயக்கம் காட்டுகிறது. இதற்கு முன்னர் உலகில் மிகப் பெரிய ஆயுதப் படையை சோவியத் குடியரசு கொண்டிருந்தது. அதில் 34 லட்சம் பேர் இருந்தனர். சோவியத் யூனியன் உடைந்ததன் பின் இத்தகைய பாரிய இராணுவ ஆளணியை எந்தவொரு நாட்டினாலும் கட்டியெழுப்ப முடியவில்லை. எனினும், அமெரிக்காவின் எச்சரிக்கையையும் மீறி சீனா தனது ஆயுதப் படைகளைத் தொடர்ச்சியாக விஸ்தரித்துப் பயிற்சிகளையும் வழங்கிவருகிறது.

# சுயஸ்



* சுயஸ் கால்வாயை திறந்துவைப்பதற்காக அதனை நிருமானித்த பொறியியலாளர் 5 வருடங்களாக தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்தார்.

மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் உலகின் மிகப்பெரிய கால்வாய்களிலொன்றான சுயெஸ் கால்வாயைத் தான் படத்தில் காண்கிறீர்கள். 100 மைல் நீளமான இந்தக் கால்வாய் 450 அடி அகலமும் 50 அடி ஆழமும் கொண்டது. இந்தக் கால்வாய் அமைக்கப்படுவதற்கு முன்னர் லண்டனிலிருந்து பம்பாய் துறைமுகத்திற்கு ஆபிரிக்காவைச் சுற்றியே கப்பல்கள் செல்ல வேண்டியிருந்தன. இது 4563 மைல் மேலதிக தூரமாகும்.

இந்தக் கால்வாய் அமைப்புத் திட்டம் உண்மையில் கி.மு 522ல் வரையப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், நிர்மாணப் பணிகள் 1859ல் பிரான்ஸைச் சேர்ந்த ஃபேர்டினண்ட் டி லெசப்ஸ் என்பவரால் முன்னெடுக்கப்பட்டது. இதன் அமைப்புப் பணிகளின் போது சுமார் 120,000 அடிமைகள் உயிரிழந்தனர். இந்தத் திட்டத்தை ஆரம்பத்தில் கடுமையாக எதிர்த்த பிரிட்டனே இன்று சுயெஸ் கால்வாயினால் அதிக லாபம் பெறும் நாடு என்பது குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பீ.டி. அச்சகத்தில் மார்ச் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.